www.padippakam.com

# பலி



தேவிபாரதி

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

MC . LOJAIHU
RINGFANKEN
500 HOIST

**சமர்ப்பணம்**

*அப்பாவுக்கும்*
*அம்மாவுக்கும்*
*தோழர்*
*அய். சுப்பிரமணிக்கும்*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பலி

சிறுகதைகள்

## தேவிபாரதி

MC. LOGANADAN
RINGPARKEN 8.ST TH
7500 HOLSTEBRO

காலம் பதிப்பகம்
87, பாரதி தெரு I
ஈரோடு - 638 004.

படிப்பகம்

www.padippakam.com

பலி
சிறுகதைத் தொகுதி
ஆசிரியர் : தேவிபாரதி
வெளியிட்டோர் :
காலம் பதிப்பகம்
87 பாரதி தெரு I
ஈரோடு - 638 004.
அச்சிட்டோர் :
அலைகள் அச்சகம்
36, தெற்குச் சிவன்கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
அட்டை ஓவியம் : ஜே. உலகநாதன்
முதல் பதிப்பு : 1993 மார்ச்
விலை. ரூ. 25-00
உரிமை : ஆசிரியருக்கு.

Bali
A Collection of Short Stories by Devibarathi
Copy right: Devibarathi
Published by:
Kaalam Publications
87, Barathi Street - I
Erode - 638 004.
Cover Painting: J. Ulaganathan
Printed at:
Alaigal Achagam
36, South Sivan koil Street,
Kodambakkam,
Madras- 600 024
First Edition: March 1993.
Price : Rs. 25-00

படிப்பகம்

www.padippakam.com

நன்றி:

கதைகளை வெளியிட்ட
விழிப்பு
சிகரம்
தாமரை
தீபம்
மன ஓசை
அன்னம் விடு தூது
சுபமங்களா
நிகழ்
ஆகிய இதழ்களுக்கும்,

இலக்கியத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்த
தி. மதுசூதனனுக்கும்,

என் அகவுலகைச் செப்பனிட்டு என் ஆளுமையை விசாலப்படுத்திய பா. செயப்பிரகாசம், பூமணி, வண்ணநிலவன், பிரபஞ்சன், பொன்னீலன் ஆகியோருக்கும்,

தங்கள் பரிசுத்தமான அன்பால் என்னைப் பராமரித்து வரும் சிதம்பரன், கி. அ. சண்முகம் ஆகியோருக்கும், என் துன்பங்களில் துணை நின்ற சுரேஷ் குமாருக்கும், கதிர்வேலுக்கும்,

இத் தொகுப்பு வெளி வருவதற்கான
முழு ஒத்துழைப்பையும் வழங்கிய தோழர்கள்
குறிஞ்சிக்கும், சிவஞானத்துக்கும்,

www.padippakam.com



மிகக்குறுகிய காலத்தில் நேர்த்தியாக
அச்சுப்பணிகளைச் செய்துதவிய
அலைகள் அச்சகத்தாருக்கும்,

என் கதைகளைப் படியெடுக்க உதவிய
என் கிராமத்துக்காரர் ரவிச்சந்திரனுக்கும்,
மற்றும் என் மீதும் என் படைப்புகள் மீதும்

ஈடுபாடு கொண்டு ஒத்துழைத்த எல்லா
நண்பர்களுக்கும் குறிப்பாக ஈரோடு 'பார்வை'
அமைப்பின் தோழர்களுக்கும்
இந்தச் சந்தர்ப்பத்தில்
நன்றி செலுத்துகிறேன்.

—தேவிபாரதி

ஈரோடு
27-02-93.

படிப்பகம்

www.padippakam.com



# தனக்குள் ஒரு கலைஞனைக் கண்டறிந்த தேவிபாரதி

வாழ்வுக்குக் கலை அவசியம். கலை இல்லாமல் மனித வாழ்க்கை இயக்கம் பெற முடியாது. முழுமையடைய முடியாது. கதையும், கவிதையும் கலையின் நுட்பமான வெளிப்பாடுகள். படைப்புத் திறன் மனிதனின் இயல்பு, குணம், செயல் படைப்புத் திறனற்ற மனிதன் இல்லை. வாழ்க்கையனுபவத்தின் கலைவடிவமான வெளியீடே படைப்பு. வாழ்வின் இயக்கத்துக்கான அச்சாணி, சாட்சியம் இந்தப் படைப்புத்திறன். இறுகிப் போன பழைய அனுபவங்களை உடைத்து, புதிய அனுபவங்களை உள்வாங்கிக் கொள்வதற்கான ஆற்றலை, வாழ்வைப் புதிய கோணத்தில் பார்க்கவும், தன்னைப் புனரமைத்துக் கொள்ளவுமான ஆற்றலை, மனிதனுக்கு வழங்குவது இந்தப் படைப்புத் திறன்.

நவீன அறிவியல் தொழில் நுட்பத்தையும், அதை மையப்படுத்தி இயங்கும் அரசியலதிகாரத்தையும் ஆதார மாகக் கொண்டுள்ள இன்றைய வாழ்க்கைச் சூழல் — அதன் நகரபயமாக்கப்பட்ட தன்மை — அழுகலைப் பெருக்கி, வாழ்வை, அதன் படைப்புத் திறனை நாசமாக்கி வருகிறது. மனித உறவுகளைச் சிதைத்து வாழ்வைத்

படிப்பகம்

www.padippakam.com



துன்பமயமாக்கி வருகிறது. மனிதப் பண்புகளையும், வாழ்க்கை மரபுகளையும் மாசுபடுத்தி வருகிறது. மனித னுக்குள் இடைவெளிகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தி மனித உறவுகளைப் பகைமைக்குள்ளாக்கி வருகிறது.

தொழிலாளியின் துன்பங்களைப் பொருட்படுத்தாத இயந்திர மனம் கொண்ட முதலாளியும், மனைவியின் ஆர்வங்களை, ஏக்கங்களைப் புரிந்து கொள்ள முடியாத, புரிந்தாலும் அலற்றோடு ஒத்துப் போக வாய்ப்பற்ற கணவனும், பெற்ற குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசை களைக் கூட நிறைவேற்ற முடியாத தகப்பனும், தனது அறிவியல் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாமல், அந்தப் பொறுப்புகளே சுமையாகிப் போன ஆசிரியரும் போலீஸ்காரரும் இந்த மனிதர்கள் இன்றைய வரலாற்றுச் சூழலால் உருவாக்கப்பட்டவர்கள்.

நிதர்சன வாழ்வின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்து நிற்பதற்காக, தன்மானமற்று ஒடுங்க வேண்டிய அவலமே மனித வாழ்வு. வாழ்வின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மீறி தன்மானத்தோடு எழுந்து நிற்கவும் முற்படுகிறான் மனிதன். ஆனால் அடுத்த அடி விழும்போது நொறுங்கு கிறான். தன்னை ஒடுக்கிக் கொண்ட மனிதனுக்குள் எப்போதேனும் இயக்கம் நடைபெறலாம். மனிதன் இன்னும் முற்றாகத் தன்னை இழந்து விட வில்லை. மரபு களை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு, சிக்கல்களினூ டாக உறவுகளைப் பேணிக்கொண்டு, நெருக்கடிகளுக் கிடையேயும் குடும்ப அமைப்பைப் பாதுகாத்துக் கொண்டு பிடிவாதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான் மனிதன். இந்தச் சூழலை உள்வாங்கிக் கொண்டு, ஆழமும் விரிவும் கொண்ட படைப்புகளைத் தந்த எதார்த்தவாத எழுத் தாளர்கள் தமிழில் நிறையவே இருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஓர் உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியாது. எதார்த்தவாதம் வாழ்வின் அவலமான நிகழ் காலத்தைத் தாண்டி இயக்கம் கொள்வதில்லை. இருப்பதை விவரிப்பதில் - வர்ணப்பதில், கோட்பாடு சார்ந்தும், படைப்புத் திறனற்ற கற்பனை சார்ந்தும் வெளியேற்றுவதில் சிக்குண்டு போய் விட்டது எதார்த்த வாதம். வாழ்வின் பன்முகத் தன்மையை, பட்டியலிட்டு வகைப்படுத்துவதன் வாயிலாக, அதன் இயக்கத்தைக் குறுக்கி அடைக்கப் பார்க்கிறது. தமது கோட்பாடுகளுக்கும், நலன்களுக்கும் ஒத்த வகையில் வாழ்வின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தி ஒடுக்க முற்படும் சக்திகளுக்குத் தம்மைப் பலியிட்டுக் கொண்ட எழுத்தாளர்களின் திரிந்த வெளிப்பாடுகளாக, இன்றைய எதார்த்தவாதப் படைப்புகள் வர்ணங்களை இழந்து வெளிறிப் போய்விட்டன.

மனித வாழ்வின் இயக்கம் எதார்த்தத்தைத் தாண்டிய கனவுகளைத் தனது அச்சாணியாகக் கொண்டது. அதனால் தான் மனிதனால் கனவுகளிலிருந்து விடுபட முடியவில்லை. கனவை முன் வைத்து எதார்த்தத்தோடு போராடுகிறான் மனிதன். இருண்ட எதார்த்தத்துக்கும், ஒளி மிகுந்த கனவுகளுக்குமிடையேயான தத்தளிப்பே நவீன இலக்கியம். இது வாழ்வின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் (வர்க்கங்கள், தத்துவங்கள், கோட்பாடுகள், கட்சிகள் போன்ற) சக்திகளிடமிருந்து வாழ்வின் இயக்கத்தை மீட்பதற்காகப் போராடுகிறது. வாழ்வின் பன்முகத் தன்மையை, அதன் எல்லாப் பரிமாணங்களோடும், ஆழமாகவும் நுட்பமாகவும் பரிசீலிக்க முற்படுகிறது நவீன இலக்கியம். வாழ்வின் ஆழத்துக்குள் மூழ்கி, அதன் இருளிலிருந்தும் ஒளியிலிருந்தும், குளிர்ச்சியிலிருந்தும் வெப்பத்திலிருந்தும் உயிர்ப் பெற்று இயங்குகிறது கலை. எதார்த்தவாதத்திலிருந்து துவங்கி, நவீன இலக்கியத்துக்கு வளர்ந்து வந்துள்ள தேவிபாரதி என்னும்

www.padippakam.com



கலைஞனிடம், இந்த இரண்டு போக்குகளினதுமான தடயங்களைக் காணலாம்.

* * *

இந்தத் தொகுப்பில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள பதினைந்து கதைகளில் முதல் எட்டுக் கதைகளை எதார்த்தவாதப் போக்கின் சாட்சியங்களாகக் காண லாம். வறுமை பற்றியும், வறுமையோடு ஒட்டிப் பிறந்த நோய்கள் பற்றியும் இக்கதைகள் பேசுகின்றன. காலி யான வயிற்றுக்கும் தன்மானம் கோரும் மனசுக்கு மிடையே சிக்கி வதைபடும் கணவன் (பாதி), கல்வி ஏற்படுத்தின கனவுகளுக்கும் பிரமிப்புகளுக்கும், நிஜவாழ் வின் இயலாமைக்குமிடையே தத்தளிக்கும் ஆறாங்கிளாஸ் ராஜேஸ்வரி (ராஜா இல்லாத புத்தகம்), தனது அறவியல் உணர்வுகளுடன் முரண்பட்டு தனது மாணவனிடம் கடன் கேட்டு நிற்கிற, பிள்ளைகளின் மதிய உணவைத் திருடுகிற வாத்தியார் (ஓதாமல் ஒரு நாளும்), சமூகத்தை எதிர்த்துக் காதல் கல்யாணம் செய்து கொண்டு, சமூகத் தால் கைவிடப்பட்டு, நிராதரவான நிலையில் தன் மீதும், மனைவி மீதும், குழந்தை மீதும் வெறுப்புக் கொண்டு, 'யார் செத்தாலும் யாரும் அனாதையாகிப் போய்விட மாட்டார்கள்' என்று குமுறலுடன் எதார்த்தத்தை ஒப்புக் கொள்ளும் கணேசன் (சின்ன மீன்கள்) மனைவியின் சினிமா ஆசையென்னும் அவளுக்கான சுதந்திர உணர்வை தனது உள்ளூறையான ஆணாதிக்க உணர்வால் சிதைத்து விட்டு உள்ளூறுத்துக்குள்ளாகிப் போகும் ராஜசேகரன் (மீறல்), இருத்தலின் சவால்களை எதிர்கொண்டு, வாழ்வை விடாப்பிடியாகப் பற்றிச் செல்லும் சடையனும் அவன் கூட்டாளிகளும் (ஜீவிதம்)

www.padippakam.com



— இந்தக் கதைகளெல்லாம் ஏற்கனவே சொல்லப்பட்டு விட்டவை. தேவிபாரதிக்கு முன்பும், அவருக்குப் பின்பும் பல ரால்— பலமுறையும் சொல்லப்பட்ட இந்தக் கதைகளுக்காக இந்தத் தொகுப்பைப் படிக்க வேண்டியதில்லை. நைந்து போன மனிதன், அழும் குழந்தை, அவதிப்படும் பெண், நம்பிக்கையிழந்த தொழிலாளி, வறுமை, வறுமை, வறுமை. இன்னும் எத்தனை காலத்துக்கு, எத்தனை விதங்களில் இவற்றைப் படிக்க வேண்டியிருக்கும்? எழுத்தாளன் பயிற்சிக்காக எழுதிக் கொள்கிற கதைகள் இவை. தான் வாழும் சமூகச் சூழலை, அதன் நசிவைச் சித்தரிக்க வேண்டுமென்ற உணர்வோடு எழுதப்பட்ட கதைகள் இவை. இந்தக் கதைகளில் எழுத்தாளர் தேவிபாரதி அரட்டையடிக்கவில்லை. பிரச்சார வெறியேறிக் கத்தவில்லை. இந்த அம்சம் பாராட்டக் கூடியது ஆசிரியரின் எதிர்கால வளர்ச்சியின் மீது திட்டவட்டமான நம்பிக்கையை ஏற்படுத்த முடியாத கதைகள் இவை. எனினும் அடுத்தடுத்த கதைகளில், நம்பிக்கையூட்டும் அம்சங்கள் தென்படத் தொடங்குகின்றன.

தேவிபாரதியின் இறுகிப் போன எதார்த்த தளத்திலிருந்து, பிய்த்துக் கொண்டு வெளிவர முற்படும் மனிதர்களை இனிக் காணலாம். தமிழிலக்கியத்திற்கு வெளியிலிருந்து ஏற்பட்ட தாக்கத்தின் விளைவுகளாக இக் கதைகளைப் புரிந்து கொள்ள முடியும். அசலான வாழ்வை விடவும் கனவின் பிரதிகளோடு தன்னைப் பிணைத்துக் கொண்ட மனிதனை எதார்த்தத்துக்கும் கனவுகளுக்குமிடையே தத்தளிக்கும் மனிதனை இனிக் காணலாம்.

இந்த வகையில் மீதி ஒரு அசலான அனுபவத்தின் கலா பூர்வமான வெளிப்பாடு. தந்தையை இழந்து நிற்கிற மகனிடம் துக்கங் கேட்டு வருகிற மனிதர்களின் முகங்களில், முகமூடிகளாய்க் கவிந்திருக்கிற எதார்த்த உலகம், எதார்த்த உலகத்தை மறுத்து, அதற்கு அப்பால் இயங்கு

www.padippakam.com



கிற சுப்பிரமணியம் சாரின் தத்தளிப்பு, அப்பாவின் வியர்வை படிந்த வேட்டிகளையும், அப்பா விட்டுச் சென்ற கடிதங்களையும் பத்திரப்படுத்திக் கொள்வதன் மூலம், எதார்த்த உலகின் இழப்புகளைக் கனவுகளால் ஈடுசெய்யும் மகன் — அனுபவம் மிக நேர்மையாகக் கலைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபோலவே கருவி கதையும். தன் மனைவியை நேசிப்பது போலவே தன் மெஷினையும் நேசிக்கிற தங்கராசு டெய்லர், வாழ்வின் பற்சக்கரங்களால் நசுக்கப்பட்டு, வாழ்வையும் மனைவி யையும் உதற முடியாமல் மெஷினை விற்றுக் குடிக்கிற போது எதார்த்த உலகம் அவனைக் கைவிட்டுப் போகிறது. கனவுகளையும் இழந்து, பிடிப்பற்றுத் தத்தளிக்கிறான் தங்கராசு.

எதார்த்த தளத்திலிருந்து தம்மை முற்றிலுமாக விடுவித் துக் கொண்ட கதைகளாக மிருக வேட்டை, அழைப்பு, அழிவு, பலி ஆகிய கதைகளைச் சொல்லலாம். சுந்தர ராமசாமியின் நிழல் மிருக வேட்டை, அழைப்பு ஆகிய கதைகளின் மீது அழுத்தமாகக் கவிந்திருக்கிறது. இந்த நிழலைத் தாண்டியும் தேவிபாரதியின் தனிப்பட்ட படைப் புலகத்தை இக்கதைகளில் காணலாம்.

சமூக அக்கறையுடன் குரங்குகளை அழித்தொழிக்கிறான் வீராசாமி. குரங்குகளின் நினைவாக அனுமார் கோயில் கட்டுகிறார் சபாபதி முதலியார். பகைச் சக்திகளுக் கிடையேயான முரண்பாடுகளும், மோதல்களும், அதன் குரூரமான வெளிப்பாடுகளும்—குரங்குகளும், வீராச்சாமி யும், முதலியாரும் குறியீடுகள். எதார்த்த தளத்தில் வைத்து இந்தக் கதையை வாசிக்க முடியுமென்றாலும், குறியீட்டு தளத்தில் நிறைவான அர்த்தம் கொள்ளும் கதை இது.

அழிவு கதை தேவிபாரதியின் வீச்சான வெளிப்பாடு. இன்றைய சமூகச் சூழலில், அநேகமாக எல்லாக் குடும்பங்

படிப்பகம்

www.padippakam.com



களிலும் கணவன் மனைவி உறவு நெருக்கடிக்குள்ளாகி யிருக்கிறது. மனைவி கணவனைக் கொன்று விடுவதற்கான காரணங்கள் திரண்டிருக்கின்றன. தனக்குள் இதை மூடி மறைத்துக் கொள்ளும் கணவன் தன்னளவில் சிதறுண்டு போகிறான். இந்தச் சிதறுண்ட நிலைமையிலிருந்து மீளும் வழி தெரியாமல், அதனுள்ளேயே மூழ்கி அழிந்து விட விரும்புகிறான். மனைவிக்குக் கொலை இச்சையைத் தூண்டும் கத்தியை வாங்கி வந்து அவள் பார்வையில் படுமாறு வைக்கிறான். இனி வாசகன் கதைக்குள்ளாக அல்லது கதையைத் தாண்டி, தன் திசை வழியைத் தேடிச் செல்ல வேண்டும். வாசகனுக்குள் இருக்கும் கணவன் இனிப் பதற்றம் கொள்வான். தனக்கென வகுத்துக் கொண்ட ரசனையை இனி, வாசகன் உடைத்துக்கொள்ள வேண்டும். வாசகனின் உடைமையான சுய அனுபவம் என்ற திரைச்சீலை இங்கு நார் நாராகக் கிழிக்கப்பப்படு கிறது. பெட்ரோல்ட் பிரக்டின் அந்நியமாதல் என்ற நாடக உத்தி இங்கு சிறுகதைக்குள் இயங்குகிறது. அகலிகை என்ற ஆதிக் கதை இன்றைய சமூகத்திலும் எடுத்துள்ள இன்னொரு பிறப்பென இக்கதையைக் குறிப் பிடலாம்.

கடைசிக் கதை பலி. வாசகனை இன்னும் தீவிரமாகத் தாக்குவது. அவனது அனுபவ உலகின் உள்ளுறை வெப்பத்தைக் கிளறி விடக் கூடியது. அவன் தாழ்த்தப் பட்டவன், அவள் பிராமணப் பெண். அவன் தந்தையும் பாட்டனாரும், அவளுடைய தந்தை/பாட்டனாரின் மலத் தொட்டியைச் சுத்தம் செய்தவர்கள். இந்தப் பின்னணியில் சந்தித்துக் கொள்கிறார்கள், அவள் வேசி யாக, அவன் வாடிக்கையாளனாக. கதை சொல்வதற்கு ஆசிரியர் பயன்படுத்தியிருக்கும் உத்தி, தமிழ்ச் சிறு கதைக்கு மிகவும் புதியது, ஆற்றல் மிகுந்தது. வாசகன் ஒரே சமயத்தில் பல முனைகளில் இடித்து உடைத்துக்

கொள்கிறான். இவனுடைய எல்லாக் கேள்விகளுக்கும் அவள் ஒரே பதிலைத்தான் சொல்கிறாள். இங்கு யார் யாரை பலி கொள்கிறார்கள்? பலி கொள்ளத்தான் முடியுமா? வரலாற்றின் போக்கிற்குள் நுழைந்து விட்ட இந்த அநீதியை இனி எப்படிக் களைவது? வாசகனின் கையில் தரப்படுகிறது நியாயத் தராசு. தராசுத் தட்டுகள் இங்கு மேலும் கீழுமாய் அலங்கோலமாக அல்லாடுகின்றன, தள்ளாடுகின்றன. ரசகனின் உணர்வுலகையும், கருத்துலகையும் ஒரே சமயத்தில் பிழிந்தெடுக்கும் கலையின் அற்புதச் செயல்பாட்டை இங்கு காண்கிறோம்.

அழிவு, பலி என்ற இரு கதைகளுக்குள்ளும் இயங்குவது நவீனத்துவம் என்ற கலைப் பார்வை மிருக வேட்டை, அழைப்பு போன்ற கதைகளின் மூலமாக நுழைந்த நவீனத்துவம், இவ்விரு கதைகளிலும் தன்னை முழுமையாய் நிறுவிக் கொள்கிறது. இக்கதைகளின் இயக்கத்தைச் சுழற்சி என்று அழைக்கலாம். நிதானமான வரிசைக் கிரமமான இயக்கம் இக்கதைகளில் இல்லை. வாசகனுக்குள் சுழற்சியாய்க் குடைந்து செல்கிறது. வாசகனின் நிம்மதியைக் குலைக்கிறது. ரசனையைக் காட்டிலும் தனக்குள் இறுகிப் போன மனிதனைக் கலைத்துப் போடுவதாகிய புதுவகைப்பட்ட அனுபவத்திற்குள் வாசகன் இழுத்துச் செல்லப்படுகிறான். வலுவானதென்ற நம்பிக்கையோடு இது வரையிலும் நின்று கொண்டிருக்கிற தளம், காலடியில் விரிசலுறுகிறது. ஆட்டம் காண்கிறது. இனி தனக்குள் எதைத்தேடி, எதைக் கண்டறிந்து, எதை உருவாக்கித் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளப் போகிறான் மனிதன்? ஆசிரியனை வாசகன் எதிர்பார்த்தால், அவன் இங்கு வெளியில் இல்லை. வாசகன் இனி தனக்குள் தனக்கான ஆசிரியரைத் தேட வேண்டும்.

www.padippakam.com



கலை, எதார்த்தத்திலிருந்து தன்னை முற்றாகத் துண்டித்துக் கொள்ள முடியாது. எதார்த்தத்தை உடைத்து, அதன் இடிபாடுகளுக்குள் தன்னை நிறுவிக் கொள்வது கலை. நெடுங்கால வரலாற்றுப் போக்கில், மனிதனுக்குள் வளர்ந்து வந்துள்ள ஆற்றல் — மனிதனை மனிதனாக்கும் ஆற்றல் கலை. ஒரு ஆற்றல் மிக்க கலைஞனாக தேவிபாரதி உருவாகி வருகிறார். ஒரு பத்தாண்டு காலப் பயணத்தில், இறுதியாய் தனக்குள் ஒரு கலைஞனைக் கண்டறிந்துள்ளார் தேவிபாரதி. அந்த வரலாற்றுக்கு இந்தத் தொகுதி ஒரு சான்று. கலைஞனைத் தனக்குள் கண்டறிந்த வரலாற்றின் தொடக்கமாய் எதார்த்தவாதக் கதைகள் நிற்கின்றன. சுண்ணாம்பையும், மணலையும் சேர்த்து உயர் வெப்ப நிலையில் கண்ணாடியாக்குகிற கலையை இத்தொகுப்பின் மூலம் நம் முன் வைக்கிறார் தேவிபாரதி.

**கோவை** — **ஞானி**

**17-02-93**

www.padippakam.com

# உள்ளே...

| | | பக்க எண் |
|---|---|---|
| 1 | ராஜா இல்லாத புத்தகம் | 17 |
| 2. | ஓதாமல் ஒரு நாளும் | 26 |
| 3. | வாலில்லாத நரிகள் | 35 |
| 4. | தேய்வு | 49 |
| 5. | இலக்கு | 57 |
| 6. | மீறல் | 69 |
| 7. | பாதி | 81 |
| 8. | சின்ன மீன்கள் | 90 |
| 9. | ஜீவிதம் | 98 |
| 10. | மீதி | 111 |
| 11. | கருவி | 122 |
| 12. | மிருக வேட்டை | 137 |
| 13. | அழைப்பு | 152 |
| 14. | அழிவு | 156 |
| 15. | பனி | 175 |

படிப்பகம்

www.padippakam.com

# ராஜா இல்லாத புத்தகம்

**சொ**ன்னபடி அய்யா புத்தகம் வாங்கிக் கொண்டு வந்தார். சிரிப்பும் முகமுமாக அய்யா வீட்டுக்குள் நுழை கையிலே அய்யாவின் கையில் புத்தகங்களிருப்பது தெரிந்தது. தூக்குப் போகாணியை இடக்கையிலும் புத்த கங்களை வலக்கையிலுமாகக் கொண்டு வந்திருந்தார். புத்தகம் சரஸ்வதி, அதை வலக்கையில் தான் பிடிக்கணும் என்பார். தப்பித் தவறி ஏதாவது புத்தகத்தை மிதித்து விட்டால் தொட்டு கும்பிட்டுக் கன்னத்தில் போட்டுக் கொள்வார். (படிப்பு வாசனையே இல்லையென்றாலும் அய்யாவுக்குப் புத்தகங்களைத் தெய்வமாகப் பூஜிக்கத் தெரியும்.)

''மகேசு இங்கபாரு உனக்கு புத்தகம்...''

மகேஸ்வரிக்கு ரொம்ப சந்தோஷமாகப் போய் விட்டது. இதற்கென்றுதான் பத்து நாட்களாய் சண்டை யும் கண்ணீரும்.

புத்தகங்களுடன் அவளருகே உட்கார்ந்துக் கொண்டு தலையை கோதிவிட்டார். மோவாயைத் தொட்டு நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டார். பிறர் மேலுள்ள பிரியத்தை அய்யா இப்படித்தான் காட்டுவார். சில சமயங்களில் அம்மாவின் நெற்றியில் கூட இப்படித்தான் அய்யா முத்தமிடுவார். ஒரு தடவை மகேஸ்வரியை

ப—2

www.padippakam.com



பக்கத்தில் வைத்துக் கொண்டே அய்யா, அம்மாவின் நெற்றியில் முத்தமிட்டார். அதற்குப் பிறகு ரொம்ப நாட்கள் மூன்று பேருமே அதை நினைத்து நினைத்து வெட்கமும் சந்தோஷமும் கொண்டார்கள்.

எத்தனையோ நாட்களுக்கப்புறம் அந்தக் காட்சி மகேஸ்வரிக்கு ஞாபகத்துக்கு வந்தது.

'சந்தோஷத்தைப் பாரு மகேசுக் குட்டிக்கு... இனி மகேசுக் குட்டி நல்லாப் படிச்சு... மொதல் மார்க் வாங்கிக் காட்டணும்'

புத்தகங்கள் அவள் கைக்குப் போகுமுன்பே அம்மாவின் கைகள் அவற்றை அப்பாவிடமிருந்து வாங்கிக் கொண்டன.

''புதுசா வாங்கினீங்களா... என்ன வெலையாச்சு...?''

''மொதலாளி பையன் இந்தத் தடவை ஏழாங்கிளாஸ் போயிட்டான். நம்ம மகேசு இந்த வருஷம் ஆறாங் கிளாஸ். அதான் மொதலாளிகிட்டச் சொல்லி வைச் சிருந்தேன். அவரும் பழைய புத்தகக்காரனுக்குப் போடாம ஞாபகமா எடுத்து வச்சிருந்து குடுத்தாரு... மொதலாளின்னா அவரு மொதலாளி...''

''புத்தகம் பழசுதானா...?''

வருஷா வருஷம் பழைய புத்தகங்களைத்தான் வாங்கித் தருகிறார். கேட்டதற்கு ஆறாங் கிளாஸ் போனால் புதுப் புத்தகம் வாங்கித் தருவதாய்ச் சொல்லியிருந்தார். இந்த வருஷம் மகேஸ்வரி ஆறாங் கிளாஸ்தானா? அய்யா வுக்கு மறந்து போயிற்றா? பக்கங்கள் கிழிந்து புத்தகங் களை அய்யாவின் கையிலிருந்து வாங்கிப் பார்த்த வுடனேயே மகேஸ்வரிக்கு முகஞ் சுருங்கிப்போயிற்று. எல்லாப் புத்தகங்களையும் விட சரித்திரப் புத்தகந்தான் மகேஸ்வரிக்குப் பிடிக்காமல் போயிற்று.

படிப்பகம்

www.padippakam.com



எல்லாப் புத்தகங்களையும்விட சரித்திரப் புத்தகந் தான் அழகாயிருக்கும். அட்டையில் கலர் கலராகப் படங்கள் போட்டிருக்கும். உள்ளே ராஜாக்களுடைய படங்கள், காந்தித் தாத்தா, நேருமாமா, எம். ஜி. ஆர். படங்களெல்லாம் இருக்கும். எல்லாப் படங்களிலும் மகேஸ்வரிக்குப் பிடித்தமான படம் ராஜராஜ சோழன் படம்தான். நவரத்தினங்கள் பதித்த பெரிய கிரீடம். இடையில் தொங்கும் நீண்ட தங்கப் போர்வாள். முறுக்கி விடப்பட்ட பெரிய மீசை, தங்கம்போல் ஜொலிக்கின்ற பட்டாடைகளுடன் கம்பீரமாக நிற்கிற சோழராஜாவின் படம் சரித்திரப் பாடத்தில் இரண்டாம் பாடத்துக் குரியது.

ராஜாமணியின் புதுப் புத்தகத்தில் அந்தப் படத்தைப் பார்த்து ரொம்ப சந்தோஷப்பட்டிருக்கிறாள் மகேஸ்வரி. சோழராஜாவின் அந்தப் படத்துக்காகத்தான் அய்யா விடம் சரித்திரப் புத்தகங்கேட்டு அடம் பிடித்தது.

ஆனால் அய்யா வாங்கி வந்த புத்தகத்தில் முதல் இரண்டு பாடங்களும், கடைசிப் பாடமும் இல்லை. சோழ ராஜாவின் படமில்லாத சரித்திரப் புத்தகத்தை மகேஸ் வரிக்குப் பிடிக்கவேயில்லை,

''எனக்கு இந்தப் புத்தகமொண்ணும் வேண்டா...''
புதுப் புத்தகந்தா வேணும்...''

சிணுங்கிச் சிணுங்கி அவள் சொன்னபோது அய்யா முகம் மாறி கோபப்பட்டார்.

''ஏன்'னு கேக்கறேன்... புதுப் புத்தகத்துல ஒண்ணும் பழய புத்தகத்துல ஒண்ணுமா எழுதியிருக்கும்... புதுப் புத்தகத்துல படிச்சாத்தான் படிச்சாப்பல இருக் குமா...?''

ஆனால் 'இதில் சோழ ராஜாவின் படமில்லையே, இதை அய்யாவிடம் எப்படிச் சொல்ல?

www.padippakam.com



''இந்தப் புத்தகத்துல நெறையாப் பக்கம் கிழிஞ்சு போயிருச்சு.

சரித்திரப் புத்தகத்துல ரண்டு பாடமேயில்ல. எனக்கு இது வேண்டா. புதுப் புத்தகந்தான் வேணும்...''

அய்யாவுக்குப் பதில் அம்மா சத்தம் போட்டாள்.

''அதென்ன மகேசு, சொல்லச் சொல்லக் கேக்காம அடம்புடிச்சுகிட்டு... எல்லாருமா புதுப் புத்தகம் வாங்கறாங்க? ஏதோ ஒண்ணு இருக்கறத வெச்சு படிப்பம்னு இல்லாம...புதுசு வேணுமா புதுசு...''

பேச்சின்றிப் படுத்துக் கொண்டாள் மகேஸ்வரி.

சரித்திர வாத்தியார் இரண்டாம் பாடம் நடத்திய பிறகு மகேஸ்வரிக்கு சோழ ராஜாவின் மேலிருந்த மதிப்புப் பின்னும் அதிகமாயிற்று.

எல்லோரிடத்திலும் சரித்திரப் புத்தகமும், இரண்டாம் பாடமும் சோழராஜாவின் படமும் இருந்தது. மகேஸ்வரியிடம் சரித்திரப் புத்தகமிருந்தும் இரண்டாம் பாடமும், சோழராஜாவின் படமும் இல்லை.

இரண்டாம் பாடம் நடத்துகிறபோது ராஜாமணியின் படத்தைப் பார்த்துத்தான் பாடத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. ராஜாமணியின் புத்தகம் புதிது. பைண்டிங் செய்யப்பட்டு அழகாய், தொட்டுப் பார்க்கிற ஆசையைத் தூண்டுவதாயிருக்கும். ஆனால் ராஜாமணி தன் புத்தகங்களைத் தொட யாரையும் அனுமதிக்க மாட்டாள். பாடங்களைக் கவனிக்கிறதாயிருந்தால் தொடாமல்தான் கவனிக்க வேண்டுமென்று மகேஸ்வரிக்கு சொல்லிவிட்டாள்.

சரித்திர வாத்தியார் பாடஞ் சொல்லுவது கதை கேட்கிற மாதிரியிருந்தது. அப்பப்பா! எவ்வளவு பெரிய

www.padippakam.com



ராஜா அவன்? அவன் ரொம்ப ரொம்ப பெரிய வீரனாம். யாராலும் அவனிடம் சண்டை போட்டு ஜெயிக்க முடியாதாம். அவன் ராஜாவாக இருந்த போது தேசத்தில் பஞ்சமேயில்லையாம். வயல்களில் பொன்னாக விளைந்ததாம். சரித்திர வாத்தியார் சொன்னபோது மகேஸ்வரியால் நம்பவே முடியவில்லை. அதைவிடப் பெரிய அதிசயமென்னவென்றால் சோழ ராஜா கட்டிய கோயிலும் அவன் குடியிருந்த அரண்மனையும் ஆயிரம் வருஷங்களாகியும் அப்படியே இருக்கிறதாம். அப்பாடி... நினைக்கவே அதிசயமாகவல்லவா இருக்கிறது? ஒரு வருஷமா இரண்டு வருஷங்களா? ஆயிரம் வருஷங்கள். மகேஸ்வரியின் வீடு இரண்டு வருஷத்துக்கொரு முறை, மூன்று வருஷத்துக்கொரு முறையென முறை வைத்துக் கொண்டு விழும். திடீரென்று ஓடையில் வெள்ளம் வந்து விடும். எல்லோரும் கையில் கிடைத்ததை யெடுத்துக் கொண்டு உயிர்ப் பிழைத்தால் போதும் என்று வெளியேறி விடுவார்கள். வெள்ளம் வடிந்த பின்னால் வந்து பார்த்தால் வீடுகள் எல்லாம் கூரை சரிந்து சுவர்கள் இடிந்து கிடக்கும். அப்புறம் அய்யா வேலை கெட்டு பத்து நாள்கள் கஷ்டப்பட்டு சுவர் வைத்துக் கொண்டு கூரை மேய்வார். அதற்கு ஒவ்வொரு தடவையும் அரசாங்கத்தில் பணம் கொடுப்பார்கள். அந்த ஒரு வாரம், பத்து நாள்களில் எல்லோரும் பள்ளிக் கூடத்திலேதான் தங்க வேண்டியிருக்கும். அந்த நாள்களில் பள்ளிக் கூடத்திற்கு லீவு போட்டு விடுவார்கள். படிக்கிற பள்ளிக்கூடத்தில் எல்லோரும் ஆளுக்கொரு மூலையில் சோறாக்கி ஆளுக்கொரு பக்கம் படுத்துத் தூங்குவதை நினைத்தால் மகேஸ்வரிக்குச் சிரிப்பாய் வரும். ஆனால் சோழராஜாவின் வீடு மட்டும் ஆயிரம் வருஷங்களாகியும் இடியாமல் இன்னும் அப்படியேயிருக்கிறதாம். ஆயிரம் வருஷங்களில் எத்தனை மழை பெய்திருக்கும். அத்தனைக்கும் அசராமல் அப்படியேயிருக்கிறதென்றால் அது பெரிய அதிசயமில்லையா...?

www.padippakam.com



இப்போதுகூட தஞ்சாவூர் போனால் அதையெல்லாம் தஞ்சாவூர் பார்க்கலாமாம், வாத்தியார் சொன்னார். எங்கேயிருக்கிறதோ...?

ராஜாமணி தஞ்சாவூருக்கெல்லாம் போய் சோழராஜா அரண்மனை, ராஜராஜன் கட்டி வைத்த கோயில் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாளாம். அவளுடைய அப்பா அவளை அடிக்கடி அங்கெல்லாம் கூட்டிப் போயிருக்கிறாராம்.

ராஜாமணிக்கு அதிலெல்லாம் ரொம்பப் பெருமை. சரித்திர வாத்தியாரும், ராஜாமணியும் சொல்லுகிறதையெல்லாம் வைத்துப் பார்த்தால் எல்லாம் கண்டும் கேட்டுமறியாத அதிசயங்களாகவல்லவாயிருக்கின்றன? அய்யாவிடம் சொல்லி ஒரேயொரு தடவையாவது தஞ்சாவூருக்கு கூட்டிப் போகச் சொல்ல வேண்டும்.

ராஜாமணியின் சரித்திரப் புத்தகத்தில் அந்தக் கோயிலின் படமும், அரண்மனையின் படமும்கூட இருக்கிறது. அதையெல்லாம் பார்த்தால் வாத்தியார் சொல்லுவதெல்லாம் நிஜம்தான் போலிருக்கிறது. வாத்தியார் பொய் சொல்லுவாரா...?

அப்பேர்ப்பட்ட சோழராஜாவின் படத்தை ராஜாமணியின் புத்தகத்தில் பார்க்கப் பார்க்க மகேஸ்வரிக்கு அதைக் கிழித்தெடுத்துத் தன் புத்தகத்தினுள் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தது.

யாருமில்லாத நேரத்தில் யாரும் பார்க்காத நேரமென்றுதான் அவசர அவசரமாக ராஜாமணியின் புத்தகத்திலிருந்த சோழராஜாவின் படத்தைக் கிழித்துத் தன்னுடைய சரித்திரப் புத்தகத்தினுள் செருகினாள். ஆனால் முதுகுக்குப் பின்னாலிருந்து லெட்சுமி பார்த்திருக்கிறாள்.

www.padippakam.com



செய்தி நேரே ராஜாமணியின் காதுகளுக்குப் போயிற்று. பின் வாத்தியாருக்கும் எட்டியது. வாத்தியார் பிரம்பும் கையுமாக வந்து அவளைப் பிடித்துக் கொண்டார்.

''ஏண்டி மகேஸ்வரி, ராஜாமணி புத்தகத்தைக் கிழிச்சி யாமே...

''ஏன்'டி அப்படிச் செஞ்சே...ம்...ம்?''

வாத்தியாரின் பிரம்பும் பார்வையும் மகேஸ்வரியை ரொம்பவும் பயமுறுத்திற்று. கண்களில் நீர் பிதுங்க வெடவெடவென்று உடல் நடுங்கி நின்றாள்.

''ஏன்டி'' அப்படி செஞ்சே திருட்டுக் கழுத... எங்க கிழிச்ச பேப்பரக் காட்டு, உன்னைத் தோல் உரிக்கணும்...?''

மகேஸ்வரியின் சரித்திரப் புத்தகம் நேரே வாத்தியா ரின் கைகளுக்குப் போயிற்று. வாத்தியார் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். முதலும் முடிவுமில்லாத அந்தப் புத்தகம் அவர் பாடஞ் சொல்லிக் கொடுக்கிற சரித்திரப் புத்தகந்தான் என்பது புரிய அவருக்குக் கொஞ்ச நேரமாயிற்று.

''ஏய் மகேஸ்வரி! இதென்ன புத்தகம் இது? சரித்திரப் புத்தகமா... இத வைச்சுக்கிட்டுத்தான் நீ படிக்கப் போறியா...? இதென்ன குப்பைத் தொட்டியில கெடந் துச்சா...இல்ல மிச்சர் வண்டியில வாங்கினியா...?',

பிள்ளைகளெல்லோரும் கலீரென்று சிரித்தார்கள். (இதில் சிரிக்க என்ன இருக்கிறதென்று மகேஸ்வரிக்கு விளங்க வில்லை) கடைசியில் வாத்தியார் இரண்டு உள்ளங்கை களிலும் பிரம்பால் விளாசினார்.

''இங்க பாருடி... இன்னிக்கோட இந்தத் திருட்டுப் புத்திய விட்டுடு. நாளைக்கு வர்றபோது இந்தப்

www.padippakam.com



பழைய புத்தகத்தைக் கொண்டு போய் ஏதாச்சும் ஒரு கடையில மிச்சர் பொட்டலங்கட்டப் போட்டுட்டு. எல்லாப் பாடங்களும் ஒழுங்கா இருக்கிற மாதிரி ஒரு புத்தகம் வாங்கிட்டு வா... ஆமாம்... சும்மா வந்தே தோல உரிச்சுடுவேன்.''

பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு ரொம்ப நேரம் விசும்பிக் கொண்டிருந்தாள் மகேசு. உள்ளங்கைகள் சிவந்திருந்தன. வலி ரொம்பவும் அதிகமாக இருந்தது.

நாலாம் கிளாஸ், அய்ந்தாம் கிளாஸ் வாத்தியாரெல்லாம் இவ்வளவு பெரிய பிரம்பில் அடிக்க மாட்டார்கள். அடிக்கோலால் அடிப்பார்கள். அல்லது தலையில் குட்டுவார்கள். அவையெல்லாம் பிரம்படி போல அவ்வளவாய் வலியெடுக்காது. ஆறாம் கிளாஸ் வாத்தியார் மட்டும் ஏன் இவ்வளவு பெரிய பிரம்பால் அடிக்கிறார்?

ஒருவேளை மேல் வகுப்புக்குப் போகப் போக அடிக்கிற பிரம்பும் பெரிதாகிக் கொண்டே போகுமா...?

சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குப் போகும் போதும் அடிவாங்கின எரிச்சல் உள்ளங்கையிலிருந்தது. புத்தகங்கள் அடங்கிய பையைக்கூடப் பிடிக்க முடியவில்லை. ராஜாமணியின் புத்தகம் போல புதுப் புத்தகம் இருந்திருந்தால் இத்தனை தொல்லைகள் இல்லை.

நாளைக்கு அய்யாவிடம் சொல்லி புதுச் சரித்திரப் புத்தகம் வாங்கித் தரச் சொல்ல வேண்டும். அய்யா வாங்கித் தராவிட்டால் என்ன செய்வது?

புதுப் புத்தகம் இல்லாமல் பள்ளிக்கூடம் போனால் வாத்தியாரிடம் மறுபடியும் பிரம்படி வாங்க வேண்டியிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



எப்படியும் ராஜாமணியின் புத்தகத்திலிருந்து கிழித்த சோழராஜாவின் படம் தன்னுடைய பைக்குள்ளேயே தங்கிப் போய்விட்டதில் மகேஸ்வரிக்கு ரொம்பச் சந்தோஷம்.

— 1984.

## ஒரு விமர்சனம் :

'ராஜா இல்லாத புத்தகம்'

தீவிரமான உளவியல் நெருக்கடிகளுக்கும், தனிமனித ஒழுக்கநெறிப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதில், ஒரு கலைஞன் என்ற முறையில் இவரது கவனம் ஒரு முனைப்பட்டிருக்கிறது. புன்னகையையும், அழுகையையும் ஒரே நேரத்தில் தூண்டும் இவரது கதைகளில் தென்படும் மனித நேயம் தன்னிகரற்றது; நம்மைச் செயலுக்குத் தூண்டுவது. எனக்கு மிகப் பிடித்த இவரது 'கருவி, ஓதாமல் ஒருநாளும், மீதி' போன்ற கதைகளில் வரும் பாத்திரங்கள் உயிர்த்துடிப்பு மிக்கவை. தனக்குள் பிரமிப்புகளையும், சிலிர்ப்பையும் ஏற்படுத்திய சோழராஜாவின் படத்தைக் கிழித்துத் தன் பையினுள் பத்திரப்படுத்திக் கொண்ட மகேஸ்வரியை இக்கதையில் படிக்கும்போது, மனிதனின் அந்தரங்க உணர்வுகளுக்கும், வரலாற்றுக்குமுள்ள தொடர்பு குறித்து யோசிக்க வேண்டியுள்ளது. கண்களை மூடிக்கொண்டு புகைப்படம் பிடிக்கத் தன்னால் முடியாது என்கிறார் தேவி பாரதி.

— **சி. கதிர்வேல்.**

படிப்பகம்

www.padippakam.com

# ஓதாமல் ஒருநாளும்

அன்றைக்கென்று பார்த்து பால்ராஜ் வாத்தியார் வரவில்லை. அவருக்குப் பதிலாய் லீவ் லெட்டரொன்று வந்து சேர்ந்தது. இவருச்கு என்ன செய்கிறதென்று தெரியவில்லை.

இனி அய்ந்து வகுப்புப் பிள்ளைகளிடமும் இவர் ஒருத்தராக மாரடிக்க வேண்டும்.

இது கடலைக் கொடி பிடுங்குகிற காலம். எல்லாப் பிள்ளைகளும் கிழக்கு வெளுக்கும் முன்பே காடுகளில் இருக்கும். அங்கே, விளையாடிக் கொண்டே ஒவ்வொரு பிள்ளையும் நாலு கொட்டுக்கூடை கடலைக்காய் பறித்துவிடும். கொட்டுக்கூடை எட்டணாவென்று போட்டால்கூடத் தலைக்கு இரண்டு ரூபாய் தேறும். 'பள்ளிக்கூடத்துக்குப் போய் படிச்சுக் கிழிக்கிறதென்ன இப்போ?'

பிள்ளைகள் கொஞ்ச நேரத்துக்கு அமைதியாய் இருந்து பார்த்தார்கள். பிறகு ஒருவரோடொருவர் குசுகுசுவென்று பேசத் துவங்கினர். நேரம் செல்லச் செல்லப் பேச்சுப் பெரிதாகிப் பெரிதாகி வளர்ந்தது. வகுப்பறையிலேயே தட்டாங்கல் விளையாட்டுத் துவங்கியிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



கோபத்துடன் மேசையைத் தட்டி, ''பேசாம, இருங்கடா...!'' என்று சத்தம் போட்டார். சூட்டோடு சூடாக ஸ்கேலை எடுத்துக் கொண்டு பிள்ளைகளுக்குள் புகுந்து தலைக்கு ஒரு அடியாகப் போட்டார், பிள்ளைகள் மிரண்டு அமைதிப்பட்டார்கள்,

''இனிமே எவனாச்சும் சத்தம் போட்டீங்கன்னா
தோல உரிச்சுப் புடுவேன், உரிச்சு... படவா...
எல்லோரும் சிலேட்ட எடுங்கடா... எடுத்து
ஒண்ணுலயிருந்து நூறு வரைக்கும்
எழுதுங்கடா...''

பழையபடி, சன்னத்துக்குக் கைகளை மூட்டுக் கொடுத்து உட்கார்ந்தார். ஒரு பையன் தயக்கத்தோடு எழுந்து நின்றான்.

''என்னடா?''

''எங்கிட்டெ சிலேட்டில்லீங்க சார்...''

அவனது முகத்திலும் குரலிலும் நடுக்கம். இவருக்கு எரிச்சலாக இருந்தது.

''சிலேட்டில்லாம இங்க செரைக்கறதுக்காடா வந்தே?
வாடா இங்க...''

பையன் நடுங்கினவாறே அருகில் வந்தான்.

''சிலேட்டு என்னடா ஆச்சு?''

''ஒடஞ்சு போச்சுங்க சார்...''

''ஒடஞ்சா இன்னொண்ணு வாங்கறதுக்கென்ன?
சிலேட்டில்லாம இங்க புடுங்கறதுக்கா வந்த...?''

பட்டனில்லாத சட்டைத் திறப்பினூடே, ஒட்டிக் கிடந்த அவனது கறுத்த வயிற்றில் கைபோட்டுக் கிள்ளினார். பையனின் கண்களில் கதகதவென்று நீர் திரண்டு விட்டது. பிரம்பில் இரண்டடி போட்டார்.

www.padippakam.com



''போடா... போய் உக்காரு...''

பையன் விசும்பிக் கொண்டே போய் உட்கார்ந்தான், இவர் கொஞ்ச நேரம் கூரை முகட்டை வெறித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ஜன்னலருகே நின்று வெளியில் பார்வையை ஓட்டினார்.

பிள்ளைகள் இவரது நடையையும், பிரம்பையும் பார்த்து மிரண்டு போனார்கள். ராகம் போட்டுச் சொல்லிக் கொண்டே எழுதினார்கள். தளர்வாயிருந்த இடுப்பு வேட்டியை இறுகக் கட்டிக் கொண்டு வெளியில் வந்தார். ஒரு பழைய மாணவன் இவருக்குக் 'குட் மார்னிங் சார்' சொன்னான். கொஞ்சம் சந்தோஷமாக இருந்தது சட்டைப் பாக்கெட்டைத் துழாவினார். ஒரு ரூபாய் கிடந்தது.

பிரம்படிபட்ட பையன் இன்னும் விசும்பிக் கொண் டிருந்தான். புறங்கைகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கண்ணீர் விட்டான். இவருக்குப் பரிதாபமா யிருந்தது. அவன் பெயரைச் சொல்லிக் கனிவாகத் தன்ன ருகே அழைத்தார். விழிநீரைப் புறங்கைகளால் துடைத்த படி அருகில் வந்து நின்றான் பையன்.

இவர் எங்கோ பார்த்தபடி பேசாமல் உட்கார்ந்திருந்தார். என்னத்துக்குக் கூப்பிட்டோமென்று யோசிக்கிற மாதிரி.

''சார்...''

திரும்பி, என்ன வேணும் என்பது போல் பார்த்தார்.

''கூப்புட்டீங்க சார்...''

''ம்... ம்... போய் நாடார் கடையில நா சொன் ன்னு சொல்லி ஒரு டீ வாங்கிட்டு வா...''

''சரீங்க சார்...'' என்று துள்ளலுடன் ஓடினான் பையன்.

www.padippakam.com



பிள்ளைகள் ஒவ்வொருவராக வந்து எழுதியதைக் காண்பித்தார்கள். சாக்பீசால் எல்லோருக்கும் 'டிக்' செய்தார். பிறகு எல்லோரையும் 'நூத்தி ஒண்ணுலயிருந்து இருநூறு வரைக்கும்' எழுதச் சொன்னார். வாசலில் 'அப்பா' என்ற குரலுடன் வந்து நின்றான் செல்வம். இவர் ஒரு பையனைக் கூப்பிட்டு, பால்ராஜ் வாத்தியாரின் நாற்காலியைக் கொண்டுவரச் சொல்லி, அவனை உட்காரச் சொன்னார். இதற்குள் பையன் டீயுடன் வந்து சேர்ந்தான்.

''செல்வம் டீக் குடிக்கிறயாப்பா...?''

அந்தப் பையனிடம் ஒரு டம்ளர் எடுத்துவரச் சொல்லி, பாதியை ஊற்றி செல்வத்துக்குக் கொடுத்து விட்டு, டீயை உறிஞ்சத் தொடங்கினார்.

''பால்ராஜ் சார் வரலியாங்கப்பா?'' என்று பதட்டமான குரலில் கேட்டான் செல்வம்.

''இல்லப்பா... அவரு திடீர்னு லீவு போட்டுட்டாரு... அதான் என்ன பண்றதுன்னு தெரியாமத் தவிச்சுக்கிட்டிருந்தேன்...''

செல்வம் பெருமூச்சு விட்டான்.

யோசனையுடன் எழுந்து, ''இரு வர்றேன்'' என்று செல்வத்திடமும், 'சத்தம் போடாமல் எழுதுங்கடா'' என்று பிள்ளைகளிடமும் சொல்லி விட்டு, வெளியில் வந்தார். நிராதரவாக விடப்பட்ட குழந்தை போல வெறுமையாய் கிடந்த தெருவை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார். பிள்ளைகள் பாடமெழுதுகிற சப்தத்தையும், தூரத்தில் எப்போதாவது கத்தும் செம்மறியாடுகளின் சத்தத்தையும் தவிர, ஊரே நிசப்தமாயிருந்தது. பால்ராஜ் வாத்தியார் வந்திருந்தால் இப்படி நிராதரவாய் நிற்க வேண்டியிருந்திருக்காதென நினைத்தார்.

www.padippakam.com



தூரத்தில் மளிகைக்கடை ராமசாமியின் தலை தெரிந்தது. இவர் பதட்டத்துடன் கைதட்டி அவனைக் கூப்பிட்டார். அவன் திரும்பி அவரைப் பார்த்துப் புன்னகைக்கும் முன்பே அவனை நோக்கி நடந்தார். மர நிழலில் ஒதுங்கி அவருக்காகச் சலிப்புடன் காத்திருந்தான். இவருடைய பழைய மாணவன் அவன். அய்ந்தாம் வகுப்புடன் புத்தகங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு, மளிகைக்கடை வைத்து உட்கார்ந்து விட்டான். இப்போது கல்யாணமாகி பிள்ளை குட்டியென்று வாழ்கிறான், கடையும் ரொம்பப் பெருத்து விட்டது.

''என்ன ராமசாமி...? எப்படியிருக்கு ஏவாரமெல்லாம்?'' என்று சிநேக பாவத்துடன் கேட்டார். அவன் சிரித்தான்.

''என்னமோ ஓடுது சார்... வண்டி '

''பெரிய முதலாளியெல்லா இப்பிடிச் சொன்னா எப்பிடி?''

ராமசாமியின் முகத்தில் இளவெயிலாய் ஒரு பெருமிதம்.

''என்ன சார் பெரிய முதலாளி... நம்பளவிடப் பெரியவனெல்லாம் இருக்கான். நீங்கதாஞ் சொல்றீங்க என்னெ முதலாளின்னு...''

அவன் நகைச்சுவையாய் ஏதோ சொல்லிவிட்டது போல அவர் சிரித்தார். சிரிப்பு ஓய்ந்ததற்கப்புறம் சொன்னார்.

''ஒண்ணுமில்ல ராமசாமி...பணமிருந்தா ஒரு 10 ரூபா கெடைக்குமா? செல்வத்துக்கு வேணுமாம்... என்னமோ அப்ளிக்கேஷன் போடணும்னு...''

நா குளறி பேச்சுத் தடைபட்டு, முகம் விபர்க்க அவனைப் பார்த்தார்.

ராமசாமி எங்கோ பார்த்தான். கொஞ்ச நேரம் மௌனம்.

www.padippakam.com



''எங்க சார்...பணத்தயெல்லா நேத்துத்தாம் பொறுக்கி சரக்கு வாங்கக் கொடுத்தனுப்பிச்சேன்... இந் தெட்டுக்கு நெறையக் கடன் வேற... வாங்கறாங்க, அப்புறம் கடப்பக்கம் வர்றதேயில்ல...'' என்று அவர் முகத்தைப் பார்த்தான்.

அவர் கூட அவனது கடைக்குப் பாக்கி தர வேண்டியிருந் தது. இரண்டு மாசமாய் எதுவும் தரவில்லை. ஓரிரு தடவை ஆளனுப்பிக் கேட்டிருந்தான் ராமசாமி.

''நம்பளுது இந்த மாசம் வந்துரும்... நீ கவலைப்பட வேண்டாம்... இப்ப வாங்கற பத்தயுஞ் சேத்துப் பையங்கிட்டக் குடுத்தனுப்பிடறேன்...''

பின்னும் என்னென்னவோ சொன்னான் ராமசாமி.

''வேணும்னா ஒரு பையெனக் கடைக்குத் தாட்டியு டுங்க...'' என்று அவன் கடைசியாய்ச் சொன்னது மட்டும் அவருக்கு ஞாபகம் இருந்தது. வகுப்புக்குத் திரும்பி, சிலேட்டில்லாத அந்தப் பையனை ராமசாமியின் கடைக்கு அனுப்பி விட்டு உட்கார்ந்தார்.

''செல்வம் அந்த இண்டர்வியூ எத்தனாந் தேதின் னுப்பா சொன்ன?''

''எந்த இண்டர்வியூங்கப்பா?''

''அதாம்பா, தபால் தந்தில கிளார்க் போஸ்ட்டுக்கு...''

''இருபத்தி நாலாந்தேதிங்கப்பா...''

''இண்டர்வியூ எங்கே?''

''கோயமுத்தூர்லங்கப்பா...?''

அவர் பின்னால் திரும்பி காலண்டரைப் பார்த்தார். தேதி இருபதாகி விட்டது, நாலே நாட்கள் தானிருக் கின்றன. எப்படியும் பால்ராஜ் வாத்தியார் இருக்கிறார்...

www.padippakam.com



கொஞ்ச நேரத்தில் பையன் வந்தான்,

"சார் அவருகிட்ட அஞ்சு ரூபாதான் இருந்துச்சாம்... ஒண்ணாந் தேதி கண்டிப்பாக் குடுத்துரணும்னு சொன்னாரு..."

அவர் ஒரு பெருமூச்சுடன் அதை வாங்கிக் கொண்டார். இதைத் கொண்டு என்ன செய்ய? எதுவும் செய்யத் தோன்றாதவராய் மேசையின் மேல் எழுதுவதும், அழிப்பதும்...எழுதுவதும் அழிப்பதுமாய்...

"டேய்... யாராச்சும் ஒரு பை குடுங்கடா..." சட்டென்று எழுந்து பிள்ளைகளைப் பார்த்துச் சப்தம் போட்டார். நாலைந்து பிள்ளைகள் புத்தகங்களைக் கொட்டிவிட்டுப் பைகளை நீட்டினர். அவற்றில் நல்லதாக ஒன்றை வாங்கிக் கொண்டு ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தார். எல்லாவற்றையும் துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்செல்வம்.

ஸ்டோர்ரூம் கதவை உட்புறம் சாத்திக் கொண்டு பிள்ளைகளின் மதியச் சாப்பாட்டுக்கென்றிருக்கும் கோதுமை ரவையில், அவசர அவசரமாக ஒரு ரண்டு மூன்று கிலோவுக்கு அள்ளிப் பையில் போட்டுக் கொண்டு வெளியில் வந்தார்.

செல்வத்திடம் பையைக் கொடுத்துப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளச் சொன்னார். ராமசாமியிடம் வாங்கிய அய்ந்து ரூபாயைக் கொடுத்து,

"கொண்டுபோய் அம்மா கிட்டக் குடுத்து மத்தியானம் உப்புமாக் கௌறிக்கச் சொல்லு... நா சாயந்திரமா வர்றேன்..."

"உங்களுக்கு மத்தியானச் சாப்பாடுங்கப்பா?"

"எனக்கு எப்பிடியோ ஒண்ணு ஆவுது... நீ போ... யாராச்சும் பைல இருக்கறதெப் பாத்துடப்

www.padippakam.com



போறாங்க ... எங்கியும் நிக்காமப் போ...'' என்று தணிந்த குரலில் பதட்டமாகச் சொன்னார்.

பையை எடுத்துக் கொண்டு குனிந்த தலையுடன் வெளியேறினான் செல்வம். இவர் அவன் தலை மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றார். பின்பு, முகத்தில் பொடித்திருந்த வியர்வைத் துளிகளை வேட்டித் தலைப் பினால் துடைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

மணி பதினொன்றாகிவிட்டது.

காலையிலிருந்து பாடமே நடத்தலை. பாடம் நடத்த லாமா, மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யலாமாவென யோசித்தார். காலையிலிருந்து எதுவுமே சாப்பிடாதது நினைவுக்கு வந்தது, டம்ளரைக் கொடுப்பதற்காக டீக்கடைக்குப் போன, சிலேட்டில்லாமல் அடிவாங்கிய பையன் திரும்பி வந்ததும், அவனிடம் தீப்பெட்டியைக் கொடுத்து, அடுப்புப் பற்ற வைக்கச் சொல்லி அனுப்பி னார்.

ரொம்பவும் உற்சாகத்தோடு, கிழிந்த காக்கி டிரௌசரின் வழியே குண்டிகள் தெரிய சமையல் கட்டுக்குப் போன வனைப் பார்க்க அவருக்கு ஒரு கணம் மனசு கனத்துப் போயிற்று.

சத்தம் போடாமல் படிக்க வேண்டுமென்று பிள்ளைகளை எச்சரித்துவிட்டு அவரும் சமையல் கூடத்தை நோக்கிப் போனார்.

''மத்தியானம் பாடம் நடத்திக் கொண்டால் போகிறது...?

—1982.

ப—3

www.padippakam.com



## ஒரு விமர்சனம் :

'ஓதாமல் ஒருநாளும்'

வேலையின்மை, பற்றாக்குறை, வறுமை போன்றவை இன்றைய சமூக அமைப்பின் அரசியல், பொருளாதாரத்தின் விளைவுகள். இவ்விளைவுகள் மனித ஆளுமையின் மீதும், மனிதப் பண்புகள் மீதும், ஆதிக்கம் செலுத்தி அவற்றைச் சிதிலப்படுத்துகின்றன. தன்னிரக்கம், பொய், திருட்டு, போலித்தனம் போன்ற சிதைவுகளுக்கு இவை காரணமாகின்றன. இளம் உள்ளங்களில் மேலான மனிதப் பண்புகளையும், மனித இனத்தின் வளர்ச்சிக்கேற்ற அறிவியல் பார்வையையும் ஊட்டி, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு இவற்றைக் கையளிக்கச் செய்கிற பணி, ஆசிரியப் பணி. இத்தகைய உயர்ந்த பணியில் ஈடுபட்டுள்ளோரிடம் மேற்கண்ட சிதைவுகள் தோன்றுவது இந்தச் சமூக அமைப்பின் மிகப் பெரிய அவலமாகும். இந்த அவலத்தை எதார்த்தத்தோடு சித்தரிப்பது 'ஓதாமல் ஒருநாளும்.'

—நா. இராதாக்கிருட்டிணன்.

படிப்பகம்

www.padippakam.com

# வாலில்லாத நரிகள்

அவருக்கு எல்லாமும் சலித்துப் போய்விட்டது. இந்த உத்தியோகம், பிழைப்பு எல்லாமும்.

இந்த உத்தியோகத்தைப் பற்றி ஒரு பழமொழி உண்டு இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அதுதான் ஞாபகத்துக்கு வரும். எந்தக் காலத்தில் எவன் சொல்லிவிட்டுப் போனதோ, என்னமோ! இவர் படுகிற பாட்டை நேரில் கண்டு சொல்லியதைப் போல அத்தனைப் பொருத்தம்! பின்னே, படித்த படிப்புக்குக் கையில் நாலு காசு புரண்டிருந்தால் இப்படி நாய் படாதபாடு பட வேண்டியிருந்திருக்குமா? காக்கி உடுப்பும், முரட்டுத் தொப்பியும் போட்டுக் கொண்டு மிதப்பாய்ப் போய் வருவதைத் தவிர திருப்திப்பட வேறு என்ன இருக்கிறது இந்த உத்தியோகத்தில்.

போக்கத்துப் போய்த்தான் இந்த வேலைக்கு வந்தது.

ஸ்டேசனை விட்டுக் கொஞ்சதூரம் வந்ததற்கப்புறம்தான் அவருக்கு உறைத்தது.

அவருடைய உத்தியோகத்துக்கும் அந்தஸ்த்துக்கும் இப்படியா காற்றுப் போன பலூனாட்டம் தளர்ந்து போய் நடப்பது? அததுதுக்குத் தகுந்த மாதிரி நடையிலும், பார்வையிலும் ஒரு மிடுக்கு வேண்டாமா?

www.padippakam.com



பொதுவாக இந்த அந்தஸ்த்து, கௌரவம் என்பவையெல்லாம், ஸ்டேஷனில் இருக்கிறபோதோ, மேலதிகாரிகளின் முன்னிலையிலோ அவருக்குக் கொஞ்சமும் ஞாபகத்துக்கு வராதவை.

அங்கெல்லாம் யாருக்கும் அவர் ஒரு பொருட்டே இல்லை.

இவருடைய பிள்ளை வயது, புதுசாய் வந்திருக்கிற சப்-இன்ஸ்பெக்டருக்கு. உருட்டலென்ன, மிரட்டலென்ன? கவசகுண்டலம் மாதிரி தொப்பியும் லத்தியும் கூடவே பிறந்ததாய் நினைப்பு. ஒரு நிமிஷம் கீழே வைக்கணுமே! என்னமோ எல்லாவற்றையும் தான் ஒருத்தனே தூக்கி நிறுத்திவிடுகிற மாதிரி ஆர்ப்பாட்டம் சொல்லி மாளாது. சரி, அதுவாவது பரவாயில்லை. உத்தியோகப் பவிசு, இருக்க வேண்டியதுதான் என்று விட்டு விடலாம்.

ஒரு மட்டு, மரியாதை தெரிய வேண்டாம்?

வயசு வித்தியாசமின்றி, யாரைக் கூப்பிட்டாலும் 'நீ' தான், 'என்னய்யா?' தான். 'அத இப்பிடி எடுய்யா', 'இத இப்பிடித் தள்ளிப் போடுய்யா' என்று அதிகாரம் தூள் பறக்கிறது.

கை நீட்டிச் சம்பளம் வாங்குவதற்கு இதையெல்லாம் கூடப் பொறுத்துக் கொள்ளலாம்தான். லாக்-அப்பில் உள்ளூர் கைதிகளை வைத்துக்கொண்டு அவர்கள் காதுபட இப்படியெல்லாம் பேசினால், நாளைக்கு அவனெல்லாம் போலீசை எப்படி மதிப்பான்? அட, மதிக்கக்கூட வேண்டாம் நாலு பேர் கூடி நின்று, 'போலீஸ்காரன் பொழப்பு இதுதான்' என்று காதுபடக் கேலி செய்து சிரிக்கும்படியாய் அல்லவா ஆகி விடுகிறது?

வெளியே யாருடனும் உறுத்தலில்லாமல் பழக முடிவதில்லை. ஒவ்வொருத்தனும் தன்னுடைய உத்தியோக

www.padippakam.com



லட்சணம் குறித்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தபடி பேசுவதாகத் தோன்றிற்று அவருக்கு. இதனாலேயே ஒருவரிடமும் பேச்சுக் கொடுக்காமல் ரொம்பக் கறாரான பேர்வழி போலக் காட்டிக் கொண்டு போவார்.

அப்படியும் சிலர் விட மாட்டார்கள்.

''என்ன சார்...ரொம்ப களைச்சுப்போய் வர்றீங்க...?''

மதித்து ஏதாவது சொல்லி விட்டால் போதும்,

''உத்தியோகம் அப்பிடி... சித்தநேரம் அக்கடான்னு இருக்க முடியுமா? நாடே உங்களாட்ட இருக்குறவுங்கள நம்பியில்ல இருக்குது...'' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போவார்கள்.

உண்மையில் அப்படிப்பட்டவர்கள் தன் மேலுள்ள பிரியத்தினால் கேட்கிறார்களா இல்லை கேலிக்குப் பேசுகிறார்களாவெனத் தெரியாது இவருக்கு. ஒன்று மறுப்பாகவுமில்லாமல், ஆமோதிப்பாகவும் இல்லாமல் ஒரு விதமாகத் தலையை ஆட்டிவிட்டுப் போய்விடுவார், இல்லையா, அவர்கள் கேட்டதே காதில் விழாதவரைப் போல விடுவிடுவெனப் போய் விடுவார்.

மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது. பசி, இரண்டு நாட்களாய்த் தூங்காத அசதி.

நடையை எட்டிப் போட்டார்.

''வணக்கங்க சார்... எங்கீங்க ரெண்டு நாளா இந்தப் பக்கமே வரக் காணாமுங்க...? இந்நேரத்துல தனியா வர்றீங்க... ரோந்துங்களா?''

எக்கச்சக்கமாய் யாரிடமாவது மாட்டிக்கொண்டு விட்டோமோ என்று அவருக்கு முகம் வெளிறிப் போயிற்று. கேட்டது யாரென்று கூடப் பார்க்காமல் குரல் வந்த திசையைப் பார்த்து தடுமாற்றத்துடன் சொன்னார்,

www.padippakam.com



"இல்ல... அது வந்து... இல்லல்ல... ஆமா ரோந்து... ரோந்துதா... நைட் ரோந்து..."

கேட்ட ஆள் யாரென்பது பிறகுதான் தெரிந்தது. ரோட்டோர டிபன் கடைக்காரன். கிண்டல் செய்கிற ஆள் இல்லை. நிஜமாகவே இவரைக் கண்டு பயந்து கொண்டிருக்கிற அப்பாவி ஜீவன். மேலதிகாரிகளின் முன்னால் போல அவனிடம் தடுமாறி விட்டது குறித்து ரொம்ப வெட்கமாக இருந்தது. உடனடியாக அதை ஈடு செய்யும் பொருட்டு,

"என்னப்பா சுருட்டெ... இன்னமும் முனிசிபாலிடி கிட்டேயிருந்து கட நடத்த லைசென்ஸ் வாங்கல போல இருக்கே...?" என்று குரலை உயர்த்திக் கேட்டார்.

காலையிலிருந்து இளம் சப்-இன்ஸ்பெக்டருக்கு எரிச்சல் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று பயந்து பயந்து தணிவான குரலிலேயே பேசிக் கொண்டிருந்து விட்டு வந்திருந்தாரா கையால், போதிய அளவுக்கு மிரட்டும் தொனியில் பேச முடியவில்லை அவருக்கு. அவர் கேட்டதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாதவன் மாதிரி,

"உட்காருங்க சார்... சூடா ஒரு டீ சாப்பிடலாம்" என்று என்னமோ சொந்தம் போல உபசரித்தான்.

டீ என்றதும் இவர் உட்கார்ந்து விட்டார். இப்படியொரு அன்பான உபசரிப்பைக் கெடுத்துக் கொள்வானேனென்று இருந்தது.

தொப்பியைக் கழட்டிக் கையில் வைத்துக் கொண்டார். வேர்த்த முகத்தைக் கைக்குட்டையால் அழுந்தத் துடைத்துக் கொண்டார். அவருக்கு முன்னால் தோசைக் கல்லில் முறுகல் தோசையும், ஆம்லெட்டும் வெந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்க நாவில் நீரூறிவிட்டது. பார்வை ஏக்கமாக தோசைக் கல்லின் மீதும், பரட்டைத் தலைச் சமையல்காரன் மீதும் படிந்தது.

www.padippakam.com



கடைக்காரன் இதைக் கவனித்தான் போலும்.

"சார், நைட்டு டிபன் ஆச்சுங்களா?"

இவருக்கு என்ன சொல்வதெனப் புரியவில்லை, தடுமாறினார்.

"ம... ம்... ஆச்சு... ஆச்சு... எப்பவோ ஆச்சு..."

உண்மையில், அந்த இளம் சப்-இன்ஸ்பெக்டருக்கு சாராய வியாபாரி கொடுத்தனுப்பியிருந்த கோழி, மீன், முட்டை இத்தியாதி வகையறாக்களுடனான சாப் பாட்டை சப்-இன்ஸ்பெக்டர் இடுப்பு பெல்டை தளர்த்தி விட்டுக் கொண்டு சாப்பிட, இவர் பக்கத்திலிருந்து அவ்வப்போது தண்ணீர் மொண்டு கொடுத்ததோடு சரி.

கடைக்காரனுக்கு நிம்மதி. ஒரு டீயோடு தப்பினான் இல்லையா? சந்தோஷத்தில் டபுள் ஸ்ட்ராங்காக ஒரு டீ போட்டுக் கொடுத்தான்.

அவர் டீயை உறிஞ்சினார்.

'தேவாமிர்தம்' என்று மனசுக்குள் கடைக்காரனைப் புகழ்ந்தார். அவரையுமறியாமல் முகம் மலர்ச்சியுற்று விரிந்தது. கடைக்காரன் அவரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். அவரால் அவனுக்கொரு காரியம் ஆக வேண்டியிருந்தது. சந்தர்ப்பம் பார்த்துக் கொண் டிருந்தான். அவரது முகத்தில் திடீரெனத் தோன்றிய மலர்ச்சியையும், புன்னகையையும் பார்த்து இதுதான் சரியான நேரம் என்று கேட்டுவிட முடிவு செய்தான்.

"சார்..." என்று உதட்டில் சிரிப்பை வைத்துக் கொண்டு கூப்பிட்டான்.

"என்ன குருட்டே...?" என்று குழைவாகச் சிரித்தார். உடனே, தான் தேவைக்கதிகமாக அவனிடம் குழைந்து பேசிவிட்டதாகத் தோன்றவே, முகத்தைக் கடுமையாக்கிக் கொள்ள முயன்றார்.

www.padippakam.com



''நம்பளால எனக்கொரு காரியமாகணும்...'' என்றான் தயவாக.

அவருக்கு முகங் கறுத்துப் போயிற்று. எங்கே இவன் முனிசிபாலிடியில் சொல்லி, தான் கடை நடத்திக் கொள்ள அனுமதி வாங்கித் தரச் சொல்லிக் கேட்டு விடுவானோ என்றிருந்தது. முனிசிபாலிடி ஆட்களுக்கு இவரைக் கண்டாலே கசப்பு. என்னமோ முன் ஜென்மப் பகை போல.

திடீரென்று அவரது முகம் இப்படி ஏழு கோணல்களாகப் போனதைக் கண்டு குழம்பியும் பயந்தும் போன கடைக்காரன், தட்டுத் தடுமாறி உளறத் துவங்கினான். அவன் சொன்னதை அப்படியே இங்கே எழுதுவது முடியாத காரியம்.

விஷயம் இதுதான்.

அதாவது கடைக்காரனின் பையனொருவன், நல்ல திடகாத்திரமான உடம்பு, எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் படித்தும் ஒன்றும் வேலை கிடைக்கவில்லை. ஒன்றுக்கும் உதவாமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான். அவனை எப்படியாவது போலீஸ் வேலையில் சேர்த்து விட்டுவிட வேண்டும். அதற்கு அவர்தான் எஸ்.பி. யிடம் சிபாரிசு பண்ண வேண்டும்.

'உங்கள மாதிரிப் பட்டவங்க சொன்னா மதிப்பா இருக்குமில்லீங்களா சார்...?''

என்ன சொல்வதெனத் தெரியவில்லை இவருக்கு.

இவருடைய பையனொருவனே படித்து முடித்துவிட்டு நாலைந்து வருஷங்களாய் 'வேலை வேலை' என்று சக்கரம் கட்டிக் கொண்டு அலைகிறான். இவரும் அவனை எப்படியாவது, தன் வாரிசாகக் காக்கி உடுப்புக்குள் நுழைத்து விட்டுவிட வேண்டுமென்ற நப்பாசையால்

www.padippakam.com



அலைந்து திரிந்து விட்டார். பிடிக்காத கால்களில்லை, செஞ்சாத ஆளில்லை, காரியம் நடக்கணுமே!

இதையெல்லாம் அவனிடம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?

''சரி... சரி... அடுத்த தடவ ஆளெடுக்கறப்பச் சொல் றேன், என்னெ வந்து பாக்கச் சொல்லு... எஸ்.பி. கிட்டெச் சொல்லி ஏற்பாடு பண்ணீட்டாப் போவுது...''

சொல்லி முடித்தபோது முகத்தில் சொல்ல முடியாத பெருமிதம்.

இதற்குள் அப்போதுதான் சாப்பிட்டு முடித்திருந்த ஆசாமி ஒருத்தன், அவருக்கு வணக்கம் சொல்லி, சிகரெட் ஒன்றை அவரிடம் நீட்டிவிட்டுத் தானும் ஒன்று பற்றி ஊதிக் கொண்டு எதிரில் உட்கார்ந்தான்.

''ஏனுங்க சார்... நேத்து ராத்திரி ரயில்வே காலனிப் பக்கம் என்னமோ கோஷ்டித் தகராறுங்களா? சுடல கோஷ்டிக்கும், காளிமுத்து கோஷ்டிக்கும்... ரண்டு மூணுபேருக்குக் கத்திக் குத்துக்கூட விழுந்துருச்சுன்னு சொன்னாங்க... உங்களுக்குத் தெரியுமுங்களா...? தெரிஞ்சாக் கொஞ்சம் வெளக்கமாச் சொல்லுங் களே...''

தெரியுமாவா? என்ன அபத்தமான கேள்வி.

''தெரியுமான்னு சாதாரணமாக் கேட்டுட்டே...? ஸ்பாட்டுக்குப் போயி, தகராற அடக்கி, அவனுக ரண்டுபேருத்தையும் முட்டிக்குமுட்டி தட்டிக் கொண் டாந்ததே நாந்தான்... இல்லாட்டி நாலஞ்சு கொல விழுந்துருக்கும் அங்க...''

www.padippakam.com



''அப்பறங்க சார்...'' என்று சுவராஸ்யமாகிக் கதை கேட்கத் தயாரானான் அந்த ஆசாமி. இரண்டாவதாக இன்னொருத்தனும் சேர்ந்து கொண்டான்.

''அந்தச் சமயத்துல தா அங்கதானுங்க சார் இருந்தேன்... உங்களப் பாத்ததா ஞாபகமே இல்லிங்களே'' என்று அவரைக் கூர்ந்து பார்த்தான். இவருக்குக் கோபம்.

பார்வையாலேயே அவனை மிரட்ட முயன்று முறைத்தார். ஆள் பயப்படுகிற பேர்வழியாய்த் தெரியவில்லை, தானும் பதிலுக்கு முறைத்தான். இவர் தடுமாறிப் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

முதலில் பேசின ஆசாமி துணைக்கு வந்தான்.

''நீ நல்லாப் பாத்துருக்க மாட்டே...'' என்று அவனுக்குச் சமாதானஞ் சொல்லிவிட்டு, கதை கேட்கிற உற்சாகத்தில் அவரைத் தூண்டினான்.

''எப்பிடிங்க சார் சமாளிச்சீங்க? அவனுங்க ரண்டு பேரும் பெரிய போக்கிரிகளாச்சே... என்னமோ பொம்பள விஷயம்னு சொன்னாங்க...''

''ஆமா...'' என்று சொல்லிவிட்டு அமைதிப்பட்டார். யோசனையில் புகுந்தது போல முகத்தை இறுக்கிக் கொண்டார். எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டோமோ என்றிருந்தது.

கேட்டவனுக்கு விஷயம் ஓரளவு தெரியும் போலிருக்கிறது. சம்பவத்தை நேரில் பார்த்த ஆளும் பக்கத்திலிருக்கிறான். இவருக்கோ அதைப் பற்றி அநேகமாக ஒன்றும் தெரியாது. ஸ்டேஷனில் இதுபற்றி ஒரு வழக்குப் பதிவாகியிருந்தது. சக போலீசார்கூட இதைப் பற்றி என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள். அது அரையுங்குறையுமாக இவர் காதில் விழுந்திருந்தது.

www.padippakam.com



அதை வைத்து இங்கே சமாளிக்கமுடியாது. எதையாவது சொல்லி கேலிக்காளாகி விட்டால்?

சிகரெட் பற்ற வைக்கிற சாக்கில் கொஞ்ச நேரம் பேசாம லிருந்தார். பேச்சை வேறெதுக்காவது மாற்ற முடியுமா வென யோசித்தார். கண்கள் ரோட்டைத் துழாவின. எதிர்த்த ரோட்டிலிருந்து ஒரு ஆசாமி சைக்கிளில் விளக்கு இல்லாமல் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

சட்டென்று இவருக்கு ஒரு யோசனை வெட்டிற்று.

என்னதான் ரோட்டில் பகலைப் போல வெளிச்சம் இருக்கட்டுமே, விளக்கு இல்லாமல் சைக்கிளில் வரலாமா? அது பெரிய குற்றமாயிற்றே, பார்க்கிற போலீஸ்காரனால் பார்த்துக் 'கொண்டு சும்மா இருந்துவிட முடியுமா? அதுவும் இப்படியொரு இக்கட்டான சூழ்நிலையில் சொல்லி வைத்தமாதிரி வந்தானே...

இவர் சுறுசுறுப்பாய் எழுந்து தொப்பியைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு, லத்தியை உயர்த்தி ஆட்டியபடி ''டேய்... நில்லுடா'' என்று உறுமிக்கொண்டு பாய்ந்தார். அங்கிருந்தவர்களுக்கோ ஒரு வீரசாகசத்தை நேரில் பார்க்கப் போகிற சுவராஸ்யம்.

ஆனால் நடந்ததோ...

சைக்கிளை ஓட்டி வந்தவன் ஒரு இளைஞன். எதற்கோ அவசரமாய்ப் போய்க் கொண்டிருந்திருப்பான் போலிருக் கிறது. இவர் இப்படி லத்தியைச் சுழற்றி ஆட்டியபடி, ரோட்டில் பாய்ந்ததைக் கண்டு, தயங்கி வேகத்தைக் குறைத்தான், பின் என்ன நினைத்தானோ சட்டென உஷாராகி, மின்னல் வேகத்தில் பறக்கத் துவங்கினான்.

இவருக்கு என்ன செய்கிறதெனத் தெரியவில்லை.

இப்படியும் நடக்குமா?

படிப்பகம்

www.padippakam.com



சுற்றி நின்றவர்கள் இவரைக் கழிவிரக்கத்தோடு பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரிக்கத் துவங்கினார்கள்.

இவர் பார்த்தார்.

கடைக்கு முன்னால் லைட்டில்லாத சைக்கிளொன்று நின்று கொண்டிருந்தது. யாரிடமும் எதுவும் சொல்லாமல் அதையெடுத்துக் கொண்டு, தன் பலங்கொண்ட மட்டும் வேகமாக மிதித்து, அவன் போன திசையில் சைக்கிளை விட்டார்.

அவன் போன சுவடையே காணோம்.

கொஞ்ச தூரம் போனதும் ரோடு இரண்டாகப் பிரிந்தது. எதில் போனானோவென யோசித்தபடி கொஞ்ச நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தார். பிறகு என்னவோ நினைத்துக் கொண்டவராக வலப்புறம் பிரிந்து போகிற ரோட்டில் சைக்கிளை விட்டார்.

கொஞ்ச தூரம்தான் போயிருப்பார்.

ரோட்டில் ஒரே இருட்டு. தெரு விளக்குகளோ, மனித நடமாட்டமோ ஏதுமில்லை. இந்த மாதிரியான இடத்தில் தன்னந்தனியாக மாட்டிக் கொள்வதைவிட முட்டாள் தனம் வேறு இருக்க முடியாது. எதாவது சட்ட விரோதக் கும்பலின் கண்ணில் பட்டுவிட்டால் வம்பு சும்மாவா விட்டுவிடுவார்கள்?

எதுவும் நடக்கலாம்.

இந்த நினைப்பு வந்ததுமே அவருக்கு உதறல் எடுத்தது. சைக்கிளைத் திருப்பிக் கண்களை மூடிக் கொண்டு வேகமாக விட்டவர், எங்கும் நிற்காமல் நேரே டீக்கடைக்கு வந்துதான் நின்றார்.

ரேஸ் காளைக்குப் போல மூச்சிரைத்தது.

www.padippakam.com



''என்ன சார்... ஆள் கம்பி நீட்டீட்டானுங்களா?'' என்று இவர் தலை தெரிந்ததும் கேட்டான் முதலில் இவரிடம் கதை கேட்ட ஆசாமி.

இவர் திடுக்கிட்டுப் போனார்.

என்னமோ பின்னாலேயே வந்து பார்த்தது போலல்லவா கேட்கிறான்?

சுதாரிக்க முயன்று சிரித்தார்.

''தப்பிக்கறதாவுது? எங்கட்டயிருந்து தப்பறதுக்கு அவனுக்கென்ன ரெண்டு கொம்பா மொளச்சிருக்குது? எஞ் சர்வீசுல எத்தன பேரப் பாத்துருப்பேன்... ஆனானப்பட்ட...''

இந்த இடத்தில் அவர் சொல்ல வந்தது, நேற்றய கோஷ்டித் தகராறில் தான் காட்டியதாகச் சொல்ல விரும்பிய சாகசத்தைப் பற்றி! ஆனால் கொஞ்ச நேரத் துக்கு முன்னால்தான் அந்தக் கதையை ஆரம்பித்து முடிக்க முடியாமல் திணறியது, ஞாபகத்துக்கு வந்தது. உடனே பேச்சைக் கத்தரித்துக் கொண்டு அமைதிப் பட்டார்.

''எந்த எடத்துல சார் மடக்குனீங்க?''

''அவன் ரண்டு மூணு பர்லாங் தாண்டியில்ல போயிட் டான்''

''அப்பறங்க சார்...''

''அப்பறமென்ன... வேகமாப்போயி அவன முந்திக் கிட்டுப் போய் குறுக்க சைக்கிள நிறுத்துனே. ஆள் அரண்டுட்டான். சட்டையெப் புடுச்சு இழுத்து நிறுத்தி செவுனில ரண்டு போட்டனா, ஆள் காலப் புடுச்சுக்கிட்டுக் கெஞ்ச ஆரம்பிச்சுட்டான்...''

www.padippakam.com



சொல்லச் சொல்ல அவருக்கே ரொம்ப உற்சாகமாகி விட்டது. ஒரு வேளை இப்படியெல்லாம் நடந்திருக்கும் போலத்தானிருக்கிறது என்று தோன்றிற்று அவருக்கு.

"அப்பறங்க சார்... உட்டுட்டிங்களா?"

"உட்டுடுவனா? ரெண்டு சக்கரத்து மௌத்தையும் புடுங்கிக்கிட்டு உருட்டிக்கிட்டுப் போடான்னு உட்டுட் டேன்..."

"கேஸ் போட்டுருக்கலாங்க சார்..."

"கெடக்கறான் கழுத..."

கோஷ்டித் தகராறைப் பற்றி அப்புறம் யாரும் பேச் செடுக்கவில்லை.

"சரி வாங்க சார்... ரொம்பக் களச்சுப் போயிருக் கீங்க, எதாச்சும் சாப்புடுங்க..." என்று கடைக்காரன் பரிவோடு அழைக்கவும் மறுக்காமல், உண்மையில் ரொம்பக் களைத்துப் போனவரைப் போல முகத்தை வைத்துக் கொண்டு போய் உட்கார்ந்தார்.

கடைக்காரன் ரொம்பத் தாராளமாக டிபன் வகையறாக் களைப் பரிமாறினான். பசி, வேகமாகச் சாப்பிடத் தொடங்கினார்.

பாதி வயிறு நிரம்பினதற்கப்புறம்தான் அவருக்கு, எங்கே, கடைக்காரன் சாப்பிட்டதற்குக் காசு கேட்டுத் தொலைப் பானோ என்று தோன்றிற்று. யோசித்தார்.

சாப்பிட்டு முடித்த பின்னால் கடைக்காரனை தனியே அழைத்து, லைசென்ஸ் இல்லாமல் முனிசிபாலிடிக்குச் சொந்தமான இடத்தில் எப்படிக் கடை வைக்கப் போயிற்று என்று பிடித்துக் கொண்டார்.

கடைக்காரன் என்னென்னவோ சொல்லி அவரைச் சமாதானப் படுத்தப் பார்த்தான். கடைசியில் டிபன்

படிப்பகம்

www.padippakam.com



சாப்பிட்டதற்குக் காசு கேட்காததோடு ஒரு அய்ந்து ரூபாய்த் தாளையும் ரகசியமாய் இவர் கையில் திணித்து விட்டான்.

இவர், எதிர்த்த பெட்டிக் கடையில் சிகரெட் ஒன்றை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டு கம்பீரமாய் (அது அந்த உத்தியோகத்துக்கே உரித்தான ஒன்று) வீட்டை நோக்கி நடந்தார்.

கொஞ்ச தூரம் போனதும், சட்டென்று இவருக்கு சைக்கிளில் லைட் இல்லாமல் ஓடித் தப்பிய இளைஞன், இவரைப் பார்த்து விழுந்து, விழுந்து சிரிப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது.

எவ்வளவு முயன்றும் அவரால் அந்த நினைப்பை உதற முடியவில்லை.

□ —1984.

## ஒரு விமர்சனம் :

'வாலில்லாத நரிகள்'

உலக இயக்கம் முரண்பாடுகளால் நிகழ்வது. வாழ்வும் முரண்பாடுகள் மிக்கது. ஒரு போலீஸ்காரனின் வாழ்வை முன் வைத்து, வாழ்வு முரண்பாடுகளின் தொகுப்பாக இருப்பதை வெளிப்படுத்துகிறது இக் கதை. அவரது நிலையை எண்ணும் பொழுது பரிதாபம் ஏற்படுகிறது. ஆனால் அவரது செயல்களால் அவர் மீது நமக்குச் சினம் ஏற்படுகிறது. போலீஸ்காரன் தன் மகனுக்கு வேலை வாங்கிக் கொடுக்க முடியாமல் திண்டடுகிறார். ஆனால் டீக் கடைக்காரனின் மகனுக்கு வேலை வாங்கிக் கொடுப்

www.padippakam.com



பதாகக் கூறிக் கொள்கிறார். சைக்கிளில் லைட் இல்லாதவனைப் பிடிக்க லைட் இல்லாத சைக்கிளில் செல்கிறார். சட்டவிரோதக் கும்பலுக்குப் பயப்படு கிறார்; ஆனால் அப்பாவி டீக்கடைச்காரனை மிரட்டு கிறார். கத்திக் குத்துப்பட்ட கோஷ்டித் தகராறில் ஆர்வம் காட்டாதவர் லைட் இல்லாமல் போகிற வனைப் பிடிப்பதில் ஆர்வம் கொள்கிறார். சாராய வியாபாரி கொடுத்தனுப்பிய கோழி, மீன், முட்டை வகையறாவை சப்-இன்ஸ்பெக்டர் உண்டு திளைக் கிறார். முனிசிபாலிடியில் லைசன்ஸ் வாங்கியிராத கடைக்காரனிடம் போலீஸ் சாப்பிட்டுவிட்டு மிரட் டிக் காசு கொடுக்காமல் செல்கிறார். இப்படி முரண் பாடுகளின் தொகுப்பாக உள்ள போலீஸ்காரனின் இடத்தில் நாம் நம் ஒவ்வொருவரையும் பொருத்தி வைத்துப் பார்த்துக் கொள்ளலாம். அடுத்தவன் செய்து வரும் குற்றங்கள் நமக்கு இலாபம் தரும் மூலதனங்களாக இருப்பதால் குற்றங்கள் ஓங்கி வளர வேண்டும் என்பதே நமது உன்னத இலட்சியங்களாக இருக்கின்றன. மேலும் 'அதிகாரம்' என்னும் வன்முறையை ஒவ்வொரு மனிதனும் அடுத்தவன் மீது பிரயோகித்து வருகின்றான். சப்-இன்ஸ்பெக்டர் போலீஸ்காரன் மீது— போலீஸ்காரன் டீக்கடைக் காரன் மீது. நம் மீது நம் அதிகாரிகள்— அரசு. நாம் நமது மனைவி மீது— பிள்ளைகள் மீது— மாணவர் கள் மீது. இப்படி அதிகாரம் ஒவ்வொருவருக்குள்ளும் செயல்படுவதை நுட்பமாகவும் வாழ்வு, முரண்பாடு களின் மூட்டையாகக் கிடப்பதையும் எளிமையான தோற்றத்தில் இக்கதை பேசுகிறது. எளிமை அழகானது அல்ல என்று சொல்லிவிட முடியுமா?

—கோவை வாணன்.

www.padippakam.com

# தேய்வு

மறுபடியும் அவனுக்கு வயிற்று வலி வந்தது

வயிறு பிசைந்து பிசைந்து வலியெடுக்கத் துவங்கியது. குல்டபுரண்டு மேல் நோக்கி வருவது போல் உணர்வு ஏற்பட்டது. வாய் முழுக்க ஜலம் ஊறி நூல் நூலாய் வழிந்தது. மயிர்க்கால்கள் சிலிர்த்தன. நெற்றிப் பொட்டு விண் விண் என்று தெறித்தது. விழிகள் மேல் நோக்கிச் செருகின. உடம்பு முழுவதும் படபடவென்று நடுங்கத் துவங்கியது.

இரண்டு கைகளாலும் வயிற்றை இறுகப் பிடித்துக் கொண்டு 'ம்மா' என்ற முனகலுடன் கீழே உட்கார்ந்தான். பத்து விரல்களாலும் வயிற்றைக் கசக்கினான். தரையில் குப்புறக் கவிழ்ந்து படுத்தான். அப்படியும் இப்படியுமாக உருண்டான்.

'ம்...ம்மா'.

வேதனை தெறிக்கும் முனகல்கள் அவனிடமிருந்து வெளிப் பட்டன.

பக்கத்து டேபிளில் வேலை செய்து கொண்டிருந்த அவனுடைய சக தொழிலாளி அப்பொழுதுதான் அவனைக் கவனித்தான். பதறிப் போனவனாய் வேலையை நிறுத்தி விட்டு அவனருகில் ஓடி வந்தான்.

ப—4

படிப்பகம்

www.padippakam.com



''சுந்தரம்... என்னப்பா... என்னாச்சு...?''

''இவ்வளவு நேரமா நல்லாத்தான் இருந்தான்.'' அனுதாபக் குரல்கள் நெருங்கி வந்தன. இரண்டு பேர் அவனைத் தூக்கி உட்கார வைத்தார்கள். ஒரு தொழிலாளி அவனது தோளின் மேல் அவனைச் சாய்த்துக் கொண்டான்.

''சுந்தரம்... சுந்தரம்... இத பாருப்பா... என்னப்பா ஆச்சு...?''

இவன் பதில் பேச முடியாதவனாய் முழங்கால்களின் மேல் முகத்தைப் புதைத்துக் கொண்டான். ஒரு குளிர்ந்த கை அவன் தலையைத் தொட்டு நிமிர்த்திற்று.

''சுந்தரம் என்னப்பா ஆச்சு...?''

அவன் விழிகளில் நீர் படர அந்தக் கைக்குரிய முகத்தைப் பார்த்தான். கனிவு பொங்கும் அந்த முகம் தனது சக தொழிலாளியினுடையது என்பதைப் புரிந்து கொண்டு வலியின் வேதனை இழையோடுகிற குரலில் சொன்னான்.

''வயித்து வலி தாங்க முடியல...''

''வயித்துவலியா... என்னப்பா திடீர்னு...? காலை யிலே என்ன சாப்பிட்டே...?''

''திடீர்னு இல்ல... நாலஞ்சு நாளாகவே இருர்குது...?''

''நாலஞ்சு நாளாவே இருக்குதா? அப்புறம் ஏப்பா வேலைக்கு வந்தே...? லீவு போட்டுட்டு ஆஸ்பத்தி ரிக்குப் போய் பார்க்கலாமில்ல...?''

அவனைச் சுற்றிலும் அனுதாபமுள்ள பேச்சுக் குரல்கள் சூழ்ந்தன. இரக்கமுள்ள பார்வைகள் படர்ந்தன. இளம் விடியலில் படருகிற மெல்லிய சூரிய வீச்சுப் போல அவைகள் அவன் மனசுக்கு ஒத்தடம் கொடுப்பவையாய்... இதமாய் இருந்தன.

www.padippakam.com



ஆனால், வயிற்றுவலி நின்ற பாடில்லை... நேரம் ஆக ஆக வலி கடுமையாயிற்று. கண்களில் கதகதவென்று நீர் கூட்டிற்று. பற்களை நெறுநெறுவென்று கடித்துக் கொண்டான்.

''சுந்தரம்... சுந்தரம்...!''

''ம்... ம்...'' அவன் வேதனையினூடே முனகினான்.

''என்னப்பா... ரொம்ப வலிக்குதா...?''

''ம்... ம்... தாங்க முடியலப்பா...''

சில வினாடிகள் கனத்த நிசப்தம் நிலவியது. பிறகு...

''என்னப்பா செய்யலாம்... ஆசுபத்திரிக்குக் கூட்டிப் போவமா...?''

''ஆஸ்பத்திரிக்கு எப்பிடிப்பா கூட்டிப்போக முடியும்... மொதலாளி வேற கடைவீதி போயிட்டாரு... நம்ப கிட்டயும் கையில காசு இல்ல...''

ஒரு வயதான தொழிலாளி சொன்னார்.

''ஆஸ்பத்திரிக்குக் கூடப் போக வேண்டியதில்ல... சோடாவில் உப்புப் போட்டுக் குடிச்சா வயித்துவலி டக்குனு போயிரும்...''

''அப்படீன்னா யாராச்சும் போய் ஒரு சோடா வாங்கிட்டு வாங்கப்பா...''

''சோடா வாங்கியாறதுக்கு இங்க எங்கப்பா கடை யிருக்குது...? ஒரு மைலுக்கு மேல் போனாத்தான் கடை...''

''ஆருகிட்டெயும் சைக்கிள் இல்லியா...?''

''இல்லியே... பொன்னுச்சாமி ஒருத்தந்தான் நம்ம பட்டறையில் சைக்கிள் வெச்சிருக்கிறவன்... அவன் இன்னைக்கு வரல...!''

www.padippakam.com



''அப்ப என்னப்பா செய்யறது...?''

''ஒண்ணு செஞ்சா நல்லாப் போகும்...'' என்று மீண்டும் அந்த வயதான தொழிலாளியின் குரலைக் கேட்டு எல்லோரும் ''என்ன... என்ன'' என்று கேட்டார்கள்.

''சோடா இல்லாட்டிக் கூடப் பரவாயில்ல... சும்மா பச்சத் தண்ணியில உப்புப் போட்டுக் குடிச்சாக் கூட வலி நின்னு போயிடும்... எனக்கு அடிக்கொருக்கா வயித்து வலி வரும். நான் அப்படித்தான் கொஞ்சம் பச்சத் தண்ணில நெறைய உப்புப் போட்டு நல்லாக் கலக்கி கண்ணெ மூடிக்கிட்டுக் குடிச்சிடுவேன்... சித்த நேரத்துல வலி நின்னுடும்...''

''அப்ப அப்பிடியாச்சும் குடுப்போம்... வலி பொறுக்க முடியல போல இருக்கு. துடிக்கிறான்...''

''ஏப்பா... பச்சத் தண்ணியில உப்புப் போட்டுத் தர்றோம்... குடிக்கிறியா? குடிச்சா நல்லா போயிடுமாம்?''

இவன் சரியென்பது போல் தலையாட்டினான். ஊர்ந்து மறைந்து மறைந்து சில நிமிடங்களுக்கப்புறம்... இவனிடம் அரை டம்ளர் உப்புத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதைக் கையில் வாங்கி சில வினாடிகள் உற்றுப் பார்த்தவாறிருந்தான்.

''ஏய்... கண்ணெ மூடிக்கிட்டு குடிச்சிடுப்பா...''

''ஆமாப்பா ரண்டு மடக்குத்தான்... கண்ணெ மூடிக்கிட்டு குடிச்சிடுப்பா...!''

அவனுக்குத் தயக்கமாய் இருந்தது. பார்க்கும்பொழுதே மனசுக்குள் அருவருப்புத் தட்டிற்று குமட்டிக் கொண்டு வந்தது. ஆனால் வயிற்றுவலி பொறுக்க முடியாததாயிருந்தது. எனவே கண்களை இறுக மூடிக்கொண்டு

www.padippakam.com



அண்ணாந்து கடகடவென உப்பு நீரை வாயில் ஊற்றி இரண்டே மடக்கில் குடித்து முடித்தான். உடனே குமட்டிக் கொண்டு வந்தது... குடலைப் புரட்டியது.

''கொஞ்சம் தண்ணீ வேணும்...'' என்று ஜாடை காட்டி மெல்லிய குரலில் கேட்டான்.

''ஏய்... கொஞ்சம் தண்ணீ குடுங்கப்பா... தண்ணீ'' என்று கேட்ட நாலைந்து குரல்களைத் தொடர்ந்து ஒரு செம்புத் தண்ணீர் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் ஒரு மடச்குத் தண்ணீர் வாயில் ஊற்றிக் கொப்பளித்துக் கீழே துப்பிவிட்டு, கொஞ்சம் குடித்தான்.

''இப்ப் வலியெப்படிப்பா இருக்குது...'' என்று அய்ந்தாறு பேர் ஒரே குரலில் கேட்டார்கள்.

''இன்னும் அப்படியே தான் இருக்குது, கொறையில''

''அதெப்படி உடனே குறையும், குடிச்சு கொஞ்ச நேரம் ஆகணுமில்ல...?''

''சரி... சரி...எல்லாரும் போயி வேலையெக் கவனிங்க. மொதலாளி வர்ற நேரமாச்சு. வந்தாக்கத் திட்டு வாரு...''

''சுந்தரம்... நீ வேலை செய்ய வேண்டாப்பா... மொதலாளி வர்ற வரைக்கும் அப்படியே கொஞ்ச நேரம் உக்காந்திரு... மொதலாளி வந்தா சொல்லிட்டு ஒரு நாலு நாள் லீவு போட்டிட்டு ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பாரு...''

எல்லோரும் ஆளுக்கொரு யோசனையைச் சொல்லிவிட்டு அவரவர் இடத்துக்குப் போய் வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

அவன் அந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

நோயை நினைக்கையில் பயம் ஏற்பட்டது.

www.padippakam.com



ஆறு மாசங்களுக்கு முன்னால் இதேபோல அவனுக்கு வயிற்றுவலி வந்தது. குடலில் புண் ஏற்பட்டிருந்தது. மூணு மாதங்கள் நோயின் கொடூரமான தாக்குதலை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அதில் ஜெயித்த பொழுது முதலாளியிடம் நிரந்தரமான கடன் ஏற் பட்டிருந்தது. பட்டறை வேலை உடம்புக்கு ஆகா தென்றும், நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் டாக்டர் சொல்லியிருந்தார். மூணு மாசங்களுக் கப்புறம் இப்பொழுது மறுபடியும் வயிற்றுவலி வந்திருக் கிறது... உஷ்ணமான பட்டறை வேலை நோயை மறுபடியும் கூட்டி வந்திருக்க வேண்டும்...

''என்னடா சுந்தரம்... உட்கார்ந்துட்டே...?''

அவன் நிமிர்ந்து பார்த்தான். முதலாளி பட்டறைக்குள் வந்து கொண்டிருந்தார். அவன் மனசில் இனமறியாத வாறு ஒரு பயத்தின் மெல்லிய நிழல்படிந்தது. தடுமாற்றத் துடன் எழுந்து நின்றான்.

''வயித்துவலிங்க முதலாளி... தாங்கமுடியல...'' என்று சொல்லிவிட்டு அவர் முகத்தை ஏறிட்டான். மழையில் நனைந்த கோழிக்குஞ்சின் இறகு போல அவனுடைய கண்ணிமைகள் நனைந்து ஒட்டிப் போய் இருந்தன. நீரில் பிரதிபலிக்கும் சூரிய ஒளிபோல் நீர்த்திரையிட்ட அவன் கண்கள் மின்னின...

ஒரு அனுதாபத்தை— ஓர் இரக்கமுள்ள பார்வையை முதலாளியின் முகத்திலிருந்து அவன் எதிர்பார்த்தான்.

''வயித்து வலிங்க மொதலாளி...''

முதலாளியின் முகம் சுருங்கிற்று. ஒரு வெறுப்புள்ள பார்வை அவன்மேல் படிந்தது.

''ஆமா...உனக்கு எப்பப் பார்த்தாலும் வயித்து வலி தான்டா... பட்டறைக்கு வந்தாலே உனக்கு வயித்து

www.padippakam.com



வலி வந்துடும் போல இருக்குது... வேலைன்னா உன்னோட ஒடம்பு வளையாது போல இருக்குது...?''

அவன் பரிதாபமான குரலில் சொன்னான்.

''இல்லீங்க மொதலாளி. நாலஞ்சு நாளாகவே வயித்துவலி தாங்க முடியலீங்க மொதலாளி.''

முதலாளி கடுகடுப்புடன் சொன்னார்.

''அப்புறம் என்ன மயிருக்கு வேலைக்கு வந்தே...?''

அவன் எதுவும் பேசத் தோன்றாதவனாய் நின்றான்.

''ச்சே...இந்த வயித்துவலி...புடிச்ச கேசெல்லாம் நம்ம பட்டறைக்குத்தான்வந்து சேருது... மொதல்ல இந்தச் சனியனயெல்லாம் ஒழிச்சிக் கட்டிட்டு நல்ல உருப்படியான ஆளுகள கொண்டாந்து வெக்கணும்... அப்பத் தான் பட்டறை உருப்படும்...'

அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான். அவன் விழியோரத்தில் துளிர்த்துக் கொண்டிருந்த நீர்த்துளிகள் கன்னங்களில் இறங்கி உதட்டோரங்களைத் தொட்டது... உப்புக் கரித்தது...

''என்னடா... வேல செய்யறதுன்னாச் செய்யி... இல்லாட்டி எடத்தக் காலி பண்ணு...இங்க பட்டறைக் குள்ள நின்னு கண்ணெக் கசக்கிக்கிட்டு நிக்காத... இது வேல செய்யற இடம்...''

சக தொழிலாளர்களின் பரிதாபமான பார்வைகள் அவன் மேல் படர்ந்தன.

''என்னடா... வேல செய்யறதுன்னாச் செய்யி... இல்லாட்டி எடத்தக் காலி பண்ணுன்னு சொன்னனில்ல... அப்புறம் ஏண்டா பொட்டச்சி மாதிரி

படிப்பகம்

www.padippakam.com



அழுகறே...? உன்ன மாதிரி ஆளுக மொகத்தில யெல்லாம் முழிச்சா சனியந்தான் புடிக்கும்...''

அவன் தலை குனிந்தவாறே எழுந்து தனது இடத்துக்குப் போனான். தனது டேபிளின் மேல் பீஸை விரித்து பிரிண்ட் கட்டையை மெழுகுக்குள் வைத்து ஸ்டவ்வைத் தூண்டிவிட்டான். தீ ஜ்வாலைகளின் உஷ்ணத்தால் மெழுகு சூடேறத் தொடங்கியது.

முதலாளி தன்னுடைய ஈஸிச்சேரை இழுத்துப் போட்டுச் சாய்வாக உட்கார்ந்தார். தலைக்கு மேல் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தார். சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்து சுவாரஸ்யமாய் இழுத்து சுருள் சுருளாய் புகையை வெளியிட்டார். தியானம் செய்கிறவர் போல் கண்களை மூடிக் கொண்டார்.

உள்ளுக்குள் சிகரெட்டின் சுவையை ஆழ்ந்து அனுபவிப் பது போலிருந்தது அவர் தோற்றம்.

—1980.

படிப்பகம்

www.padippakam.com

# இலக்கு

சிகரெட் தீர்ந்து போய்விட்டது.

கடைசி முறையாக ஒரு இழுப்பு இழுத்தான். உள்ளுக்குள் சென்ற புகை முழுவதும் மொத்தமாக வெளியேறும் வரை, எதிர்ச்சுவரில் ஒட்டப்பட்டிருந்த சினிமா போஸ்டரையே பார்த்துக் கொண்டிருந்தவன், சிகரெட் நுனியில் கனன்ற நெருப்பு விரல்களைத் தொட்டவுடன் சட்டென்று உணர்வு பெற்று, சிகரெட் துண்டை போஸ்ட்டரின் மேல் விசிறியடித்தான். போஸ்ட்டரின் மேல் பட்டு நெருப்புத் துண்டுகள் சிதறின.

''ஒவ்வொருத்தனும் பேரன் பேத்தி எடுத்திட்டானுக; இன்னும் பதினாறு வயது பொண்ணுகளோட அலைய றானுக...த்தூ...'' எரிச்சலுடன் முணுமுணுத்துக் கொண்டே ரயில்வே ஸ்டேசன் மணிக்கூண்டில் மணியைப் பார்த்தான்.

மணி ஆறரைதான் ஆகிறது.

இந்நேரத்தில் வீட்டுக்குப் போனால், நரகம்தான். இன்று ஞாயிற்றுக் கிழமையில்லை... அம்மா வீட்டில் தான் இருப்பாள்... ஞாயிற்றுக்கிழமையானால், அம்மா இந் நேரம் சினிமாக் கொட்டகையில் இருப்பாள்...

பசிக்கிறது.

www.padippakam.com



சிகரெட் வாங்கினதுக்குப் பதில் ஒரு டீ சாப்பிட்டிருக்க லாம். சிகரெட் புகை பசியைப் போக்கி விடுவதில்லை தான்... ஆனாலும்... சிகரெட்டை விட முடிகிறதில்லை... இதைப் பழக்கப்படுத்திக் கொண்டது தவறாகத்தான் போய்விட்டது; பழகும்போது சுவாரசியமாகத்தான் இருக்கிறது யாரும் பார்த்துவிடப் போகிறார்கள் என்று பயந்து பயந்து...ரகுவோடு சேர்ந்து கொண்டு பார்க்கில்... ...செடி மறைவில்... அப்புறம் வீட்டில் அப்பா, அம்மாவுக் குத் தெரியாதபடி, பாத்ரூமில் இருந்து கொண்டு... புகை பிடிக்கிறதில் அலாதியானதொரு இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், எல்லோருக்கும் தெரியத் துவங்கி, இவன் சிகரெட் குடிப்பதென்பது ஒரு சாதாரண விஷயம் ஆகி விட்டபின் அதிலுள்ள சுவாரஸ்யம் போய் அலுப்புத் தட்டத் துவங்கியது. ஆனாலும் நிறுத்திவிட முடிய வில்லை. சனியன் பிடித்த மாதிரி... இது இல்லாவிட்டால் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருக்கிறது. ஆனால் ரகு மட்டும் முதல் சிகரெட்டின் சுவாரஸ்யத்துடனேயே இன்னும் சிகரெட் பிடித்துக்கொண்டிருக்கிறான்.

ரகு வீட்டில் இருப்பானோ என்னவோ...?

சைக்கிளை எடுத்தாச்சு, ஏறிக்கொண்டு போகலாம்தான் ...ஆனால் லைட் இல்லை. வழியில் எவனாவது பார்த்துப் பிடித்துக் கொண்டால் அப்புறம் அதற்கு வேறு தண்டம் கட்டணும்.

அப்பாவிடம் 'லைட் வேண்டும்' என்று கேட்டால், 'நீங்க கிழிக்கிற கிழிக்கு லைட் வேற வேணுங்களோ? சைக்கிளே தெண்டத்துக்கு' என்பார். என்னத்தைத்தான் கிழிக் கணுமோ தெரியலை. போகிற போக்கைப் பார்த்தால் "டிகிரி" சர்ட்டிபிகேட்டுகளைத்தான் கிழித்துப் போட வேண்டும் போல இருக்கிறது... அவ்வளவு எரிச்சல்...

www.padippakam.com



போனவாரம் பஞ்சர் ஒட்டுவதற்கு என்று இரண்டு ரூபாய் கேட்டதற்கே கொடுக்கவில்லை அதைக்கூட ரகுவிடம் தான் வாங்கவேண்டி வந்தது. ரகுவுக்கு இன்னும் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. ரகு இந்நேரம் அதை மறந்திருப்பான். அவனுக்கு இதெல்லாம் சில்லறை விஷயங்கள்; இதே போல் நிறையப் பேருக்கு அவன் கொடுத்திருக்கிறான்.

அவனும் வேலையில்லாதவன்.

ஆனால் அவன் அப்பா கலெக்டர் ஆஃபீஸில் பொறுப் பான பதவியில் இருக்கிறார். சம்பளம் மட்டுமல்லாமல் கிம்பளம்கூட நிறைய வருகிறது... வேலையைப் பற்றிய கவலை அவனுக்கில்லை... பிசினஸ் செய்யப் போவதாகச் சொல்லுகிறான்.

எல்லா விஷயத்திலும் ரகு இவனைவிட அதிர்ஷ்டக் காரன்தான். அவன் சாப்பிடும்போது அவன் அம்மா பக்கத்தில் இருந்து கவனித்துக் கொள்கிறாள்.

‘ரகு, நெய் போட்டுக்க... இன்னும் கொஞ்சம் பொரியல் வெச்சுக்க... சாப்பாட்டை ஏன் பாதியிலே வெச்சுட்டே?... வயத்துல ஏதாவது ட்ரபுளா...? டாக்டர் கிட்டப் போக லாமா? ஹார்லிக்ஸ் கலக்கட்டுமா?... என்று அன் பொழுகக் கேட்டுக் கொண்டேயிருப்பாள். அவளுக்கு ரகு இன்னும் சின்னக்குழந்தை மாதிரி.

இவனுக்கும்தான்... அம்மா இருக்கிறாள். இவனைப் பார்த்தவுடனேயே அம்மாவின் முகம் கடுகடுத்துப் போய் விடும். சாப்பாட்டைப் போட்டு குழம்பை ஊற்றும் வரை பேசாமல் இருப்பாள். சோற்றைப் பிசைந்து ஒரு வாய் போட்டு விட்டால் போதும்... ஆரம்பித்து விடுவாள். இவனுக்கு அதற்கு மேல் சாப்பிடப் பிடிக்காது. கால் வயிறுகூட நிரம்பாது. உப்புப் போதவில்லை என்றால்

www.padippakam.com



கூடக் கேட்கமாட்டான். தப்பித் தவறி, ''உப்புப் பத்தலை...'' என்று கேட்டுவிட்டால் போச்சு...

''இத மட்டும் ஒனத்தியா... கேட்டு வாங்கிக்கத் தெரியுது... ஆனா ஒரு வேல பாத்துப் போகத் தெரியல... இதுக்கு இருக்கிற ஒனத்தி அதுக்கு இருந் தால்ல ஆகும் என்று சகட்டு மேனிக்கு பொரிந்து தள்ளுவாள்.

என்னவோ தெருவில் போகின்றவனை கூப்பிட்டு 'இந்தா வேலை' என்று கொடுக்கிறது மாதிரியும், இவன் வேண்டா மென்று சொல்லிவிட்டு வந்துவிட்ட மாதிரியும்!

வேலை கிடைக்காமல் போனதற்கு யார் என்ன செய்ய முடியும்? ஊரில் உள்ள அப்பாமார்கள் எல்லோரும் பையன்கள் படித்து முடித்தவுடனே யார் யார் கையையோ காலையோ பிடித்து வேலை வாங்கித் தந்துவிடுகிறார்கள். இங்கு என்னடாவென்றால் நிலைமை தலைகீழ். இவனாகப் பார்த்து ஒரு வேலை தேடிப் பிடித்தாலும் கூட எங்காவது ஒரு இரண்டாயிரம் ரூபாய் புரட்டிக் கொடுக்க முடியலை. வந்த ஒரேயொரு வாய்ப்பும் கை நழுவிப் போய் விட்டது. கேட்டால், இரண்டு பொட்டப் புள்ளை களுக்குக் கல்யாணம் பண்றதுக்கே முடியலை; இதுல லஞ்சம் கொடுக்கறதுக்கு எங்க போறது என்ற புலம்பல் வேறு...

அப்பா சொல்வது கூட வாஸ்தவமாகத்தான் தெரிகிறது... ஜன்னல் கம்பிகளோடு ஐக்கியமாகி, தெருவையே வெறித்துக் கொண்டிருக்கும் இரண்டு அக்காக்கள்... அவர்களுக்குக் கல்யாணம் செய்யத்தான் வேண்டும். வேலையில்லாமல் இருக்கிறதைக் காட்டிலும் அது பெரிய வேதனையோ?... பவுன் விற்கிற விலையைப் பார்த்தால் அக்காக்களுக்கு கல்யாணம் செய்ய முடியும் என்று தோன்றவில்லை. வரதட்சணை வாங்காமல் யார் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள்? 'வாங்க

படிப்பகம்

www.padippakam.com



மாட்டேன் வரதட்சணை'' என்பதெல்லாம் குமுதத்தில் போட்டோ போட்டுச் சொல்லிக் கொள்வதோடு சரி...

ஆனாலும் அப்பா மீது கோபம்தான். லஞ்சம்இல்லாமல் யார்தான் வேலை கொடுக்கப் போகிறார்கள்? என்ன செய்வதோ? ஒரு வேளை வாழ்க்கை நகராமல் இப்படியே நின்று போய்விடுமோ?...

'சுருக்'கென்று மறுபடி வயிற்றுக்குள் பசியை உணர்ந்தான் ரகு. வீடு கிட்டத்தில்தான் இருக்கிறது. அவன் வீட்டில் இருப்பானோ என்னவோ...?

ரகுவின் வீட்டை தூரத்திலிருந்து பார்த்த பொழுது ஏமாற்றமாக இருந்தது. நெருங்கிச் சென்று பார்த்த பொழுதுதான் வீடு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது தெரிந்தது. சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்திப் பூட்டிவிட்டு கதவைத் தட்டினான்.

''யாரது...'' என்ற குரலைத் தொடர்ந்து வந்து கதவைத் திறந்தாள் ரகுவின் அம்மா.

''யார்...? மதுசூதனனா...வா...வா... என்று வாய் நிறையச் சிரித்தவாறே வரவேற்றாள், ரகுவின்அம்மா.

''எங்க... நாலஞ்சு நாளா இந்தப் பக்கம் ஆளையே காணோம்?''

இவன் அம்மாகூட இப்படி அன்போடு நடந்துகொள்கிற தில்லை. இவனுக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு அம்மா வந்து வாய்த்தாள்......? அடுத்த ஜன்மம் என்று ஒன்று இருந்தால், ரகுவின் அம்மாவைப் போல் அன்பைப் பொழி கின்ற அம்மா வின் வயிற்றில் வந்து பிறக்கணும்...

ஒரு வேளை இவன் அப்பாவும் ரகுவின் அப்பாவைப் போல் நல்ல வேலையில் இருந்து... வசதியான வாழ்க்கை யுடன்... அவன் வேலைக்குப் போய்த்தான் தீர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தால்... ரகுவின் அம்மாவைப் போல் இவன் அம்மாவும்...

www.padippakam.com



''ஏன் நின்னுக்கிட்டேயிருக்கே... உட்காரு...'' என்று ரகுவின் அம்மா சொன்னதைக் கேட்டவுடன், சட்டென்று உணர்வு பெற்று ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டான். மெத்தென்று சுகமாக இருந்தது. ஆனால் அந்த சுகத்தை அனுபவிக்க முடியாமல் வயிறு...

''ரகு சாப்பிட்டுக்கிட்டு இருக்கான்... நீயும் தான் கையெக் கழுவிட்டு வாயேன், சாப்பிடலாம்.''

''இல்லங்கம்மா... பரவாயில்ல... அவன் சாப்பிட்டு வரட்டும், நான் இப்பத்தான் சாப்டிட்டு வந்தேன்.''

சம்பிரதாயமாக மறுத்தான் ரகு; மறுபடியும் அழைப்பாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவள் பதில் பேசாமல் உள்ளே சென்றாள். இவனுச்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் அழைத்தவுடனே சென்றிருக்கலாம்... தவறாக நினைக்க மாட்டாள். ஆனாலும் மனதினுள் ஒரு தயக்கம்... ஒரு வேளை ரகு மறுபடி அழைப்பான்.

டேபிளின் மேல் கிடந்த வாரப் பத்திரிக்கைகளில் ஒன்றை எடுத்துப் புரட்டினான். எதிலுமே மனம் ஓடவில்லை. பக்கத்துப் பக்கம் நடிகைகளின் விரசமான புகைப்படங்களைப் பார்த்ததும் எரிச்சலுடன் மூடி வைத்தான்.

மறுபடி வயிற்றுக்குள் இரைச்சல்; குடல்கள் மகுடிச்சத்தம் கேட்ட நாகம் போல் புடைத்தெழுவதாய் ஒரு உணர்வு... ரகுவின் அம்மா காபியுடன் வந்தாள். சுவையான காபி. ஆனால் சுவைத்துக் குடிக்கிற நிலையில் இல்லை. பசி அடங்கினதாய் தெரியவில்லை. ரகு வந்து சாப்பிடக் கூப்பிடுவானோ என்னவோ!......

''என்ன மதுசூதனன்... 'சுவரில்லாத சித்திரங்கள்' பாத்தாச்சா...?'' என்று கேட்டாள் ரகுவின் தாய்.

''ம்......ம்......?''

www.padippakam.com



"சுவரில்லாத சித்திரங்கள்" பாத்தாச்சான்னு கேட்டேன்"

"பாத்தாச்சே... போன வாரம் ரகுவும் நானும் போனோம்..."

"என்ன... படம் எப்படியிருக்கு?"

"எனக்குப் புடிச்சிருக்கு" என்றான் இவன். ரகு இன்னுமா சாப்பிடுகிறான்.

"எனக்கு பிடிக்கலே..." என்றாள் ரகுவின் அம்மா.

இவன் சுவாரஸ்யமில்லாமல் கேட்டான் என்ன சொல்வதென்று பிடிபடவில்லை.

மறுபடி ரகுவின் அம்மாவே தொடர்ந்தாள்.

"இன்டர்வெல் வரைக்கும் நல்லாயிருக்கு. அப்புறம் ஒரே சோகம்... சகிக்கலை..."

"எதார்த்தமா எடுத்திருக்காங்க..." ரகு வருகிறானா என்று பார்வையைச் செலுத்திக்கொண்டே சொன்னான்.

"என்னதான் எதார்த்தமோ...? இந்தமாதிரியெல்லாம் காட்டினா சின்னக் குழந்தைங்க கெட்டுப் போயிட மாட்டாங்களா? பசி பொறுக்கலைன்னா திருடணுமாக்கும்?

இவன் அமைதியானான்.

"என்ன மதுசூதனன், 'அழியாத கோலங்கள்' பார்த்தாச்சா...?" என்று மறுபடி கேட்டாள் ரகுவின் அம்மா...

"இல்லை... பார்க்கலை..."

"அதைப் போய்ப் பாரு...ரொம்ப நல்ல படம். மூன்று சின்ன பையன்களோட செக்ஸ் உணர்வுகளை ரொம்ப

www.padippakam.com



ரியலா எடுத்திருக்கார் ... பாலுமகேந்திரா ...'' என்றாள் ரகுவின் தாய். எப்படித்தான் இப்படியெல்லாம் பேச வருகிறதோ இவளுக்கு? இவன் அம்மா இவனிடம் சிரித்துப் பேசியே இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஒரு வேளை இவன் நல்ல வேலையில் இருந்து...

''மதுசூதனன், 'மெர்குரிப் பூக்கள்' படிக்கறியா''? இந்தமுறையும் ரகுவின் அம்மா அவனைக் கலைத்தாள்.

''ம்...ம்...''.

''மொக்குரிப்பூக்கள்...பாலகுமாரனோட தொடர் கதை சாவியில் வருதில்ல...? அது எப்படியிருக்குன்னு கேட்டேன்...?''

இது ரொம்ப அதிகப்படி... இவன் அம்மாவுக்கு சமைய லறையையும் பக்கத்து பிள்ளையார் கோயிலையும் தவிர வேறெவுதும் தெரியாது.

இதற்குள் ரகு வந்தான். இவனைப் பார்த்து நிறைவாகச் சிரித்தான். பசியில்லாத, சாப்பிட்டு முடித்த திருப்தியான சிரிப்பு...

'என்னடா மது...எப்ப வந்தே...? சாப்பிட்டுட்டியா...?''

என்று கேட்டு உட்கார்ந்தான்.

''இப்பத்தான் வந்தேன்...'' என்று முதல் கேள்விக்கு மட்டும் பதில் சொன்னான். இரண்டாவது கேள்வியை மறுபடி ரகுவிடம் இருந்து எதிர்பார்த்தான்.

''காபி சாப்பிட்டியா...'' இரண்டாவது கேள்விக்கான பதிலை வாங்கிக் கொள்ளாமலே அவன் மூன்றாவது கேள்விக்குப் போனது இவனுக்கு ஏமாற்றத்தைத் தந்தது.

www.padippakam.com



வெறுமனே தலையாட்டினான்.

"என்னடா...? தலையாட்டறே...? காபி சாப்பிட்டியான்னு கேட்டேன்."

"ஜஸ்ட்...இப்பத்தான் சாப்பிட்டேன்..."

இன்னும் ஒரு கப் காபியாவது சாப்பிட்டால் தேவலை தான். கொஞ்சம் நேரத்திற்காவது வயிறு சத்தம் போடுவதை நிறுத்தி வைக்கலாம்.

"அப்புறம் மது இன்னைக்கு கிரிக்கெட் கேட்டியா?" என்று கேட்டான் ரகு. அவன் குரலில் ஒரு புதிய உற்சாகம்... திடீரென எழுந்து கொண்டது. கிரிக்கெட்டைப்பற்றிப் பேசுகிற பொழுதெல்லாம் எழுந்துகொள்கிற உற்சாகம்.

இவன் மௌனமாய் இருந்தான். ரகுவின் அம்மா உள்ளே போயிருக்கிறாள். ஏதாவது சாப்பிடக் கொண்டு வருவாளோ...? மிச்சர்... பிஸ்கட் என்று...

"என்னடா...! கேட்டது காதுல விழல? கிரிக்கெட்ல இந்தியா ஜெயிச்சிடுச்சு பாத்தியா...?"

"ஆமா ... பரவாயில்ல ... நல்லா விளையாடியிருக்காங்க."

என்றான். குரல் வறண்டிருந்தது. ஏதாவதொன்றைச் சொல்ல வேண்டும்மே என்கிற மாதிரி...

"என்னடா... எப்படியோ இருக்கே..." என்று கேட்டான் ரகு. தன்னுடைய உற்சாகம் நண்பனுடைய குரலில் எதிரொலிக்காததைக் கேட்டு...

"ஒண்ணுமில்ல... நீ சொல்லு..." என்று குரலில் போலித்தனமான உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னான்—

ப—5

www.padippakam.com



"கபில்தேவ் பாத்தியா...? பண்டாஸ்டிக்டா... இந்த மாட்சைப் பொறுத்த வரைக்கும் கபில்தேவ்தான் சிறந்த ஆட்டக்காரர்னு சொல்லலாம்."

உள்ளே சென்ற ரகுவின் அம்மா இன்னும் வரவில்லை. ஏதோ சத்தம் மட்டும் கேட்கிறது.

"ஏன் கவாஸ்கருக்கு என்ன...?' என்றான். இவனுக்கு ஈஸியாகத் தெரிந்த ஒரே கிரிக்கெட் பிளேயரின் பெயர் இந்த கவாஸ்கர்.

"என்ன இருந்தாலும் கபில்... கபில் தாண்டா... கவாஸ்கரையெல்லாம் மிஞ்சிட்டாரு... ம்ஹூம்... எனக்கு மட்டும் சான்ஸ் கெடச்சா... ஒரு தடவை பிரிஜேஷ் பட்டேலை எவளோ ஒருத்தி கிரெளண்டி லேயே கட்டிபுடிச்சு கிஸ் பண்ணினாளாமே? அப்படிக் கபில்தேவைப்நான் கட்டிப் புடிச்சு கிஸ் பண்ணு வேன்" என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தான்.

இவன் அசட்டுத்தனமாகச் சிரித்தான். உள்ளே போன ரகுவின் அம்மா சீக்கிரம் வந்தால் தேவலை. இந்த வயிறு வேறு...

"மது, இன்னிக்கு செகன்ட் ஷோ... முத்துக்குமார் தியேட்டருக்குப் போலாமா? 'அழியாத கோலங்கள்' போட்டிருக்கான்!" என்று கேட்டான் ரகு.

"அதுக்கென்ன...போகலாம்..." என்று இவன் சுரத் தின்றிப் பேசினான்.

"ஆனந்த விகடன்ல விமர்சனம் படிச்சியா...? பாராட்டியிருக்காங்க..."

"ஆமா... படிச்சேன்..."

www.padippakam.com



இதற்குள் ரகுவின் அம்மா வந்தாள். அவள் வெறுங் கையுடன் வருவதைப் பார்க்க இவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. இவ்வளவு நேரமும் ஏதோ ஒரு எதிர்பார்ப் புடன் அடங்கியிருந்த வயிற்றினுள் குபீர் என்று பசி மறுபடியும் எழுந்து கொண்டது.

''எங்க போறதா உத்தேசம்...?'' என்று கேட்டாள் ரகுவின் அம்மா.

''சினிமாவுக்குப் போகலாம்னு இருக்கோம்...அழியாத கோலங்கள்...'' என்றான் ரகு.

''போய்ப் பாருங்க... நல்ல படம்... இப்பத்தான் மதுசூதனன் கிட்டச் சொல்லிக்கிட்டிருந்தேன். இல்ல மதுசூதனன்...'' என்று இவனைப் பார்த்தாள்.

இவன் வெறுமனே தலையாட்டினான்.

''ரகு... படம் விட்டதுக்கப்புறம் மதுசூதனை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துடு...இ நட்டில அவ்வளவு தூரம் எப்படிபோறது...? என்ன மதுசூதனன்... படம் முடிஞ்சப்புறம் இங்கு வந்துடு... காலைல போக லாம்...'' என்று ரகுவின் அம்மா சொல்லி முடிப்பதற்குள் இவன் எழுந்து கொண்டான்.

''இல்லம்மா...எனக்கு வேற வேலையிருக்கு...நான் சினிமாவுக்கு வரலை...'' என்று சொல்லிவிட்டு அவர்கள் முகத்தை ஏறிட்டான். ரகுவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

''அப்ப...நான் வர்ரேன் ரகு... வர்றேங்கம்மா...'' என்று சொல்லிவிட்டு அவர்களின் பதிலுக்குக் காத்திராமல் வாசலை நொக்கி நடந்தான். ரகுவும் அவன் அம்மாவும் இவன் போவதையே அமைதியாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

www.padippakam.com



ஒரு வேளை அவர்கள் ஏதாவது சொல்லியிருப்பார்களோ...? 'மதுசூதன்...சாப்பிட்டுட்டுப் போகலாம்...' என்கிற மாதிரி.

சைக்கிளை எடுத்து உருட்டிக் கொண்டு ரோட்டுக்கு வந்தான். எதிரில் வந்த ஆள் யாருக்கோ மணி ஏழரை என்று சொல்லி விட்டுச் சென்றான். பசிக்கிறது. வீட்டுக்குப் போனால் சாப்பிடலாம். அம்மா இந்நேரம் வீட்டில் தான் இருப்பாள். இவனைக் கண்டவுடன் திட்டுவாள். பின்னால் சைக்கிள் மணிச்சத்தத்தைக் கேட்டு விலகிப் போனான். இரண்டு பேர் லைட் இல்லாத சைக்கிளில் இவனைக் கடந்து போனார்கள்.

சைக்கிளில் ஏறி வீட்டை நோக்கி ஓட்டினான். வழியெல்லாம் ஒரே இருட்டாக இருக்கிறது. சைக்கிளில் விளக்கு வேறு இல்லை.

— 1980.

www.padippakam.com

# மீறல்

"இப்பத்தான் குளியலே ஆயிருக்கா...? அனு நாம சினிமாவுக்குப் போறது இன்னிக்கு ஃபர்ஸ்ட் ஷோவுக்கு. நாளைக்கில்ல... தெரியுமோ...?"

அனுவிடம், ராஜசேகரன் இப்படிக் கிண்டலிட்டுச் சிரித்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. அவனிடம் அனுவுக்குப் பிடித்ததே இந்தக் கிண்டல்தான். எத்தனைதான் கோபமாக இருந்தாலும் அவனுடைய கிண்டலுக்குச் சிரிக்காமல் இருக்க முடியாது. கல்யாணமான புதிதிலெல்லாம் அனுவின் கோபத்தைச் சமாளிக்க ராஜசேகரன் பிரயோகிக்கிற முதலும் கடைசியுமான அஸ்த்திரமே இதுதான். சில சமயங்களில் அவனுடைய கிண்டல்களுக்கெனவே அனு பொய்யாய்க் கோபம் கொள்வாள்.

அந்தத் தினங்களெல்லாம் நினைவுக் கிணற்றின் ஆழ் நீருக்குள் எப்போதோ அமிழ்ந்து போய் விட்டவை. மனசின் பாய்ச்சலில் எப்போதாவது அந்தத் தினங்கள் நினைவின் விளிம்புகளில் மின்னி மறையும். அப்போதெல்லாம் கண்கள் இலக்கற்று வெறிக்கும். உதடுகளில் கனவுப் புன்னகை விரியும்.

அந்தத் தினங்கள் மறுபடியும் திரும்ப முடியாதவைகளென நினைத்திருந்தாள்.

"நானெல்லாம் அஞ்சு மணிக்கு முன்னாலேயே, கதவைப் பூட்டிட்டு வாசல்ல நிப்பேன்... என்னைச்

www.padippakam.com



சொல்லிட்டு நீங்கதான் இன்னம் கைலியெக்கூட மாத்தாம புத்தகமும் கையுமாக் கெடந்துக்கிட்டிருக் கீங்க... அத்தான் இன்னிக்கு மட்டும் சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போகாம ஏமாத்துனீங்க... அப்புறம் நா... அழ ஆரம்பிச்சுடுவேன் ஆமா...''

சிணுங்கி முகங்கோணி நின்றாள். ஈரப்பாவாடை யிலிருந்து தண்ணீர் கசிந்து காலடியில் தேங்கியது. அவளு டைய உடம்பிலிருந்து வீசிய சோப்பு வாசனையும், கிழங்கு மஞ்சளின் வாசனையும் அவளுக்கே ரொம்பவும் பிடித்தமானவையாயிருந்தன. அவனுக்கும்கூட இந்தச் சிணுங்கல்களும், முகச்சுளிப்பும், வாசனைகளும் ரொம்ப வும் பிடித்தமானவை. அனு எப்படி எதிர்பார்த்தாளோ அப்படியே ராஜசேகரன் சொன்னான்,

''சரி சரி, நீ அழ ஆரம்பிச்சுடாதம்மா தாயே...''

புத்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு எழுந்து அவளை நெருங்கி அணைத்து, மேவாயைத் தொட்டு, நாணத் தினால் தரை பார்த்துக் கிடந்த முகத்தை நிமிர்த்தி, நெற்றியில் முத்தமிட்டு, கன்னக் கதுப்புகளைக் கிள்ளி, செவியருகே, உதடுகளைக் குவித்து மெல்லிய குரலில்,

''அனு மஞ்சள் பூசிக் குளிச்சா அதே ஒரு தனி அழகு... (அவளுடைய கறுத்த முகம் மஞ்சள் பூச்சினால் இளம் பச்சை நிறத்தில் அவன் மனசைக் கொள்ளை கொள்ளும்) அனு அழுதாலும் சிரிச்சாலும் ஒவ் வொண்ணுக்கும் ஒரு தனி அழகுண்டு... உன்னைப் பாத்துக்கிட்டு இப்படியே இருந்துடலாம்னு இருக்கு அனு... (அய்யோ குரலில் எத்தனை தாபம்!) சினிமா வுக்கு வேற போகணுமா...?''

இப்படியே புலன்கள் மயங்க, விழிகள் செருக, இமைகள் மூடிய மெல்லிருளில், மயிர் அடர்ந்த அவனது மார்பில்,

www.padippakam.com



அவனது உழைத்து உழைத்து உரமேறிய கைகளின் முரட்டுத்தனமாக உள்ள அணைப்பில், அவனது மூச்சுக் காற்றின் ஸ்பரிசத்தில், அது தரும் பரவசத்தில் தபஸ்வி மாதிரி மூழ்கி நிலைபெற்று விடலாமா என்றிருந்தது அவளுக்கு.

எல்லா நாட்களுமா இப்படி வாய்க்கின்றன...?

ஞாயிற்றுக்கிழமையென்றுகூட இல்லாமல் இரவும், பகலும் மெஷின்களுடனேயே கிடக்கிறவனுக்கு இத்தனை உணர்ச்சித் துடிப்பும், சிலிர்க்க வைக்கிற பிரியமும் இருக்குமா...? இன்றைக்கு இருட்டாமல், இருட்டினாலும் விடியாமல், இந்தக் கணத்தின் சந்தோஷம் உயிர் இருக்கிற வரைக்கும் நிலைபெற்று விடாதா...?

கனவின் சிறகுகளை விரித்து, உயர உயரப் பறக்க நினைத்தவள், நேரமாவதை உணர்ந்து மெல்ல அவனிட மிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அவள் துணி மாற்றுவது தலை பின்னுவது, குங்குமம் இட்டுக் கொள்வது எல்லாவற்றையும் அருகிலிருந்து பார்த்த படியேயிருந்தான். குழந்தை சுமதிக்கு கவுன் அணிவிக்கிறபோதும் தலைபின்னுகிறபோதும் அவசரம் அவசரம் என்று அவளுக்கு உதவினான். அந்தச் சாக்கில் இரண்டு பேருமே பரஸ்பரம் ஸ்பரிசித்துக் கொண் டார்கள்.

அனுவுக்கு வெட்கமாகப் போய்விட்டது.

கல்யாணமாகி நாலு வருஷங்களுக்கப்புறம், ஒரு குழந்தையும் பெற்று அதற்கு இரண்டரை வருஷம் பூர்த்தியான பிறகு இது அபூர்வமான வெட்கம்.

அவள் அவனுக்குத்தான், அவனுடைய ஸ்பரிசம் ஒன்றும் புதுசில்லை அவளுக்கு. இருந்தும் இந்த ஸ்பரிசமும் வெட்கமும் இது மாதிரி எப்போதுமா சந்தோஷத்தைத்

www.padippakam.com



தருகின்றன...? தெருவைக் கடந்து ரோட்டுக்குப் போகிறது வரையிலும் குழந்தையை நடத்திக் கூட்டிப் போனார்கள் அம்மாவின் விரலை ஒரு கையாலும் அப்பாவின் விரலை இன்னொரு கையாலும் பற்றிக் கொண்டு நடை பயிலுகை யில் குழந்தை சந்தோஷத்தினால் வாய்விட்டுச் சிரிக்கிறது.

தெருவையே அடைத்துக் கொண்டு அவர்கள் மூன்று பேரும் நடக்கையில், அந்தத் தெருவும்கூட என்றுமில்லாத சோபையுடன் விளங்குவதாக அனுவுக்குத் தோன்றியது. எதிர்த்தாற்போல் இவர்களைக் கடந்து போகிறவர் களுக்குக் கூட இவர்கள் இப்படி நடந்து போவது சந்தோஷம்படும்படியாயும் பிரியப்படும்படியாகவும் இருந் திருக்கலாம்.

முகம் பார்த்து புன்னகைத்தார்கள். தலையை அசைத்து விடை சொல்லிவிட்டுப் போனார்கள். சிலர் மட்டும், 'என்ன சார் சினிமாவுக்கா...?' என்றோ, 'பெறப்புட் டீங்க?' என்றோ கேட்டார்கள்.

அவனும் பதிலுக்குச் சிரித்தும், தலையசைத்தும், 'ஆமா சார்' என்றும் 'இல்லை சும்மா அப்படியே ஒரு வாக்' என்றும் சொல்லிக் கொண்டு வந்தான். அனுவுக்கு அவர்கள் எல்லோரிடத்திலும் தாங்கள் சினிமாவுக்குப் போகிற விஷயத்தைச் சொல்லியிருக்கலாமென்றிருந்தது.

அனுவுக்கு ரொம்ப பயமாய்ப் போய்விட்டது. இந்த ரீதியில் நடந்தால் சினிமாவுக்குப் போய்ச் சேர முடியாது என்று நினைத்தாள். தன்னுடைய பயத்தை ராஜசேகர னுக்குச் சொன்னாள்,

''ஏங்க, கொளந்தையத் தூக்கிக்குவோம்... அப்புறம் டிக்கெட் கெடைக்காமப் போயிரும்... இன்னிக்கு ஞாயிற்றுக் கெளம வேற...''

www.padippakam.com



மறுத்து, குழந்தை இன்னுங் கொஞ்ச தூரம் நடக்கட்டு மென்று சொன்னான் ராஜசேகரன்.

''மணி இன்னும் அஞ்சுகூட ஆகல்லே... அதுக்குள்ளே ஏன் அனு அவசரப்படறே...? குழந்தை கொஞ்ச தூரந்தான் நடக்கட்டுமே, மூணு வருஷம் ஆகப் போகுதில்ல...?''

''ம்... ம்... அவளென்ன எந்நேரமும் தொட்டில படுந்தா தூங்கிக்கிட்டிருக்கா? அவ இந்தத் தெருவை ஒரு நாள்ள மூணு தடவ சுத்தி வந்திருவா... ஏன்'டி கண்ணு, அப்பிடித்தான...?''

குழந்தை நடப்பதை நிறுத்தி அம்மாவைப் பார்த்து பின் அப்பாவைப் பார்த்தது. தட்டுத் தடுமாறிப் பேசியது.

''அப்பா... நானு ஒரு நாளைக்கு மூணு தடவை தெருவச் சுத்தி வருவானாம், அம்மா சொல்றா...?''

ராஜசேகரனுக்கு ரொம்ப சந்தோஷமாய்ப் போய் விட்டது. குழந்தையை வாரி நெஞ்சோடு அணைத்து முத்தமிட்டான்.

''கேட்டியா அனு... இவ பேசுறதைக் கேட்டிக்கிட் டிருந்தாவே போதுமே... சினிமாவுக்கு வேற போகணுமா...?'

''உங்களுக்கு எதுதான் போதான்னு இருக்கு...? என்னெ மாதிரி தினமும் உங்கள வதச்செடுத்தான்னா அப்புறம் அவ பக்கத்துல கூட வர மாட்டீங்க...''

பஸ்ஸில் ரொம்பக் கூட்டமாயிருந்தது. அனு முன் பகுதியிலும், ராஜசேகரன் பின் பகுதியிலுமாய் ஏறிக் கொள்ள வேண்டியதாயிற்று. அனுவும் குழந்தையும் கூட்டத்தில் நசுங்கிப் போனார்கள். நெரிசல் தாங்காமல் குழந்தை அழத் துவங்கியது.

தியேட்டர் முன்னால் பஸ்ஸை விட்டிறங்குவதற்குள் முகமெல்லாம் வேர்த்துப் போயிற்று. தலைப்பூ பஸ்ஸுக்

www.padippakam.com



குள்ளேயே எங்கோ உதிர்ந்து போயிருந்தது, தியேட்டரில், அவனருகே நசுங்களற்ற மூணு மணி நேர அருகாமைக்காக அவசரப்பட்டாள் அனு...

அவசர அவசரமாக, கிட்ட த்தட்ட ஓட்டமாய் தியேட்டர் வாசலுக்கு வந்தார்கள். பூட்டப்பட்ட இரும்பு கேட்டில் 'ஹவுஸ்புல்' போர்டு தொங்கியது.

அனு சட்டென்று உடைந்து போனாள். அவளையும் மீறி விழிகளில் நீர் திரையிட்டது. ராஜசேகரனை எரிச்சலும் பரிதாபமுமாய்ப் பார்த்தாள்.

''இதுக்குத்தான் நா அப்பவே சொன்னேன். குழந்தெய நடக்கடிச்சு வேடிக்கை பார்த்ததுபோதும்னு...''

ராஜசேகரன் அவள் பார்வையைத் தவிர்த்து முகத்தை திருப்பிக் கொண்டான்.

''இப்ப என்னாயிருச்சு அனு... நாமதான் அஞ்சு மணிக்கெல்லாம் பஸ் பிடிச்சு இங்க வந்தோம்... மணி இன்னம் அஞ்சேகால்கூட ஆகல்லே. அதுக்குள்ள புக்கிங் குளோஸ் பண்ணுவாங்கன்னு யாருக்குத் தெரியும்? நானென்ன உன்னெ மாதிரி அடிக்கடி சினிமாவுக்கு வர்றவனா...? எனக்கு என்னுடைய கம்பெனி தெரியும்... வீடு தெரியும்...''

அனு அமைதியானாள்.

அவளுடைய ஸ்நேகிதிகளுடன் அவள் சினிமாவுக்குப் போகிறதுண்டு. அதையா சொன்னான்? அப்போதெல்லாம் கூட டிக்கட்டில்லாமல் திரும்பியிருக்கிறாள். ஆனால் அதெல்லாம் ஏமாற்றமாய்த் தெரிந்ததில்லையே... இது அவனுக்குப் புரியாதா என்ன...? தியேட்டர் முன்னால் வைக்கப்பட்டிருந்த பானர்களையும், உயரமான கட்அவுட்டையும் குழந்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கியது பானரில் அனுவுக்குப் பிடித்தமான நடிகர், நடிகைகள்

www.padippakam.com



பல்வேறு கோணங்களில், பல்வேறு முகபாவங்களுடன் சித்தரிக்கப்பட்டிருந்தனர். இந்த வழியாகப் போகிற போதெல்லாம் இந்தப் படத்துக்கு வர வேண்டும் என்று நிச்சயித்து, பானரில் சித்தரிக்கப்பட்டிருக்கிற காட்சிகளையும், படத்தின் தலைப்புகளையும் பத்திரிகைகளில் படத்தைப் பற்றிப் படித்த விஷயங்களையும் வைத்துக் கொண்டு படத்தின் முழு பிம்பத்தையும் மனசினுள் உருவாக்கிப் பார்த்திருந்தாள்.

குழந்தையோடு சேர்ந்து அவளும், அவளோடு சேர்ந்து அனுவும் பேனர்களை வேடிக்கை பார்க்கத் துவங்கினர். இவர்களைப் போலவே டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றிய கூட்டம் திரும்பி போகிறதுக்கு மனசில்லாமல் தியேட்டர் வாசலை நிறைத்திருந்தது.

இன்றைய தினம் எதிர்பாராமல் வாய்த்தது. இப்படியொரு தினத்துக்காக அனு எத்தனையோ ஏங்கியிருக்கிறாள். ஆனால் அந்த ஏக்கம் இப்படியா நிலைத்துப் போக வேண்டும்?

"என்ன அனு, போகலாமா...?"

"இருங்க, கொளந்த வேடிக்க பாக்குதில்ல..."

குழந்தையை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பானராக விரலைக் காட்டி அந்தந்த நடிகர் நடிகைகளின் பெயர்களையெல்லாம் சொல்லி அவற்றைத் திருப்ப உச்சரிக்கக் குழந்தைக்குக் கற்றுக் கொடுத்தாள்.

"என்ன அனு... போஸ்டர்களைப் பாக்கறதே போதும்னு ஆயிருச்சா...? அடுத்த வாரம் மறுபடியும் வந்த படத்தெப் பாத்துக்கலாமே..."

அனு, அவனை தீர்க்கமாகப் பார்த்தாள். மனசினுள் சொல்ல முடியாத அளவுக்கு தவிப்பும் ஏமாற்றமும் பெருகிற்று. மனசேயில்லாமல் குழந்தையுடன் திரும்பி

www.padippakam.com



அவன் பின்னால் தொடர்ந்தாள். குழந்தை போஸ்ட்டர்களின் மேல் தீவிரமாக கவனம் செலுத்தத் தொடங்கியிருந்தது.

''வா சுமதி... போகலாம். ஓங்கப்பாவுக்கு நேரமாயிருச்சாம்...''

குரல் இயல்பாயின்றி உடைந்து கரகரத்ததை உணர்ந்து வெட்கினாள். வெறும் சினிமா, அவனுக்குப்போல் வெறும் சினிமாதானா— அதற்குத்தானா இத்தனை தவிப்பும் பெருமூச்சும்...

முகம் வியர்த்துப் போயிற்று. குழந்தையை அவன் கையில் கொடுத்துவிட்டு, முந்தானையால் முகந்துடைத்தபடியே அவன் பின்னால் நடந்தாள்.

அவர்கள் தியேட்டர் வாசலைக் கடக்கையில், சட்டென்று ஓரிடத்தில் ஒரு ஆளைச் சுற்றித் திரண்டது. இரண்டு பேருமே என்ன என்று பார்த்து நின்றார்கள். அனு மிரட்சியுடன் ராஜசேகரனின் தோளுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டாள். கூட்டத்தைப் பிளந்து வெளியில் வந்த ஒருவனைக் கேட்டான்.

''என்ன சார்...?''

''பிளாக்கில டிக்கெட் விக்கிறாங்க சார்...''

சொன்னவன் முகத்தில் அபூர்வமானதொரு சந்தோஷத்துடன் தியேட்டருக்குள் ஓடினான். தோற்றுப் போய் சோர்ந்த பிறகு கிடைக்கும் எதிர்பாராத வெற்றிகளின் போது மட்டுமே இந்த மாதிரியான ஒரு அபூர்வமான சந்தோஷம் அனுபவிக்கக் கிடைக்கும். அனுவினுள் சட்டென்று ஒரு சந்தோஷ வித்து முளைவிட்டது. உடனே சொல்ல முடியாத அவசரத்துடன் குழந்தையை அவனிடமிருந்து பறித்துக் கொண்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



''என்னங்க, நீங்களும் போய் முயற்சி பண்ணிப் பாருங்களேன்.''

அவன் ஒரு கணம் தயங்கிப் பின் கூட்டம் நோக்கி விரைந்தான். அனு பார்வையை அவனைத் தொடரவிட்டுக் காத்திருந்தாள் முட்டி மோதி அவன் கூட்டத்தினுள் நுழைந்த போது அனுவுக்குச் சந்தோஷத்தினால் உடல் மெலிதாக நடுக்கமுறத் தொடங்கியது. குழந்தையை இறுகத் தழுவி கன்னத்தில் முத்தமிட்டு,

''பார் பார்... அப்பா டிக்கெட் வாங்கிட்டு வரார். நாம சினிமாவுக்குப் போகலாம்'' என்று சொல்லி அதற்குச் சிரிப்பு மூட்டி தானும் சிரித்தாள்.

கலையத் தொடங்கிய கூட்டத்திலிருந்து ராஜசேகரன் வெளிப்பட்டான். அவனது நடையிலிருந்தும், முகத் தோற்றத்திலிருந்தும் அவன் டிக்கெட் வாங்கி விட்டானா இல்லையா என்று யூகிக்க முயன்றாள். அதற்கு அவகாசமளிக்காமல் அவன் அவளருகில் வந்து சொன்னான்,

''அநியாயமா இருக்கு அனு... ஒரு டிக்கட் பத்து ரூபா சொல்றானுக... அதோட ஒரிஜனல் வெல மூணு ரூபா தான்... ரெண்டு டிக்கெட்டுக்கு பதினாலு ரூபா அதிகம்'' அவன் பின்னும் ஏதோ சொல்ல வந்தான், அனு குறுக்கிட்டாள்.

''உங்ககிட்ட எவ்வளவுங்க இருக்கு...?''

''எதுக்கு? இருபது ரூபா கொடுத்து சினிமாப் பாக்கணுமா என்ன?'' அவன் குரலில் மெலிதான கோபம் படர்ந்தது.

''தவிர எங்கிட்ட பதினஞ்சு ரூபாதான் இருக்கு... நானும் பதினஞ்சு ரூபாயையும் கொடுக்கறேன்னு கூடக் கேட்டுப் பாத்தேன்.''

www.padippakam.com



அவள் அவனைப் பேசவிடாதபடி குழந்தையை அவன் கைகளில் திணித்தாள். சேலை முந்தானையிலிருந்து கசங்கின இரண்டு ஒற்றை ரூபாய் தாள்களை அவன் கைகளில் திணித்தாள். கொஞ்சம் சில்லறையும் இருந்தது.

''இந்தாங்க இதுல மூணுரூபாய்க்குப் பக்கமா இருக்கு ரெண்டு ஒண்ணு கொறச்சுக் கேளுங்க... இல்லாட்டி குடுங்க நாம் போயி கேக்கறேன்.''

ராஜசேகரன் கொஞ்சமும் எதிர்பாராதபடி அனு அவன் கைகளிலிருந்த ரூபாய் நோட்டுகளைப் பறித்துக்கொண்டு அந்தக் கும்பலை நோக்கி விரைந்தாள். அவன் சில வினாடிகள் செய்வதறியாமல் திகைத்து நின்றான். சுற்றி யிருப்பவர்களின் பார்வைகள் விநோதமான குறிப்பு களுடன் தங்கள் மேல் படர்வதை ராஜசேகரன் உணர்ந் தான்.

சட்டென்று குழந்தை சுமதியைக் கீழே இறக்கி விட்டு விட்டு அவளைத் தொடர்ந்து ஓடினான். எதிர்பாராத விதத்தில் முற்றிலும் தனக்கு அந்நியமானதொரு சூழலில் நிராதரவாய் விடப்பட்ட குழந்தை வீறிட்டு அலறத் தொடங்கியிருந்தது. அனுவா அவள்?

காட்சிகள் மாறி வெற்றுப் பிம்பங்கள் மனசுக்குள் உருண்டன. இதுவரையிலும் பார்த்தறியாத புதிய பிம்பம், அனுவின் இப்போதைய பிம்பம்.

''அனு...ஏய் அனு நில்லு ஏய்... நா சொல்றதக் கேளு. இத பாரு சுமதி அழுறா...''

சப்தமெழுப்பியபடி அவள் பின்னால் ஓடினான். அனு அதற்குள் கூட்டத்தைப் பிளந்து அதில் நசுங்கி டிக்கட் விற்பவனைப் பிடித்தாள். தன்னிடத்திலிருந்த ரூபாயை அவன் கைகளில் மொத்தமாகத் திணித்து இரண்டு டிக்கெட்கள் தருமாறு அவனிடம் பரிதாபகரமான

www.padippakam.com



முறையில் கேட்டாள். டிக்கட் விற்பவன் முதலில் மறுத்து பின் தயங்கி டிக்கெட்டுகளைக் கொடுத்தான்.

மூச்சு இறைக்க இறைக்க ராஜசேகரன் அருகில் வந்தான். கோபம் வீசும் கண்களுடன் அவளைப் பார்த்தான். அவள் கையிலிருந்த டிக்கெட்டுகளைப் பிடுங்கினான்.

''உனக்கென்ன பைத்தியமா அனு? இப்படி ஓடிவந்து கள்ள டிக்கட்டை பேரம் பேசி வாங்க உனக்கு வெக்கமாயில்லை.''

டிக்கெட் விற்பவனும், இன்னும் சிலரும் அவனை நெருங்கி சமாதானப்படுத்த முயன்றார்கள்.

''பரவாயில்ல சார் விடுங்க... ஆசைபட்டு வாங்கியிருக்காங்க, கூட்டிட்டுப் போங்க சார்.''

ராஜசேகரன் அவர்களைப் பார்க்கவும் பேசவும் அங்கு நிற்கவும் அவமானமாயிருந்தது. அவர்கள் சொல்லுவதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் டிக்கெட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டான். பயமும், வெட்கமுமாய் குன்றி நின்றவளைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தான்.

குழந்தை பெருஞ் சத்தமெழுப்பி அழுதபடி தரையில் உட்கார்ந்திருந்தது. அவன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, ஒரு கையினால் அவளை இறுகப் பற்றி இழுத்துக் கொண்டு பஸ் ஸ்டாப்புக்கு வந்தான்.

அவனிடமிருந்து கைகளை உதறி விடுவித்துக் கொண்டாள். முகம் கலவரப்பட்டு வெளுத்துப் போனது. இன்னமும் அழுதபடியிருந்த குழந்தையை வாங்கித் தோளில் சாய்த்தபடி அவனை வெறுப்பும் கோபமுமாகப் பார்த்தாள். சுண்டிக்கருத்திருந்த முகத்தில் மனசின் நொறுங்கல் தெரிந்தது. அவன் சங்கடப்பட்டு முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான்.

www.padippakam.com



''என்னாச்சு அனு உனக்கு? இந்தப் படத்த இன்னிக்கே பாத்தாத்தான் ஆச்சா? மறுபடி அடுத்த வாரம் பாக்கறது... இல்ல எனக்கு நேரமில்லன்னாக் கூட நீயும் கொளந்தையும் பக்கத்து வீட்டுக்காரங் களோட சாவகாசமாப் புறப்பட்டா போச்சு... எனக்குத் தான் ஓயாத வேல.''

''இது எனக்கு நீங்க சொல்லித்தான் தெரியணு மாக்கும்'' என்று நுனி நாக்கு வரை வந்துவிட்ட வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டு, ஒரு கைத்த புன்னகையால் அவனுக்கு பதில் சொல்லிவிட்டு எதிர்ப்புறம் திரும்பி பஸ் வருகிறதா எனப் பார்க்கத் துவங்கினாள்.

குழந்தை அழுகை அடங்கி அவளுடைய தோளில் தலை சாய்ந்திருந்தது.

—1984-

படிப்பகம்

www.padippakam.com

# பாதி

ரொம்ப நாட்களுக்கப்புறம் அந்தோணி மாமா வந்திருந்தான். மாமா வந்தபொழுது அவள் புருஷன் வீட்டிலில்லை. நண்பனொருவனைப் பார்ப்பதற்காகப் பத்து மணிக்கே போனவன், இன்னமும் வரவில்லை. கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு அவன்தான் வந்து விட்டானெனச் சந்தோஷப்பட்டாள். பாயில் சுருண்டு படுத்திருந்தவள் சோர்வுடன் எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

முதலில் அவளுக்கு மாமாவை அடையாளந் தெரியாமல் போயிற்று. தாடியும், மீசையும், உள்ளொடுங்கிச் சிவந்த விழிகளுமாய்... அவள் பயந்து போய்விட்டாள்.

''அவரு இல்லீங்க... வெளில போயிட்டாரு''

பட்டெனச் சிரித்துவிட்டான் மாமா.

''மேரிக் குட்டிக்குங் கூடவா என்னெ அடையாளந் தெரியல?''

இந்தக் குரலும் சிரிப்பும்தான் மாமாவிடம் இன்னமும் மாறாதவை. இருந்தாலும், அந்தோணி மாமாவையுங் கூடவா மறந்துவிட முடியும்? இதற்கென அவள் ரொம்பவு ம வருத்தப்பட்டாள்.

ப—6

படிப்பகம்

www.padippakam.com



''அய்யய்யோ... என்னெ மன்னிச்சுடுங்க மாமா... நானொரு குருடி, தாடி வளத்தங்காட்டி அடையாளமே தெரியல...''

''ம்ஹூம்...மேரியெ மன்னிக்கறாப்பல இல்ல, தூக்குத் தண்டனைதான்...''

இயல்பாய் அவனை நோக்கிப் போன விழிகளைக் கட்டுப் படுத்தி, பாயை உதறி விரிப்பதில் கவனம் செலுத்தினாள். ஓரங்கள் பிய்ந்து அழுக்கேறி நைந்து போயிருந்த பாயின் நிலையை விரித்த பின்பே கவனித்தாள். இவ்வளவு நாட்களாக இல்லாத கிழிசலும், அழுக்கும் இப்போது மட்டும் தெரிகிறது.

''உட்காருங்க மாமா... ரொம்ப எளச்சுப் போயிட்டீங்க மாமா... ஒடம்பு கிடம்பு சரியில்லாமப் போச்சா?''

''ஒடம்புக் கென்ன... நல்லாத்தாங்கெடக்குது...''

சட்டையைக் கழட்டி சுவரில் ஆணியைத் தேடி மாட்டினான். பனியனுக்கு மேலே எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. முன்னெல்லாம் மாமாவின் உடம்பு இப்படியில்லை. மார்பு, புஜங்கள், கை கால்களெல்லாம் மயிரடர்ந்து பார்க்க அழகாயிருக்கும்.

''மேரிக் குட்டி... ஒரு கைலி குடுக்கறியா?''

அவள், அவனுடைய ஒரே கைலியைக் கொடியிலிருந்து மாமாவிடம் கொடுத்தாள். அதுவும் கூட இரண்டு மூன்று தையல்களுடன் அழுக்குப் பிடித்திருந்தது.

''தொவைக்கலாம், தொவைக்கலாம்னா எங்க முடியுது?''

மாமாவுக்குக் கேட்கிறபடி முணுமுணுத்தாள். மாமா ஏனென்று கேட்டால், உடம்பு சரியில்லையெனச் சொல்ல

www.padippakam.com



நினைத்திருந்தாள். ஆனால், மாமா எதுவுங் கேட்காமல் கைலியைக் கட்டிக் கொண்டு பாத்ரூமை நோக்கிப் போனான்.

அவள் சமையல் கட்டுக்குள் வந்தாள்.

கொஞ்சம் காபித்தூளும், சர்க்கரையும் இருந்தால் மாமாவுக்கு ஒரு கப் காபியாவது போட்டுக்கொடுக்கலாமெனத் தோன்றிற்று. ஒவ்வொரு டப்பாவாகத் திறந்து பார்த்தாள். கொத்தமல்லி, சீரகம், காபித்தூள் இருந்த டப்பாக்களிலிருந்து இப்போது வெறும் வாசனைகள் மட்டுமே வந்து கொண்டிருந்தன.

அந்த வாசனைகள் கூட அவளுக்கு ரொம்ப பிடித்தமானவையாயிருந்தன.

முன்பெல்லாம், அவனுக்கு மில்லில் வேலையிருந்த பொழுது, எல்லாவற்றிலும், ததும்பத் ததும்பச் சாமான்கள் இருக்கும். சமையல் கட்டுக்குள் நுழைந்தாலே அவற்றின் கலவையான வாசனையினால் நெஞ்சு நிறையும்.

இப்போது எல்லாமே காலியாய்க் கிடக்கின்றன.

திறந்து பார்க்கிற டப்பாக்களிலெல்லாம் நூலாம்படை படர்ந்திருக்கிறது.

ஒவ்வொரு நாளும் அடுத்தவர்களின் கைகளைக்கொண்டே வயிற்றுப் பசியைத் துடைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நகரமெங்கும் நட்சத்திரக் கூட்டங்களைப் போல மனிதர்கள் இறைந்து கிடந்தார்கள். கைகளும், கால்களுமுடைய உடம்பும், கண்களும் காதுகளுமுடைய தலையும் எல்லோருக்கும் இருந்தன.

ஆனால் எல்லோருக்கும் இதயம் இல்லை.

இதயம் உள்ள கைகளுக்காக அவன் அலைந்தான்.

www.padippakam.com



அவள் கேட்டாள்,

''மறுபடி மில்லுல வேல கெடக்குமா?'

''தெரியல, அதுக்காகத்தான் போராட்டம் நடத்திக்கிட்டிருக்கோம். போன வாரம் பூரா உண்ணாவிரதம் இருந்தோம்''

சோகம் பூசிய புன்னகையுடன் அவள் சொன்னாள்,

''அதான் தினமும் வீட்டுக்குள்ளேயே உண்ணாவிரதம் இருக்கறமே''

மெலிதான பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிப்பட்டு நீண்டது. உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டமெல்லாம் செய்து பார்த்துவிட்டு, தொழிற்சங்கம் கோர்ட்டுக்குப் போனதும் அவளுக்குக் கொஞ்சம் தெம்பு உண்டாயிற்று. ஆனால் நாய் வாயில் சிக்கிய பழந்துணியாய் லேபர் கோர்ட்டில் கேஸ் இழுபடத் தொடங்கியதும் அவள் உடைந்து போனாள். லேபர் கோர்ட், தொழிற்சங்கம் என்று மாறிமாறி அலைந்தான் அவன்.

மத்தியானமே வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போயிருந்தான். தொழிற் சங்கத்துக்குப் போய்விட்டு, நண்பனொருவனிடம் பணம் வாங்கி வருவதாகச் சொன்னான்.

''மேரிக் குட்டீ...''

சமையலறையை விட்டு வெளியில் வந்து பார்த்தபொழுது, கை, கால், முகமெல்லாம் ஈரமாக நின்றிருந்தான் மாமா. வெளியில் போய் கம்பிக் கொடியில் கிடந்த துண்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். முகந் துடைத்தபடியே கேட்டான் மாமா.

''அவரு எங்க மேரி...? வேலைக்குப் போயிட்டாரா?''

''இல்ல மாமா... அவருக்கு இப்ப வேலையில்ல. ஆட்குறைப்புன்னு சொல்லி பர்மனென்ட் ஆகாதவங்களயெல்லாம் நிறுத்திட்டாங்க... அதுல இவருக்கும்

படிப்பகம்

www.padippakam.com



வேலயில்லாமப் போச்சு... கிட்டதட்ட ஒரு வருஷ மிருக்கும் அவரு வேலக்கிப் போயி...''

மாமாவுக்கு முகந்தெரியாதபடி எதிர்ப்பக்கம் பார்த்துப் பேசினாள். முகம், கண்கள், அவற்றில் படர்கிற நீர் எதையும் மாமா பார்க்கக் கூடாது,

''அவருக்கு இன்னமா பெர்மனன்ட் ஆகல? ரொம்ப வருஷமா வேல பாக்கறாரு போலருக்கு?''

''ஆமா...ஆறேழு வருஷமாச் செய்யறாரு, ஆனாலும் பெர்மனன்ட் ஆகல... கேட்டா கம்பெனிச் சட்டம் அது இதுன்னு என்னென்னமோ பேசறாங்க மாமா...''

பாயில் கால்களை நீட்டி, சுவரோடு சாய்ந்து உட்கார்ந் தான் அந்தோணி மாமா.

அவள் மறுபடியும் சமையலறையினுள் வந்தாள். மூடி திறந்த நிலையில் கிடந்த காலி டப்பாக்களைப் பார்க் கையில் மனசு கனத்தது.

அந்தோணி மாமாவைத்தான் அவள் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தாள். சின்ன வயசிலிருந்தே இவளுக்கு மாமாதான் என்று இரண்டு குடும்பத்திலுமே பேச்சு இருந்தது. அப்போது மாமா பி.யூ.சி. படித்து வேலை தேடிக் கொண்டிருந்தான்.

அப்பாதான் அவசரப்பட்டு விட்டார்.

மில் வேலையும், மாமனார், மாமியாரில்லாத குடும்பமு மாய் மாப்பிள்ளை வந்தபொழுது விட மனசில்லை அப்பாவுக்கு. கடனும் உடனுமாய் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார்.

கல்யாண தேதிக்கு நாலைந்து நாள் முந்தி தண்ணீரெடுப் பதற்காக, கிணற்றடிக்குப்போன போது மாமாவைப் பார்த்தாள்.

www.padippakam.com



இரண்டு பேரும் பிழியப் பிழிய அழுதார்கள். அழுகை யினூடே பிரிந்தார்கள்.

அப்புறம் அவன் எங்கேயோ வேலைக்குச் சேர்ந்துவிட்ட தாய்ச் சொன்னார்கள். இடையிலொரு தடவை—அவளுக் குக் குழந்தை பிறந்து மூன்றாம் நாளே செத்துப் போனது கேள்விப்பட்டு எங்கிருந்தோ வந்து அவள் புருஷனிடம் துக்கம் கேட்டு விட்டுப் போனான். அதற்கப்புறம் அந்தோணி மாமாவைப் பார்ப்பது இப்போதுதான்.

அவள் புருஷனுக்கு எல்லாமும் தெரியும்.

அந்த மாமாவுக்கு, இப்போது ஒரு கப் காபிகூடப் போட்டுக் கொடுக்க முடியவில்லை என்பதை நினைக்க அவளுக்கு அழத் தோன்றிற்று.

இனி, அவன் எப்போது வரப் போகிறானோ? நேற்றுப் போலவே இன்றும் வெறுங்கைகளுடனும், கனத்த இதயத் துடனும் ஒரு குற்றவாளியைப் போல தலை குனிந்து வருவான். நேற்றுப் போலவே இன்றும் பசியில் புரள வேண்டும். அவர்களிரண்டு பேரும் மட்டுமென்றால் பரவாயில்லை. மாமாவை எப்படிப் பட்டினியாய்ப் படுக்க வைக்க?

பக்கத்து வீடுகளிலும் கடன் கொடுக்கிற வீடு ஏதுமில்லை. கொடுத்த கடனை யாருக்குத் திரும்பக் கொடுத்திருக் கிறோம்... மறுபடிப் போய்க் கடன் கேட்க? கடன் கொடுத்தவர்கள் யாரும், இப்போது வந்து மாமாவுக்குக் கேட்கிறபடி சத்தம் போட்டுத் தொந்தரவு செய்யாமலிருந் தால் போதுமென்றிருந்தது அவளுக்கு.

மெல்லிய விசும்பலாய்த் துவங்கிய அழுகைப் பெரிதாகிப் பெரிதாகி வளர்ந்தது. எல்லாவற்றையும் மறந்துவிட்ட வளாய் அழுதாள். அழுகை ஒன்றை மட்டுமே குறிக் கோளாய்க் கொண்டவளைப் போல, உரத்த குரலில்,

www.padippakam.com



தாங்க முடியாத துக்கத்துடன் ஓ ஓ வென்று கதறினாள். முழங்கால்களைக் கட்டி, முகம் புதைத்துக் குலுங்கக் குலுங்க அழுதாள்.

அழுகை ஓய்ந்து புறச் சூழல்கள் நினைவுக்கு வந்து பார்த்தபொழுது மாமா, நீருறும் விழிகளால் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''மேரிக்குட்டி... அய்யோ என்ன இது?'

* * *

நன்றாக அசந்து தூங்கிக் கொண்டிருந்தவள், கதவு தட்டும் சப்தம் கேட்டு, விழித்துக் கொண்டாள். அவன் களைத்துத் தலை தொங்க ஒரு அந்நியனைப் போல தயக்கத்துடன் உள்ளே நுழைந்தான்.

''சங்கத்துக்குப் போயிருந்தீங்களா?''

அவன் சலித்த குரலில் பதில் சொன்னான்.

''ம்... ம்... போனேன்... போனேன்...''

சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு, பாயைச் சுருட்டி யெடுத்துக் கொண்டு வெளிவாசலை நோக்கிப் போனான். அங்கேதான் அவன் படுத்துக் கொள்வது.

''கையெக் கழுவிட்டு வாங்க... சாப்பிடலாம்' என்று பதட்டத்துடன் சொன்னாள் அவள். அவன் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். பின், எதுவும் பேசாமல் எழுந்து வந்தான். அவள் தட்டை எடுத்து வைத்து மௌனமாகப் பரிமாறினாள். ரொம்ப நாட்களுக்கப்புறம் குழம்பு, பொரியலுடன் சாப்பிட்டான். நல்ல பசி போலிருக்கிறது. வெளியே எங்கேயும் சாப்பிட்டிருக்க மாட்டான். பாதி வரை மௌனமாகச் சாப்பிட்டவன், சகஜமான தொனியில் கேட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



''அப்பா வந்திருந்தாரா?''

''இல்ல...''

''பின்ன?''

சோற்றைப் பிசைந்து கையிலெடுத்தான்.

''மாமா வந்திருந்தது...''

வாயருகே போன கையும் சோற்றுக் கவளமும் அப்படியே நின்று போயின.

''யாரு... அந்தோணி மாமாவா?''

''ம்... ம்...?''

''என்னாரம் வந்தது...?''

''சாயங்காலம் நாலு மணியிருக்கும்... நீங்க வருவீங்க, வருவீங்கன்னு இன்னார வரைக்கும் இருந்துச்சு...''

அவன் மௌனமாக அவளைப் பார்த்தான். பின்பு அழுத்தமான குரலில் கேட்டான்.

''சாப்பாட்டுக்கு அவனா பணம் குடுத்தான்?''

''...............''

''நீயாக் கேட்டியா? அவனாக் குடுத்தானா?''

அவளது மௌனம் அப்படியே இருந்தது.

அவன் தவிப்புடன் அவள் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தான். வேதனை நிரம்பிய பார்வையொன்று அவளைத் தொட்டுத் தரை திரும்பிற்று. கைப்பிடிப்பி லிருந்த சோற்றுருண்டை நழுவிக் கீழேயும் தட்டிலுமாய்ச் சிதறிற்று.

அவன் அத்துடன் கை கழுவிக்கொண்டு எழுந்து போனான்.

படிப்பகம்

www.padippakam.com



வெளி வாசலில் அவன் பாயை உதறி விரிக்கிற சப்தம் கேட்டது. அவள் தட்டைப் பார்த்தாள். சோறு பிசைந்தது பிசைந்தபடி அப்படியே இருந்தது. பாதி வயிறு கூட நிரம்பியிருக்காது. தட்டை எடுத்து வைத்து விட்டு வந்து வெறுந்தரையில் குப்புறப் படுத்துக் கொண்டாள்.

எப்போதும், மண்ணெண்ணெய் இல்லாமல், சீக்கிரத் திலேயே உயிரற்றுப் போய் விடுகிற சிம்னி விளக்கு அன்று ரொம்ப நேரம் வரையிலும் எரிந்து கொண்டிருந்தது.

தூக்கம் வராத நேரங்களில், ஒரு பூ மொட்டுப் போல அமைதியாய் நின்றெரியும் சிம்னி விளக்குச் சுடரைப் பார்த்தபடி படுத்திருப்பது அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

—1981.

## ஒரு விமர்சனம்:

'பாதி'

அந்தோணி மாமாவைத்தவிர வேறு யார் உதவியிருந் தாலும், அவனால் அதை ஒருவேளை ஏற்றுக் கொண்டிருக்க முடியும். ஒரு காலத்தில் அந்தோணி மாமாவைத்தான் அவள் கல்யாணம் செய்து கொள்வ தாயிருந்தாள் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது காரணமா? தன்னுடைய தான் தகர்ந்து, கணவன் என்ற பீடம் நொறுங்கிப் போனதுதான் அவன் சாப்பாட்டைப் பாதியில் வைத்துவிட்டு எழுந்து போவதற்கான காரணமா? கணவன் சாப்பிடாமல் எழுந்து போன பின்பு, மேரிக் குட்டியால் எப்படி ஒரு பூ மொட்டுப் போல அமைதியாய் நின்றெரியும் சிம்னி விளக்குச் சுடரை ரசித்தபடி படுத்திருக்க முடிந்தது? உண்மையில் கணவன் என்ற பீடம் காலியாக்கப்பட்டு விட்டதா? வாசகனிடத்தில் எழுப்பும் இந்தக் கேள்விகளே, அதன் வெற்றிக்குக் காரணமாக அமைகிறது.

—வசந்தகுமார்.

www.padippakam.com



# சின்ன மீன்கள்

கணேசன் திரும்பி வந்த பொழுது இருட்டி ரொம்ப நேரமாயிருந்தது. தாழிடப்படாத கதவைத் திறந்து உள்ளே வந்து பார்த்தபொழுது கட்டிலில் கல்யாணியும், தொட்டிலில் குழந்தையும் தூங்கிக் கொண்டிருந்தனர். கல்யாணி தூங்குகிறாளா... இல்லை... மயக்கமுற்றுக் கிடக்கிறாளா...? முகத்தின் மீது தாறுமாறாய்ப் படிந்து கிடந்த கேசங்களை விலக்கி ஒழுங்குபடுத்தினான். அவனது வெது வெதுப்பான கரம் நெற்றியில் பட்டதும் உணர்வு கொண்டு விழித்துப் பார்த்த பொழுது அவளது முகத்துக்கு நேரே அவனது கனிவு சிந்தும் விழிகளைச் சந்தித்தாள்.

"எப்படியிருக்கும்மா...?"

அவள் பதிலேதும் சொல்லாதபடி உதடுகளைக் கடித்துக் கொண்டு எழுந்து உட்கார முயன்றாள். அவன் அவள் முதுகை அணைத்து, ஒரு குழந்தையைப் போலத் தூக்கி உட்கார வைத்தான். ரொம்ப இளைத்துப் போய் விட்டாள். விழிகள் உள்ளொடுங்கி கன்ன எலும்புகள் துருத்தி, உதடுகள் வெளுத்து, பார்க்கவே பரிதாபமா யிருந்தது கணேசனுக்கு.

"ரொம்ப நேரமாயிருச்சாம்மா? என்னம்மா செய்யட்டும்? நானும் எங்கெல்லாமோ அலஞ்சு பார்த்தேன். கடசில ரவி வீட்டுக்குப் போனேன். அவன் ஒன்பது மணிக்கில்ல வந்தான்... அதுக்கப்புறம்

www.padippakam.com



மெடிகல் ஷாப்புக்குப் போயி... ம்ஹூம்... தீப்பெட்டி யெங்க...!''

கேட்டபடியே தலையணைக்கடியிலிருந்து தீப்பெட்டியை எடுத்துக் கொண்டான். ஸ்டவ்வைப் பற்ற வைத்து வெந்நீர் போட்டான். பிறகு மாத்திரைகளைக் கொடுத்து சாப்பிடும்படி சொன்னான்.

''இதச் சாப்பிட்டா ராத்திரி நல்லாத் தூக்கம்வரும்னு டாக்டர் சொன்னாரு...!''

அவளைப் படுக்கச் செய்து போர்வையைக் கழுத்து வரை யிலும் இழுத்துப் போர்த்திவிட்டு, கட்டில் விளிம்பில் அவள் முகம் பார்த்து உட்கார்ந்தான். தினசரி அவன் இப்படிக் கொஞ்ச நேரம் அவளருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறதுண்டு இதையொரு கடமையெனச் செய்து வருகிறானெனத் தோன்றும் அவளுக்கு.

''மறுபடி ஜன்னி கண்டதா...?!''

''ம்...ம்... சாயந்தரமா ஒருதடவ வந்துருச்சி... சத்தம் கேட்டு மேரி டீச்சர் வந்து பார்த்தாங்க...!''

''எல்லாத்துக்கும் கவலதான் காரணம்... எப்பப் பார்த்தாலும் எதையோ பறி கொடுத்தவ மாதிரி இருக்கிறே... அப்படியென்ன கவலை? ஒங்க அப்பா அம்மாவெ நெனைச்சுக்கிட்டியா...?''

அவள் விழிகளில் பாலாடையாய் நீர் திரண்டது. இல்லை யென்பதாய்த் தலையைப் பக்கவாட்டில் அசைத்தாள். தலை பாரமாக இருந்தது.

''அவங்கதான் உன்னெப் பார்க்கமாட்டேன்னு சொல்லீட்டாங்களாமே? அப்புறம் கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? குழந்தையைப் பார்க்கக் கூட வரலை. இத்தனைக்கும் நா, ரண்டு மூணு தடவை யல்ல போயிச் சொல்லிட்டு வந்தேன்...''

www.padippakam.com



அவனும் தான் எப்படி இளைத்துப் போய் விட்டான்? வெயிலில் அலைந்து அலைந்து முகமும்உடலும் கறுத்துப் போய் விட்டது. சவரம் செய்கிறதையும் கூடவல்லவா விட்டுவிட்டான்!

''ஆமா, சாப்பிட்டியா?''

கட்டிலுக்கடியிலிருந்த பாத்திரத்தை யெடுத்துப் பார்த் தான்.

''என்ன, கஞ்சி வச்சது வச்சாப்பல அப்படியே இருக்குது? கஞ்சியுங் கூடக் குடிக்கலன்னா எப்படி? இரு, பாலும் ரொட்டியும் வாங்கி வந்திருக்கேன். காய்ச்சித் தர்றேன்.''

பால் பாத்திரத்தைக் கழுவி, வாங்கி வந்த பால் பாக் கெட்டை உடைத்துப் பாலைக் கொட்டிக் காய்ச்சினான். பாலை நன்றாக ஆற்றி, அவளை மறுபடி எழுப்பி உட்காரச் செய்து, ரொட்டியை ஒவ்வொரு துண்டாகப் பாலில் நனைத்து அவளுக்கு ஊட்டினான்.

அவளுக்கு இப்போது எதுவுமே வாய்க்குப் பிடிப்பதில்லை. அவனுக்கென்று தான் சாப்பிட்டாள். இத்தனை அன்பாய் ஒரு குழந்தைக்குப் போல ஊட்டிவிடுகிறவனை எப்படி மறுக்க? அவனுக்குங்கூட அவளை விட்டால் அன்பு செலுத்துவதற்கென யார் இருக்கிறார்கள்? அவளும் குழந் தையும்தான் அவனுக்கு எல்லாம்.

கொஞ்சம் சாப்பிட்டதற்கப்புறம் போதுமென்பதாய்த் தலையாட்டி மறுதலித்தாள்.

''இன்னும் கொஞ்சம் சாப்பிடு... சாப்பிடாம இப்ப டியே கெடந்தா ஒடம்பு பலஹீனமாவல்ல போயிரும்... பலஹீனம் ஒன்னே போதும்... இந்த நோய்க்கு!''

www.padippakam.com



இன்னும் கொஞ்சம் ரொட்டி சாப்பிட்டாள். பிறகு இரண்டு மிடறு பால் சாப்பிட்டாள்.

உடனேயே குமட்டிக் கொண்டு வந்தது.

அவனிடம் சொல்லலாமாவென நினைப்பதற்குள் தொண்டைக் குழியிலிருந்து சட்டென்று எகிறினாற்போல வெளியில் கொட்டிவிட்டது தொடர்ந்து மட மடவென்று சாப்பிட்டது பூராவும் வாந்தியாய் வெளியில் வந்தது. எல்லாம் அவன் மார்பிலும் மடியிலுமாய் விழுந்தது.

அவன் பயந்து போனவனைப் போல கல்யாணி, கல்யாணியென, ஐந்தாறு தடவைகள் பதட்டமாய்க் கூப்பிட்டான். பிறகு அவளைப் படுக்க வைத்து விட்டு எழுந்து சட்டையையும் பேன்ட்டையும் கழற்றிப் போட்டுவிட்டு கைலியைக் கட்டிக் கொண்டு வந்து கட்டில் விளிம்பில் உட்கார்ந்து கொண்டான்.

''கல்யாணி...... கல்யாணி!''

''கல்யாணி... கல்யாணி... இத பாரும்மா... என்னம்மா செய்யுது? கல்யாணி... கல்யாணி...!''

கன்னத்தைத் தட்டி எழுப்ப முயன்றான். நெற்றி, கன்னம், மார்பு, கை, கால்களையெல்லாம் தொட்டுப் பிடித்துப் பார்த்தான். உள்ளங்கால்களைத் தேய்த்துச் சூடாக்கினான். தன் இரு கைகளாலும் அவளை இறுக அணைத்துப் பிடித்துக் கொண்டான். மனசில் பயம் கவிந்தது. முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள் பொடித்தன. மனசு எதையோ எண்ணி எண்ணித் தவித்தது.

''கல்யாணி... கல்யாணி...!''

''ம்...ம்...!''

''கல்யாணி... கல்யாணி... இங்க பாரும்மா...!''

www.padippakam.com



செருகிக் கிடந்த, விழிகளை மூடியிருந்த இமைகள் பூவிதழ் களாய்ப் பிரிந்தன. வேதனை நிரம்பிய முனகல்கள் வெளிப் பட்டன.

''ம்...ம்மா...!''

அவளது தோள்பட்டைகளை உலுக்கிக் கேட்டான்.

''கல்யாணி... என்னம்மா செய்யுது...?''

மெலிதாய், பயந்து நடுங்குகிற குரலில் சொன்னாள்,

''என... எனக்கு பய... பயமாயிருக்குதுங்க...!''

''பயமா...? என்னம்மா பயம்... இதபாரு நானிருக்கே னில்ல... கல்யாணி... நானிருக்கேன்... பக்கத்திலேயே இருக்கேன்... பயப்படாத கல்யாணி...!''

சட்டென அவள் குரல் விரியமுற்றுப் பெரிதாக வந்தது... உடைந்து போன கரகரத்த குரலில் அலறினாள்.

''அய்யோ எனக்கு பயமாயிருக்குதுங்க... என்னெ விட்டு எங்கேயும் போயிராதீங்க... என்னங்க, எனக்கு ப்யமா இருக்குதுங்க...!''

அலற அலற முகம் விகாரப்பட்டது. உதடுகள் கோணின. கழுத்து நரம்புகள் புடைத்து நாக்கு உள்நோக்கி இழு பட்டது. வெடுக்கென கை கால்கள் இழுக்கத் துவங்கின. ஒரு கோரமான கத்தல் அவளிடமிருந்து வெளிப்பட்டது. இந்தத் தனியறையில் அந்தக் கத்தல் அவனுக்குப் பயத்தை யுண்டாக்கிற்று. இன்னது செய்வதெனத் தோன்றாத வனாய் கட்டிலடியிலேயே கிடந்த சாவிக் கொத்தை யெடுத்து அவளது உள்ளங்கைகளில திணித்து அழுத்திப் பிடித்தான்.

அவள் வாயிலிருந்து சோப்பு நுரைபோல நீர் பொங் கிற்று. சட்டென்று குடலைப் புரட்டும் கெட்ட வாசனை அவன் நாசியைத் தாக்கிற்று. அவனுக்கு அருவருப்பாய்

படிப்பகம்

www.padippakam.com



இருந்தாலும் சகித்துக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் உடல் அடங்கிப் போனது. பெரியதான மூச்சும், நாசியில் கோர்ஷ்ழ இழுபடுகிற சத்தமும் கொஞ்ச நேரம் வந்து கொண்டிருந்தன. பிறகு, சத்தமேதுமின்றி, பார்க்கத் தூங்குபவ்ளைப் போலானாள். அவன் போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டு எழுந்தான். இனி அவளாக மயக்கம் தெளிந்து எழ வேண்டும்.

உடம்பெல்லாம் அடித்துப் போட்டாற் போல வலி யெடுத்தது. கொட்டாவி வந்தது. கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திச் சோம்பல் முறித்தான். உடம்பிலிருந்து குப்பென்று வியர்வை நாற்றம் வீசிற்று. குளித்து நாலைந்து நாள்களிருக்கும். சரியாகக் குளித்து சாப்பிட்டு, சந்தோஷமாய் இருந்து...

இப்போது இதெல்லாமுய் பழகிப் போய்விட்டது. வாழ்வே சொரணையற்றுப் போயிற்று.

இந்தக் கொஞ்ச நாட்களில் எத்தனை பேரிடம் அவமானப் பட்டுப் போயிருப்பான். ஒவ்வொருவரிடமும் வெறும் சிரிப்போடு நின்றுவிடுகிற நண்பர்களிடமெல்லாம் கூடத் தன் மனைவிக்கு உடம்பு சரியில்லாமல் போனதைப் பற்றி கைக்குழந்தையுடன் அல்லல்படுகிறதைப் பற்றிச் சொல்லி, மாசக்கடைசியென்பதை நினைவூட்டி, மருந்துக்குக் கூடக் காசில்லையென்று கேட்டு... காலையிலிருந்து எதுவுமே சாப்பிடாதது நினைவுக்கு வந்தது. காய்ச்சின பாலில் இரண்டு துண்டு ரொட்டியை நனைத்துச் சாப்பிட்டான். அதற்குமேல் சாப்பிடப் பிடிக்காமல், ஒரு செம்பு பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு, கட்டிலுக்குப் பக்கத்தில் பாயை விரித்துப் போட்டுப் படுத்தான்.

வாழ்க்கை எப்படி மாறிப்போய் விட்டது?

கல்யாணியைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் பேசாமல் அப்பா சொன்ன பெண்ணுக்கே தாலி கட்டியிருந்தால்

www.padippakam.com



வாழ்க்கை இப்படி கசங்கியிருக்காதோ... எல்லா எதிர்ப்பையும் மீறி, எல்லா உறவுகளையும் பகைத்து இவளைக் கல்யாணம் பண்ணி இப்போது இவள்தான் என்ன சந்தோஷமாகவா இருக்கிறாள்? அவள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும்தான் இவள் மேல் எத்தனை பிரியமிருந்தது? ஒரு வேளை அவர்களை மீறி வராமலிருந்தால் இவள் இப்படி அனாதைபோலக் கிடக்கவேண்டி இருக்காதோ...!

யாரால் யார் வாழ்க்கை வீணாயிற்று...?

நினைக்க நினைக்க அழுகையும் துக்கமுமாயும் இருந்தது, கணேசனுக்கு. உடல் அயர்வினால் அப்படியே தூங்கிப் போனான்.

''என்னங்க...... என்னங்க...!''

கல்யாணியின் அழைப்பில் விழித்தெழுந்தான்.

''என்ன......?''

''குழந்தை அழறான்...!''

சலிப்போடு முனகியபடியே எழுந்து தொட்டிலை நோக்கிப் போனான். கண்கள் தீயாய் எரிந்தன. உடம்பில் வலி கூடினாற்போலிருந்தது. குழந்தையைத் தொட்டிலிலிருந்து எடுத்து மார்போடு சேர்த்து அணைத்தான் அப்போதும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை.

''பசிபோல இருக்கு... பால் ஊத்திக் குடுங்க...!''

குழந்தையைப் பாயில் இறக்கிவிட்டு விட்டு, பிளாஸ்கில் இருந்த பாலை ஊற்றி ஆற்றினான். குழந்தை இவனையும் பாலையும் மாறி மாறிப் பார்த்து அழுகையைக் கூட்டியது.

''பொறு...சனியனே... குடுக்கறதுக்குள்ள என்ன... எல்லாமாச் சேர்ந்து என் உயிரெ வாங்குறீங்களே...''

எரிந்து விழுந்தபடியே பாலைப் புட்டியில் ஊற்றி ரப்பரைப் போட்டான்.

www.padippakam.com



"குழந்தை பசிக்குதுன்னுதான் அழறான்... அவனைப் போய் சனியென்னெல்லாம் திட்டினா அவனுக் கென்ன தெரியும்...?"

கட்டிலிலிருந்தபடியே கல்யாணி மெல்லிய குரலில் கேட்டது கணேசனுக்குக் கோபத்தை வரவழைத்தது.

"ஆமாமா...ஆளாளுக்கு மாத்தி மாத்தி உயிரெ வாங்குனா? நானும் மனுஷன்தான்...மிருகமா? மிருக மாயிருந்தாக்கூட அதுக்குக் கொஞ்சம் ஒய்வு இருக்கும்... எனக்கு அதுவுமில்ல...!"

சட்டென்று கல்யாணியின் குரல் உடைந்து போயிற்று.

"என்னாலதான் உங்களுக்கு இத்தனை கஷ்டம்... இந்த நோய் வந்ததுதான் வந்தது... ஒரேயடியா சாகடிச்சிருந்தா நிம்மதியா இருந்திருக்கும்...இப்போ கூட தற்கொலை பண்ணிக்கலாம். ஆனா இதொண் ணப் பெத்துட்டேனே... நாஞ் செத்துப் போயிட்டா இது அனாதையாவல்ல போயிடும்...!"

அவன் கோபம் கொண்டு கேட்டான்.

"இப்ப என்ன சொல்லிட்டாங்கன்னு இப்படிப் பேசற...? இப்ப ஒரு மாசமா நீ படுத்துட்டே... கொழந்தையென்ன செத்தா போயிட்டுது... அதெல்லாம்... யாரும் யார் செத்தாலும் அனாதை யாய்ப் போகமாட்டாங்க...!"

கல்யாணி அதிர்ச்சியினால் பேச்சற்றுப் போனாள். அய்யோ இதென்ன இப்படிப் பேசுகிறார்? கம்மிய குரலில் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க......?"

"ஆமா...பேசறாங்க உன்னெ... இங்க அவனவன் படற கஷ்டம் உனக்கென்ன தெரியும்...?"

குழந்தையை எடுத்து, மடியில் உட்கார வைத்துப் பாலைக் கொடுக்கத் தொடங்கினான். குழந்தை மெல்ல அழுகை அடங்கிப் பால் குடிப்பதில் ஈடுபட்டது. கல்யாணி தலையணையில் முகம் புதைத்தபடி, சத்தமின்றி அழுதாள்.

—1984.

ப—7

www.padippakam.com

# ஜீவிதம்

கொரக்கூடைகளையும் மமட்டிகளையும் எடுத்துக் கொண்டு பன்னாடி காட்டின் வடக்காலக் குட்டைக்கு வந்து சேர்ந்தனர் சடையனும் அவன் கூட்டாளிகளும்.

சடையன் குட்டைக்குள் இறங்கி நோட்டம் பார்த்தான். ஓரத்தில் படுத்திருந்த அவரிகளும் வெறாமீன்களும் சளப் சளப்பென்று மிரண்டோடின. கெண்டைகளும் கெழுத்தி களும் மினுக்காட்டம் பூச்சிகளைப் போல உடம்பு மல்லாந்து மின்ன குறுக்கும் மறுக்குமாய் ஓடின.

தண்ணீர் ரொம்ப இல்லை. சேறுதான் பொதபொத வென்று முழங்கால் வரைக்கும் ஏறியது. பன்னாடி காட்டுக் குட்டைகளில் தண்ணீர் வற்றி, யாரும் பார்த்த தில்லை. இந்த வருஷம் மழை ஒரேயடியாய்ப் பொய்த்து விட்டது.

''பன்னாடி காட்டுக் குட்டையே வத்திப் போச் சுன்னாப் பாத்துக்குங்களே...'' என்று வறட்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

''மீனெல்லா கொள்ளையாக் கெடக்குது' அவுரியும், ஆறானும் சும்மா இந்தந்தஞ் சோடு கெடக்குது...'' என்று தொடையளவுக்குக் கைகளை விரித்துக் காட்டிச் சொன்னான் சடையன். உடனே எல்லா முகங்களிலும் சந்தோஷம் விரிந்தது.

www.padippakam.com



''மீனெல்லா ஒரு கோட்டுக்கு ஓட்டியுட்டுப்புட்டு, தடுப்புக் கட்டித் தண்ணியெப் பூரா எறச்சுப் புடுவோம்... பொறவு சேத்தக் கலக்கிச் சுளுவுல புடுச்சுப்புடலா...''

என்றான் சடையன்.

சடையன்தான் அவர்களுக்குத் தலைவனாட்டம். வயசில் மூத்தவன் என்பதால் மட்டுமில்லை, வேலையிலும் துடியானவன். இன்ன வேலையை இப்படித்தான் செய்ய வேண்டுமென்பதெல்லாம் அவர்களுக்கு அவன்தான் சொல்வது. அவன் யோசனைப்படி செய்தால் அந்த வேலை சீக்கிரத்தில் முடிந்து விடுவதை அவர்கள் கண்டார்கள்.

இன்ன இடத்தில் இன்ன வேலை இருக்கிறது என்று அவன்தான் தெரிந்து கொண்டு வந்து சொல்லுவது. இந்த வேலைகூட அவன் பார்த்துக் கொண்டு வந்து சொன்னான். இல்லாவிட்டால் வலவில் எல்லா ஆம்பிளைகளும், புளிய மரத்தடியில், பதினைந்தாங்கரம் தாயக் கட்டம் விளையாண்டு கொண்டு கிடக்க வேண்டியது தான்.

வாய்க்கால் கரையோரமாயிருந்த கலர் நிலத்தில் இருந்து கொரையை வெட்டியெடுத்துக் கொண்டு வந்தார்கள். கொலுக்கட்டிப் புல் வளர்ந்த கலர் நிலத்தின் மேற்பரப்பை நாலு விரற்கடை ஆழத்துக்கு மமட்டியால் பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து தடுப்புக் கட்டினார்கள்.

மூன்று மமட்டிகள்தான் அவர்களிடமிருந்தன.

வீரன், பழனி, தட்டையன் மூன்று பேரும் குட்டையில் இறங்கி, மீன்களை ஒரு கோட்டுக்கு ஓட்டிவிட்டுவிட்டுத் தடுப்புக் கட்டும் வேலையைச் செய்தார்கள். மற்றவர்கள்

www.padippakam.com



வாய்க்கால் கரையிலிருந்து கெராய்களைக் கொண்டு வந்தார்கள்.

சடையன், மொட்டையன், கருப்பன் மூன்று பேரும் கெராய்களைப் பெயர்த்தார்கள்.

தடுப்புக்கட்டி, களிமண் அப்பி முடித்ததும் சடையன் சொன்னான்,

''நாலு பேரு எறைப்போம்... ரண்டு பேரு மேட்ல நின்னு மீனப் பொறுக்குங்க... மீனு வந்துச்சுன்னா தண்ணிக்கு நழுவிப்பிடாமப் பாத்துக்குங்க...''

''நல்லா முளிப்பா இருக்கோனு... மீனுத் தட்டுப் பட்டாக் கப்புன்னு அமுக்கிக்கோனு... ஆமா''

தோல் சுற்றித் தைத்த கொரக் கூடையில் தண்ணீர் இறைத்தார்கள். கிணத்து வெட்டுக்கோ, சேறெடுக்கவோ போனால் சேறு அள்ள அந்தக் கூடையைத்தான் பயன் படுத்தினார்கள்.

மீனுள்ள குட்டையில் நின்று கொண்டு தடுப்புக்கு அந்தப் பக்கம்— கரையில் தண்ணீரை மொண்டு வீசினார்கள். பிறகு அந்தத் தண்ணீர் மீன் இல்லாத மறுகுட்டையில் இறங்கியது.

நேரம் ஆக ஆக குட்டையில் தண்ணீர் குறையத் தொடங் கியது. தண்ணீர் குறையக் குறைய, இறைக்கும் தண்ணீ ருடன் மீன்கள் வரத்தொடங்கின. மீன்கள் தரையில் விழுந்து, சூரியக் குஞ்சுகளைப் போல வெள்ளிநிற உடம்பில் சூரிய ஒளியைப் பிரதிபலித்துத் துள்ளுகிற போது சடையன் சத்தம் போடுவான்.

''ஒய்... வோய்! கண்ணெத் தின்னுட்டு நிக்காதீங் கப்பா... மீனு வந்து உளுகுது... எடுத்துக் கூடைல போடுங்கப்பா...''

www.padippakam.com



தண்ணீர் கணிசமாகக் குறைந்ததும், எல்லோரும் குட்டையினுள் இறங்கினார்கள்.

''கையிங் காலையுமுட்டு நல்லாக் கலக்குங்கப்பா... சேறு கலங்குனாத்தா மீனுக மேல மொதங்கிக்கிட்டு வரு...''

என்றான் சடையன்.

எல்லோரும் சேர்ந்து திமுதிமுவென்று குட்டைக்குள் இறங்கினார்கள் முரட்டுத்தனமாய்ச் சேற்றைக் கலக்கினார்கள். 'உஸ்ஸாய்... உஸ்ஸாய்' என்று குலவையிட்டார்கள். சேறும் தண்ணீரும் சேர்ந்து கலங்கி சாணிக் குழம்பாட்டம் ஆனபிறகு, மீன்கள் வாயைப் பிளந்து கொண்டு மேலே வந்தன. பிளந்த வாயுடன் மேலே வரும் மீன்களைச் சுளுவில் பிடிக்க முடிந்தது.

சேறு கலங்கக் கலங்க மீன்கள் நிறைய மேலெழும்பின. கெண்டைகளும் கெழுத்திகளும் மட்டும் இப்படிப் பிளந்த வாயுடன் மேலே வர, ஆறான்களும் அவுரிகளும், வெறா மீன்களும் சேற்றினுள்ளேயே பதும்பிக் கொண்டன.

''எல்லாரு சேத்துக்குள்ள கோந்து தொளாவுங்கப் போவ்... மீனு சிக்கும். வெறாக்குட்டி, அவுரிக தட்டுப்பட்டா தலையத்தாம் புடிக்கோணு, முன்டத்தப் புடிச்சா நழுவிப் போனாலும் போயிரு... ஆறாமீனுச் சிக்குனா லு அப்பிடித்தே...''

சடையன் சொன்னதை எல்லோரும் கேட்டார்கள்.

வெயில் சுள்ளென்று காய்ந்தது.

மத்தியானச் சோத்து நேரமானாலும் யாரும் போகவில்லை. கொஞ்சம் கம்பஞ்சோத்துத் தண்ணிக்காக ஒரு மைலுக்கு நடக்கணுமே. தவிர, பிடிக்கப் பிடிக்க மீன்கள் சிக்கிக் கொண்டேயிருந்தன. இதற்குள் ஒரு கொரக்

www.padippakam.com



கூடை மீன்கள் சிக்கியிருந்தன. எப்படியும் இன்னொரு கூடை பிடித்துவிட வேண்டுமென்றான் சடையன். சேற்றை இன்னும் கலக்கினார்கள். அடிப்பாகத்திலிருந்து புரண்டு மேலே எழும்பிக் குட்டையை நிறைத்தது சேறு. மீன்கள் மளமளவென்று சிக்கின.

குட்டையே காலியாகி விட்டதென்று மற்றவர்கள் சொன்னபோது சடையன் சொன்னான்,

''ஏய், பெரிய ஆறாமீனு ஒண்ணு இருக்குதப்பா... ஆரும் மேல போயிராதீங்க... மொரட்டுச் சீவன்...''

உடனே எல்லா முகங்களிலும் ஆர்வம் விரிந்தது.

சேற்றை இன்னும் அதிகமாகக் கலக்கினார்கள். சடையன் குறிப்பிட்ட ஆறாமீனையே குறிவைத்துத் தேடினார்கள். சடையனும் மும்முரமான தேடலில் ஈடுபட்டான்.

''நல்லாத் தேடுங்கப்பா... உடப்படாது, பெரிய சீவன்...''

சடையன் குரல் அவர்களுக்கு உற்சாகமூட்டிக் கொண்டேயிருந்தது.

''கெடச்சுருச்சு... கெடச்சுருச்சு...''

பழனியின் சந்தோஷமான குரலைக் கேட்டு எல்லோரும் அவன் பக்கமாய் ஓடினார்கள். பழனியின் கைகள் சேற்றுக்குள்ளேயே புதைந்திருந்தன.

''என்ன மீனு? ஆறா மீனுத்தான?''

சடையன் கேட்டான்,

''ஆமாண்ணா, ஆறா மீனுத்தா...''

''கவனமாப்புடி... மொதல்லயே எங்கையில தட்டுப்பட்டுச்சு... நல்லா பெரிய சீவன்...''

www.padippakam.com



ஒருவரும் மூச்சு விடவில்லை. கைகளை அலப்பி அலப்பித் தேடினான் பழனி...

''கடிக்குதண்ணா...''

''கடிக்குதா...?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான் சடையன்.

''ஆமாண்ணா... வெடுக் வெடுக்குன்னு பாம்பு புடுங் கறாப்பல...''

எல்லா முகங்களிலும் அழுத்தமான மௌனம்.

''எங்கத்த போயிப் பாம்பு?'' என்று மிரட்டுவது போல் கூச்சலிட்டான் சடையன்,

''ஆறா மீனுன்னா அப்படித்தாங் கடிக்கும்...'' என்று திட்டவட்டமான குரலில் சொல்லிவிட்டுத் தொடர்ந் தான்.

''ஆனா ஒண்ணும் பன்னாது... உடாமப் புடிச்சுக்க... தலையெப்புடி... தலையெப் புடிச்சு வாயில வெரல உட்டு வகுந்து புடிச்சுக்கிட்டீனா எந்தப் பெரிய சீவனா இருந்தாலும் ஒரு நெம அசையாது...''

என்று கூச்குரலிடுபவனைப் போல, கண்டிப்பான குரலில் சொன்னான்,

''இல்லீண்ணா... கடிச்குது...'' என்று கெஞ்சுவது போல சொன்னான் பழனி.

''செரி போனாப் போவுது... உட்டுட்டு வந்துடு... என்னண்ணா?'' என்று சடையனின் முகத்தைப் பார்த்தான் வீரன்.

''ஏன்டா எல்லா சும்மா இருக்கமாட்டீங்க? பழனி நீ நழுவ உடாம்ப் புடிச்சுக்க...''

யாரும் எதுவும் பேசவில்லை.

www.padippakam.com



பழனியின் முகம் வலியினால் கோணிப்போயிற்று.

மீன் பிடிப்பு வேலைக்கு அவன் புது ஆள். கிணறு வெட்ட, மரம் வெட்ட, பரம்படிக்கப் போயிருக்கிறான். ஆனால் மீன் பிடிப்புக்குப் போனதில்லை. தன் கைக்குள் அந்தப் பெரிய ஆறாமீன் அகப்பட்டது அவனுக்குச் சந்தோஷமாகவே இருந்தது. இதைப் பிடித்து விட்டால், துடியான ஆள் என்று சடையனிடம் பேரெடுக்கலாம். ஆனாலும் வலி பொறுக்க முடியாததாயிருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டான். பல் பட்டு உதட்டில் ரத்தக் கசிவு ஏற்பட்டது. எனினும் அதைப் பொருட்படுத்தாமல் மீனைப் பிடித்துவிட முற்பட்டு சேற்றுக்குள் போராடினான்.

''என்னடா பழனி... நழுவீருச்சா?''

''நழுவ உட்ருவனா? அதெல்லா வசமாச் சிக்கிக்கிச்சு. தலையைப் புடிச்சுக்கிட்டெ''

''ஆறா மீனுத்தானா?''

''ஆமாமா... ஆறா மீனுத்தா...''

எல்லோரும் அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள், வங்குக்குள்ளிருந்து வெளிப்படும் எலிகளுக்காகக் காத்திருக்கிற வேட்டை நாய்களைப் போல...

''சிக்கிப் போச்சு... சிக்கிப் போச்சு'' என்று கூச்சலிட்டபடியே, எழுந்து கரைக்கு ஓடினான் பழனி.

''சிக்கிப் போச்சா? சிக்கிப் போச்சா?'' என்று அவன் பின்னால் ஓடினார்கள் எல்லோரும். பழனி கரைக்கு வந்தான்.

சேறு அப்பிய, கயிறு போன்ற நீளமான ஒரு ஆறாமீன்... இல்லை பாம்பு, பெரிய சாரைப் பாம்பு.

www.padippakam.com



"அய்யோ பாம்பு" என்று யாரோ கத்தவும் அதிர்ந்து போனவனாய்க் கீழே போட்டான் பழனி. அந்தப் பாம்பு, மிரட்சியுடனும், ஆக்ரோஷத்துடனும் சொளேரெனப் பாய்ந்து குட்டைக்குள் சென்று மறைந்து கொண்டது.

"அவன் அப்பவே சொன்னான்."

"சொன்னா ஒரே அடக்கா அடக்கறது..."

"ஒண்ணு கெடக்க ஒண்ணாச்சுனா... இதென்ன தெரவியமா?"

"ஒரு நாக் கூத்துக்கு மீசெயச் செரச்சாப்பல!"

"பொறுக்கித் திங்கற கோழிக்கு மூக்கத் தறிச்சாப்பல."

"அதச் சொல்லு..."

ஆத்திரத்துடன் எல்லாக் குரல்களும் சடையனைச் சுற்றி முற்றுகையிட்டன.

"டேய்... பேசாம இருங்கடா... என்னமோ எல்லாந் தெரிஞ்சவனுகளாட்டம் பேச வந்துட்டானுக" என்று பதட்டத்துடன் கத்தினான் சடையன்.

"ஏண்டா பழனி... பாம்புக்கும் மீனுக்கும் உனக்கு வித்துவேசந் தெரீல? எங்க, கடிச்ச எடத்தக் காட்டு"

என்று கனிவாகப் பழனியின் கைகளை இழுத்துப் பார்த்தான்.

சேறு படிந்த புறங்கைகளிரண்டும் வீங்கியிருந்தன. சடையனின் முகம் சுண்டிக் கருத்தது. பழனி அலறினான்.

"அய்யய்யோ... சடையப்பண்ணா... இப்ப நா என்ன பண்ணுட்டும்?"

"ஏய் கத்தாத போ... அது தண்ணிப் பாம்புதா... வெஷமில்ல."

www.padippakam.com



''வலிக்குதண்ணா'' கண்களில் நீர் ததும்ப பரிதாபமாகச் சொன்னான் பழனி.

''ஆமாமா வலிக்கும். நா இல்லீனு சொல்லுல... ஆனா இதுனால உசிருக்கொண்ணும் பாதகமில்ல... இது தண்ணிச் சாரை!''

''ஏண்ணா, வேணும்னா ஆசுபத்திரிக்குப் போயி பாப்பமாண்ணா...?'' காற்றுக் கசையும் தீபச் சுடரைப் போல அவன் குரல் நடுங்கிற்று. கண்ணிமைகளைத் திமிறிக் கொண்டு கண்களிலிருந்து நீர் தெறித்துச் சிதறிற்று.

''ஆமா. பத்தஞ்சு செலவானாலுஞ் செரியே, பாவம் ரண்டு பொட்டப் புள்ளைகளெப் பெத்து வச்சிருக்கிறான்'' என்று தட்டையன் சொல்ல, சடையனுக்குச் சுரீரெனக் கோபம் வந்து விட்டது.

''ஏன்டா நீ வாய வெச்சுக்கிட்டுக் கம்முனு இருக்க மாட்டே? இதுக்கெல்லா ஆசுபத்திரிக்குப் போறதுக்கு முடியுமா? நம்பகிட்ட வயக்காடா வெளையுது?''

''சொல்றவங்களுக்கென்ன?''

''இல்லண்ணா... ஆசுபத்திரிக்கே போயிரலாம். வலி உசுரு போவுது...''

''இத பாரு... அதெல்லா ஒண்ணும் வேண்டா, எவத்திக்குப் பாம்பு கடிச்சுதோ அவத்திக்குப் போயி, மூணு வா தண்ணியெ அள்ளிக் குடிச்சாச் செரியாப் போயிரு.''

''அது ஒரே சேறாக் கெடக்குதண்ணா!''

''சேறா இருந்தா என்ன? சாங்கியப் படிக்கு மூணு மொடக்கு?''

www.padippakam.com



சடையன் பழனியை இழுத்துக் கொண்டு மறுபடியும் குட்டைக்குள் இறங்கினான், எல்லோரும் பின் தொடர்ந்தார்கள்.

பாம்பைப் பிடித்த உத்தேசமான இடத்துக்கு வந்ததும சடையன் சொன்னான்.

''அள்ளி மூணு மொடக்குக் குடி.''

''ஒரே சேறா இருக்குதண்ணா?''

''அஞ்சாறு சேறு... அதையெல்லாம் பாத்தா வேல யாவாது... குடிச்சாத்தான் நல்லாவும். கண்ணெ மூடிக்கிட்டு மூணு மொடக்குக் குடிச்சுப்புடு.''

பழனி உதட்டைச் சேற்றுக்கருகில் கொண்டு போனான். மீன் கவிச்சி வீசும் சேத்துத் தண்ணீரில் நாசி பட்டதுமே குடலைப் புரட்டியது. வேதனையினாலும் அருவருப்பினாலும் முகம் கோணிற்று. சட்டென்று திமிறிக் கொண்டு நிமிர்ந்தான். சடையன் விடவில்லை. அவனது பின் கழுத்தில் கை போட்டு, மறுபடியும் அவன் முகத்தைக் குட்டைக்குள் சாய்த்தான்.

''அண்ணாண்ணா, வேண்டாம்ணா... சொன்னாக் கேளுங்க. வைத்தியருகிட்டப் போலாமண்ணா... ஒரே சேறா இருக்குதண்ணா, சொன்னாக் கேளுங்கண்ணா. ய்யோ...''

சடையனின் வலுவான அழுத்தத்தால் பழனி முகம் சேற்றில் பதிந்தது. கண்களில் சேறுபட்டு எரிச்சலெடுத்தது. ஒரு வாய் சேற்றுத் தண்ணீரை மடக்கென்று விழுங்கினான். உடனே பட்டென்று வெறுப்புடன் தலையைத் தூக்கிக் கொண்டான். குமட்டிற்று. வாந்தியெடுக்க ஆயத்தப்பட்டான்.

''த்தா... த்தா... வாந்தியெடுத்திராதப்பா. அப்பற உசிருக்கே ஆபத்தாப் போயிரும்.''

www.padippakam.com



வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் துணைக்கு வந்தான் அவனும் சடையனும் சேர்ந்து பழனியை மறுபடியும் சேற்றில் அழுத்தினார்கள்.

''இன்னம் ரண்டு மொடக்குத்தான? கண்ணெ மூடிக் கிட்டுக் குடிச்சுப்புடு'' என்றான் தட்டையன்.

''வேண்டாமண்ணா, அதுதா சாங்கியத்துக்கு ஒரு வா குடிச்சிட்டன்ல? அப்புறம் எதுக்கு?''

''ஏய் யார்ரா இவன்? சுத்தப் பைத்தியக் காரனா இருக் கான். சாங்கியப்படி மூணு வா தண்ணி குடிடான்னா கத பேசிக்கிட்டிருக்கான். வெச்சு அழுத்துங்கடா சேத்துக்குள்ள.''

என்று ஆத்திரத்துடன் சத்தம் போட்டான் சடையன். இன்னொருவனும் சேர்ந்து கொண்டான். மூன்று பேரும் சேர்ந்து பிடரியை அமுக்கிக் குனிய வைத்தார்கள்.

வேதனையுடன் இன்னொரு மிடறு சேற்றுத் தண்ணீரை விழுங்கினான்.

''போதுமண்ணா... ரண்டு வா குடுச்சுட்டனல்ல?''

''ஏன்'டா சாங்கியப்படிக்கு மூணுவா குடிக்கணும்னு சொன்னாக்கா, குடீடா இன்னொரு மொரடு'' என்று பிடரியில் ஒரு தட்டுத் தட்டினான்.

''அண்ணா...''

''கண்ணெ மூடிக்கிட்டு இன்னொரு மடக்குக் குடிச் சர்ரா பழனி...''

கண்களை இறுக மூடிக்கொண்டு இன்னொரு மிடறு சேற்றுத் தண்ணீரை விழுங்கினான் பழனி.

''இப்ப என்னப்பா ஆயிப்போச்சு... இதுக்குப் போயி இத்தன ரகள பண்ணீட்டெ?''

படிப்பகம்

www.padippakam.com



கைத் தாங்கலாக மேட்டுக்குக் கூட்டி வந்தார்கள். தோட்டத்துக் கிணற்றிலிருந்து. தண்ணீர் கொண்டு வந்து உடம்பைக் கழுவி விட்டார்கள். பழனிக்கு இன்னும் பயம் நீங்கவில்லை.

வீரனைக் கூப்பிட்டுச் சொன்னான், சடையன்.

''வீரா... பழனியெக் கூட்டிக்கிட்டுப் போயி அவெம் பொண்டாட்டிகிட்டெ விஷயத்தைச் சொல்லி உட்டுப்புட்டு வா...''

''சரிண்ணா...'' என்று வீரன், பழனியைக் கைத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

''ஊட்டுக்குப் போயித் தூங்கீடாதடா பழனி... சட்டியெக் காய வெச்சு வேது புடிக்கச் சொல்லு, செரியாப் போயிடும்... அதென்ன பண்ணிப்புடப் போவுது... தண்ணிச்சார... எம்பட வயசுக்கு இப்படி எத்தன பாம்பு என்னெக் கடிச்சிருக்குந் தெரீமா...?''

வீரனும் பழனியும் வாய்க்கால் மேட்டில் ஏறி நடந்தார்கள். பழனி தள்ளாடித் தள்ளாடி நடந்தான். யாரும் ஒரு பேச்சுப் பேசாமல் அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சடையன், மறுபடியும் சத்தம் போட்டான்.

''பழனி தூங்கீராதடா... முளிச்சுக்கிட்டே இருக்கோணும்... வீரா நீ அவெம் பொண்டாட்டிகிட்டெ விஷயத்தெச் சொல்லி உட்டுட்டு வா... சட்டியெக் காய வச்சு வரவேது குடுக்கச் சொல்லு... சொல்லி உட்டுப்புட்டு வடக்காலக் குட்டைக்கு வந்துருடோய்...''

வீரன் திரும்பிப் பார்த்து ஏதோ சொன்னது போலிருந்தது. ஆனால் காற்றிரைச்சலில் அவன் என்ன சொன்னானென்பது யாருக்கும் புரியவில்லை.

—1981.

www.padippakam.com



## ஒரு விமர்சனம் :

'ஜீவிதம்'

மீன் பிடிக்கச் செல்பவன், பாம்புக்கடிக்கு ஆளாகி அவதிப்படுவதுதான் இக்கதையின் கரு.

வாழ்க்கை, எவ்வளவு பெரிய ஜீவமரணப் போராட்டம் என்பது கொங்கு வட்டார மொழியில் ஜீவிதத்தில் சொல்லப்படுகிறது வெறும் சித்தரிப்புகள் படைப்பாக உருமாறி விடுவதில்லை. அதுவும் வட்டார வழக்கில் எழுதப்படும் கதை, தன்னளவில் கனமானதோர் உணர்வுலகைக் காட்டத் தவறினால், அது மலிவான கலைப்படைப்பாக — வெறும் வார்த்தை ஜாலமாக — ஊனமடைந்து விடும்.

இக்கதையின் உணர்வுலகம், மூன்று தளங்களில் அடுக்கடுக்காகச் செயல்படுகிறது. கையில் கிடைத்தது, மீனா பாம்பா என்றறியும் வாசகனின் துடிப்பு (Suspense), கையில் பிடித்த பாம்பு, பழனியைக் கொத்திவிட்ட சோகம், பாம்புக் கடிக்குப் பரிகார மாக 'மூணு வா தண்ணியெ அள்ளிக் குடிக்கச் செய்யும் சடையனின் பிடிவாதம்'— என்ற இம்மூன்று தளங்களும், தொய்வின்றி கலை நேர்த்தியுடன் பின்னப்பட்டுள்ளன.

பிடிவாதம், அறிவு ரீதியாக இருந்தால், இலட்சியம் எனப் போற்றப்படுகிறது. அறியாமையின் அடிப் படையில் எழும் பிடிவாதம், வெறும் தண்டனை யாகச் சுருங்கி விடுகிறது. அதிலேயும் ஒருவனின் பிடிவாதம், மற்றொருவனுக்குத் தண்டனையாவது, கொடுமையான அவலம்! இந்த அவலத்தை 'ஜீவிதம்' மனசைக் கவ்வும் வண்ணம் சொல்கிறது — நல்ல நெசவு!

—குறிஞ்சி

# மீதி

எல்லோரும் அவனிடம் பிரியம் செலுத்தினார்கள். அவனைப் பார்க்கும்போது அவரவர்க்குள்ள முகங்களை உடனே பிரியமுள்ள முகங்களாக மாற்றிக் கொண்டார்கள். பிரியஞ் செலுத்தலொரு கடமையெனக் கொண்டார்கள். தகப்பனை இழந்து வந்திருக்கிறவனின் மேல் பிரியஞ் செலுத்தாமலிருப்பது கூடாது.

பஸ்ஸை விட்டிறங்குகிற போதே அவனைக் கண்டு கொண்டவர் சுப்பிரமணியம் சார்,

"அட நீங்களா...? வாங்க தம்பி சௌக்கியமா இருக்கீங்களா? திடீர்னு பொறப்புட்டு வந்திருக்கீங்களே, ஒரு லெட்டர் கீது போட்டுட்டு வந்திருக்கலாமில்லையா? ஊர்ல எல்லோரும் சௌக்கியமா? அம்மா தேறீட்டாங்களா? அந்தப் பொடியன்... அவம் பேரென்ன... அவென் பேருலதான் உசுராயிருந்தாரு ஒங்கப்பா!"

எல்லாவற்றுக்கும் ஒரு சேரத் தலையாட்டிச் சொன்னான்,

"எல்லாரும் சௌக்கியமாத்தான் சார் இருக்கோம். நீங்கள்ளாம் நல்லாயிருக்கீங்களா சார்...?"

"என்னமோ இருக்கோம்... சார் தான் இப்படி அகாலமாய்க் காலமாயிட்டாரு. இனியும் அதயே நெனச்சு கவலப்பட்டுட்டு இருக்காம ஆகவேண்டியதெல்லாம் பார்த்துத்தான் ஆகனும்..."

www.padippakam.com



தந்தையின் நினைவுகள் தூண்டப்பட்டவனாய் சுப்பிரமணியம் சாரின் பாதச்சுவடு பற்றி நடந்தான். தந்தையைப் போன்றவரிவர். தந்தையின் திரேகமும் தந்தையின் குரலும், தந்தையின் சுபாவமு முடையவர்.

''அப்பாவோட சாமானெல்லாம் எடுத்துட்டுப் போலாம்னு வந்தீங்களா தம்பி...''

''ஆமா சார்... அப்பா குடியிருந்த வீட்டைக் காலி பண்ணியாகணுமில்லையா? மற்றபடி சாமானெல்லாம் ஒண்ணும் அதிகமிருக்காது...?''

''ஆமாமாம்... என்னமோ கஞ்சி காச்சிக்குடிக்க ரெண்டு சாமாணும், உடுத்திக்க நாலு துணிமணியும், படுத்துக்க பாய் பெட்ஷீட்டுன்னும் வெச்சிருந்தாரு... அப்புறம் அவரு ஓட்டிக்கிட்டு இருந்த பழைய சைக்கிள் ஒண்ணிருக்கும். அது டயர் டியூப்பெல்லாம் ஒண்ணும் வேலைக்காகறாப்பல இல்ல. மாத்தி, ஓவராயில் பண்ணுனா கொஞ்சநாளைக்கு ஓட்டலாம் அப்படியே...''

சுப்பிரமணியம் சாரின் வீட்டுக்குப் போகிற போதே சங்கிலிமுத்து சாரும், துரைராஜ் சாரும் கண்டு கொண்டு உடன் நடந்தார்கள். அப்பாவை எல்லோருமே கடைசி காலங்களில் நிறையப் பராமரித்திருக்கிறார்கள்.

அப்பா செத்துப்போன அன்றைக்கு ஹெட்மாஸ்டருக்கு தந்தி கொடுத்திருந்தான். எல்லாரும் இரவோடிரவாய்ப் புறப்பட்டு வந்துவிட்டார்கள். சுப்பிரமணியம் சாரென்றால் அப்பாவின் பாதந்தொட்டு வணங்கி சிறு பிள்ளையாய் அழத் துவங்கி விட்டார். சங்கிலிமுத்து சாரும், துரைராஜ் சாரும் எல்லோருக்கும் ஆறுதல் சொன்னார்கள்.

www.padippakam.com



''அப்பா போயிட்டா என்ன? நாங்கள்ளாம் இருக்கோம்ல...? அப்பாவோட ஸ்தானத்துல நாங்க இருக்கோம்... யாரும் அழக்கூடாது,''

எல்லோரும் சேர்ந்து பெரிய ரோஜா மாலையாய் வாங்கிப் போட்டார்கள். பாடை தூக்குகிற போது மூன்று பேரும் மாற்றி மாற்றி அப்பாவைச் சுமக்கிறதில் பங்கெடுத்துக் கொண்டார்கள். உறவுக்காரர்களும் ஊர்க்காரர்களும் ரொம்ப ஆச்சரியப்பட்டார்கள். இறந்து போன அப்பாவைக் குறித்துப் பெருமையாய்ப் பேசிக் கொள்ளலானார்கள்.

சங்கிலிமுத்து சார் சொன்னார்,

''அப்பா சாகறதுக்கு ஒரு ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னாலேயே அவரால நடக்க முடியாமப் போயிடுச்சு... பேசக்கூட ரொம்பச் சிரமப்பட்டாரு... நான்தான் இருந்த நெலமயப் பாத்துட்டு சாருகிட்டச் சொன்னேன்... பேசாம ஸ்கூலுக்கு லீவு போட்டுட்டு ஒடம்பப் பத்தரமாப் பாத்துக்குங்க சாருன்னு எனக்கான வரையிலுஞ் சொன்னேன். கேக்கல, மெல்ல ஊர்ந்து ஊர்ந்துன்னாலும் வந்துருவேன்னு சொன்னார். அப்புறந்தான் நெலமயப் பாத்துட்டு தினசரி அவரச் சைக்கிள்ல ஒக்கார வெச்சு கூட்டிக் கிட்டுப் போயிட்டு வர ஆரம்பிச்சோம்.''

துரைராஜ் சார் சொன்னார்,

'அவரென்ன அந்தச் சீக்குக்குப் பயப்பட்டாரா? கையெழுத்துப் போட்டுட்டு பேசாம உக்காந்துக்குங்க சாருன்னு எல்லாருஞ் சொல்லுவோம், கேக்க மாட்டாரு. கொஞ்சம் சுடு தண்ணியெ மேஜைமேல வெச்சுக் குடிச்சிக்கிட்டு அந்தக் குழந்தைகளுக்கு எதையாவதொன்னச் சொல்லிக் குடுத்துக்கிட்டேயிருப்பாரு...''

ப—8

www.padippakam.com



நினைவுகள் சேரச் சேர மனசின் துயரம் அதிகமாயிற்று. அப்பா ஏன் இப்படியெல்லாம் அவஸ்தைப்பட்டார். லீவும் எடுக்காமல்... வைத்தியமும் பார்த்துக் கொள்ளாமல்... மௌனமாய் நடக்கச் சங்கடமாயிருந்தது.

அப்பாவைக் குறித்துப் பேசுகிறவர்களிடம் ஏதும் பேசாமல் வருகிறது சரியில்லை. ஆனால் என்ன பேசுகிறதென்று தெரியாதவனாய் சுப்பிரமணியம் சாரின் வீட்டுக்குப் போகிற வரையிலும் சங்கடத்துடனேயே நடந்தான்.

சுப்பிரமணியம் சார் வீட்டு வாசலை எட்டுகையிலேயே அவரது சம்சாரம் வீட்டுக்குள்ளேயிருந்து ஓடி வந்து அவர்களை எதிர்கொண்டு நின்றது. சொல்லமுடியாத பிரியத்துடனும், தவிப்புடனும் அவனைப் பார்த்தது. பக்கத்து வீடுகளிலிருந்து கமலத்தம்மாள், போஸ்ட்மேன் சம்சாரம் பேச்சிபாட்டி, கோயமுத்தூர் அத்தை எல்லோரும் வந்து அவனைச் சுற்றித் திரண்டார்கள்.

ஒவ்வொருவரும் அவன் மேல் தனிப்பட்ட பிரியம் செலுத்தினார்கள். அவனால் தாங்கமுடியாத அளவுக்கு ரொம்பவும் வெளிப்படையானதாகவும் சம்பிரதாயமானதாகவும் இருந்தது அவர்கள் காட்டின பிரியம். அவனைப் பார்க்கிறபோது இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று முன்கூட்டியே பேசி வைத்துக் கொண்டவர்களைப் போல எல்லோரும் ஒரே மாதிரி நடந்து கொள்ளலானார்கள்.

கோயமுத்தூர் அத்தை மட்டும் எல்லோரையும் விட அதிக உரிமையெடுத்துக் கொண்டு அவனைக் கட்டிப்பிடித்து என்னென்னவோ சொல்லிச் சொல்லியழத் துவங்கிற்று. அவனுக்கு இன்னும் சங்கடமானது. தவிப்புடன் இதிலிருந்து விடுபடும் வழிதேடி யோசித்தான்.

எல்லோரிடத்திலும் அப்பா ஆஸ்பத்திரியிலிருந்து, கடைசி காலங்களில் பேசினது, சாப்பிட்டது, பின் செத்துப்

www.padippakam.com



போனது எல்லாவற்றையும் சொல்லத் துவங்கினான். சொல்லி முடிக்கையில் பின்னுமிருவர் வந்தனர். அவர் களுக்கும் அதே விவரங்களைச் சொன்னான், பின்னும் வந்தனர். ஒவ்வொரு முறை வந்தவர்களுக்காகவும் ஒவ்வொரு தடவை சொல்ல வேண்டியதாயிற்று.

திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான விவரங்களை ஒரே மாதிரியான வார்த்தைகளால் கோர்த்துச் சொன்னான். நிறைய பேருக்குத் திரும்பத் திரும்பச் சொன்ன விவரங் களாதலால் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரி சொன் னான். வார்த்தைகளோ, பாவனைகளோ எதுவும் மாறவேயில்லை. எழுதி வைத்துப் படிக்கிறது போலிருக் கிறது அவன் சொன்னது.

கடைசியில் இதில் அவனுக்கே ஒரு சலிப்புத்தட்டி எரிச்சலு றலானான். மனசில் ஏக்கம் பிடித்தது. முகம் வியர்த்தது; மெலிதாக நடுக்கமுற்றான். பின் சுப்பிரமணியம் சார் சொன்னார்,

> "சரி, போதும் விடுங்க. அவர் சாப்பிடட்டும். வந்ததி லிருந்து வெறுங்காபியோட ஒக்காரவச்சு பேசிக்கிட்டி ருக்கோம். எங்க எப்பச் சாப்புட்டாரோ என்னவோ! வாங்க தம்பி, கையைக் கழுவுங்க சாப்புடலாம்..."

துரைராஜ் சாரும், சங்கிலிமுத்து சாருங்கூட தங்கள் வீடு களில் சாப்பிடக் கூப்பிட்டார்கள். அவன் யாரிடமும் எதையும் மறுக்கவில்லை. ஒவ்வொருவரிடமும் ரொம்பவும் ஜாக்கிரதையாயும், நிதானமாயும் பேசினான். தன் பேச்சின் காரணமாய் யாருடைய மனசும் புண்பட்டு போய்விடக் கூடாதென்கிற பயத்துடனேயே பேசினான். அவர்கள் அவனிடத்தில் பிரியம் செலுத்துதலை அவன் உள்ளூர விரும்பினான். யாரும் அந்த நேரத்திய தங்களது முகங்களை மாற்றிக் கொண்டு விடாதிருக்க வேண்டும்.

www.padippakam.com



சாப்பாடு பரிமாறுகிறபோது சுப்பிரமணியம் சாரின் சம்சாரம் சொன்னது,

"இப்படித்தான் சாரும்... சூதுவாதறியா மனுஷன். ஒண்ணு வேணும்னா கூச்சப்படாமக் கேட்டு வாங்கிச் சாப்புடுவாரு. சலிச்சு வந்தாருன்னா ஒரு டம்ளர் காபி குடுங்க டீச்சரம்மான்னு கேட்பாரு. டீச்சர், டீச்சர்னு கூப்புடாதீங்க சார். எனக்குக்கையெழுத்துப் போடவுங்கூட தெரியாதும்பேன். அதனால என்ன டீச்சர்... வாத்தியார் சம்சாரம் டீச்சர்தானேன்னு சொல்லுவார். சொல்லிட்டுச் சிரிசிரின்னு சிரிப்பார். பாவம் எதார்த்தமான மனுஷன்."

உதட்டில் ஒரு புன்னகை அவிழ பெருமூச்சுவிட்டு நின்றது. சாப்பிட்டபடியே சுப்பிரமணியம் சார் சொன்னார்,

"யதார்த்தம்னா எல்லாருகிட்டயுமா...? அந்த மளிகைக் கடைக்காரன் என்னமோ சுருக்குனு ஒரு வார்த்த சொல்லிட்டான்னு கடேசி வரையிலும் மொகங் குடுத்து அவங்கிட்ட ஒரு வார்த்த பேசலியே... நான் தான் அவருகிட்டச் சொன்னேன். ஒடம்புக்குச் சரி யில்லாத சமயத்துல சமைச்சுக்கிட்டுக் கஷ்டப்பட்டுக் கிட்டு இருக்காதீங்க சார். ஒங்களுக்கு என்ன வேணும் னாலும் கேளுங்க சார். கூச்சப்படாம கேட்டு வாங்கிச் சாப்புடுங்க. இது ஒங்க வீடு மாதிரிம்பேன். அதே மாதிரி தான் நடந்துக்கவும் செஞ்சாரு."

சாப்பிட்டு முடித்து எல்லோரும் வேப்பமரநிழலில் கட்டில் போட்டு உட்கார்ந்தார்கள். துரைராஜ் சார் சொன்னார்,

"கடசீல எங்களுக்கெல்லாம் புரிஞ்சு போச்சு... சாரை வண்டியேத்தி ஒங்க ஊருக்கு அனுப்பறப்போ எல்லோரும் பஸ் ஸ்டாப் வரையிலும் வந்தோம். சங்கிலிமுத்து சார் தான் கூடக்கௌம்பினாரு. அப்ப நாங்க எல்லோரும் சார் மொகத்த பார்த்தோம்

www.padippakam.com



அப்படியென்ன நெனச்சாரோ தெரியல. அவரும் எங்களையெல்லாம் வெறச்சு வெறச்சுப் பாக்குறாரு. எங்களுக்குன்னா ரொம்ப கவலயாப் போச்சு. எங்க சார மறுபடி உயிரோட பாப்பமான்னு நெனச்சேன். கண்ணுல தண்ணி ஊற ஆரம்பிச்சிட்டுது. அத சாருக்குத் தெரியாம மறைக்கனுமேன்னு துண்டால மொகந் தொடைக்கற மாதிரி தொடச்சிக்கிட்டேன்.'

துரைராஜ் சாரின் விழிகளில் இப்போதுங்கூட லேசான மினுமினுப்புத் தென்பட்டது. வேட்டித் தலைப்பினால் துடைத்துக் கொண்டு அமைதிப்பட்டார். பின் சங்கிலி முத்து சாரும், போஸ்ட்மேன் சம்சாரமும் கமலத்தம் மாளும், கோயமுத்தூர் அத்தையும் அவரவர்க்குள்ள நினைவுகளைச் சொல்லத் துவங்கினர். எல்லோருக்கும் அப்பாவைக் குறித்து எவ்வளவோ விஷயங்கள் நினைவி லிருந்தன.

பிறகு எல்லோரும் அவனைச் சுற்றி உட்கார்ந்தார்கள். துரைராஜ் சார் பேப்பரும் பேனாவுமாக கணக்குப் போடத் தொடங்கினார். அப்பா இறந்து போனதனால் கிடைக்கிற பத்தாயிரம் ரூபாய், பிராவிடன்ட் தொகை, கிராஜிவிட்டி, இன்சூரன்ஸ் தொகைகள் எல்லாவற்றையும் கணக்குப் போட்டார்கள். அதோடு அப்பா ஊர்க்காரர் களிடமும், ஆசிரியர்களிடமும் பட்டிருந்த கடன்களையும் கணக்கிட்டார்கள். சங்கிலிமுத்து சார் எல்லாவற்றையும் டைரியில் குறித்து வைத்திருந்தார்.

கடைசியில் எல்லோரிலும் மூத்தவரான சங்கிலிமுத்து சார் சொன்னார்,

''தம்பி, அப்பாவோட பணமெல்லாம் வந்தவொடனே மொதல்ல கடனெல்லாம் அடச்சிடுங்க. வர்ற பணத்தை பொறுப்பாப் பாத்துச் செலவு பண்ணுங்க.

www.padippakam.com



தங்கச்சிங்க ரெண்டு பேருக்கும் கல்யாணத்தைப் பண்ணி வையுங்க மொதல்ல... அப்புறம் அம்மாவை பத்திரமாப் பாத்துக்குங்க. அவங்க மேலதான் உரு ராயிருந்தாரு ஒங்கப்பா... நீங்களும் ஏதோ ஒசு பொண்ணப் பாத்துக் கல்யாணத்தப் பண்ணிக்கப் பாருங்க... எப்படியோ பொளச்சு அப்பா பேர எடுத்தாக வேண்டியது ஒங்க கடமையில்லையா?''

எல்லோருயாய் அப்பா குடியிருந்த வீட்டைப் பார்க்கப் புறப்பட்டார்கள். அப்பா குடியிருந்த வீடு ரொம்பவும் சின்னது. நாலைந்து மாசமாய்ப் பூட்டிக்கிடந்த வீட்டில் தூசியும், பூச்சிக் கூடுகளும் மண்டிக்கிடந்தன. ஒரு விதமான புளுக்கமான காற்றும் மட்கிய வியர்வை வாடையும் வீசிற்று.

சுப்பிரமணியம் சார் சொன்னது போலதான், சாமான்கள் ஒன்றும் அதிகமில்லை. உடுத்திக் கொள்ள ரெண்டு வேட்டியும் (பழையதாகிப் போனதும் கிழிந்து தையல் போடப்பட்டதுமான எட்டுமுழ வேட்டி ஒன்று, புதியதும் சலவை செய்யப்பட்டதுமான நாலுமுழ வேட்டி இன்னுமொன்று) இரண்டு சட்டைகளும், அண்டர்வேர்களும் துண்டும் இருந்தன. அப்புறம் சில அலுமினியப் பாத்திரங்கள். ஒரு ஸ்டவ் அடுப்பு, ஒரு தகரப்பெட்டி, பாய், தலையணை, போர்வை இவ்வளவுதான் அப்பாவின் அறையில் இருந்தவை.

தகரப் பெட்டியில் அப்பாவின் சர்ட்டிபிகேட், ஒரு பஞ்சாங்கம், அப்பாவுக்குக் கருங்கல்பாளையம் மச்சான் கொடுத்த டயரி, அப்பாவுக்கு வந்த கடிதங்கள் ஆகியன இருந்தன. டயரியில் நிறையப் பக்கங்கள் காலியாகக் கிடந்தன. இந்த வருஷம் டயரி எழுத அப்பாவுக்கு வாய்க்கவேயில்லை. கடிதங்களை எத்தனையோ வருஷங்களாகப் பாதுகாத்து வைத்திருக்கிறார் அப்பா. அப்பா, அம்மா எடுத்துக்கொண்ட பழைய போட்டோ ஒன்றும்

படிப்பகம்

www.padippakam.com



இருந்தது. தவிர, தாத்தாவும் அப்பாவும் ரொம்ப வருஷங்களுக்கு முன்பே சேர்ந்தெடுத்துக் கொண்ட போட்டோ ஒன்றுமிருந்தது. அதிலிருக்கிற அப்பா இளமையுடனும் அழகுடனுமிருந்ததைப் பார்த்துச் சந்தோஷப்பட்டான். அந்த போட்டோவில் உள்ள அப்பா இவனைப் போலவும் தாத்தா அப்பாவைப் போலுமிருப்பதாய் சுப்பிரமணியம் சார் சொன்னார்.

அப்பாவின் சைக்கிள் காற்றுப்போன நிலையில் கிடந்தது. வீட்டுக்காரருக்கு அப்பா தரவேண்டிய வாடகை பாக்கிக்காக அந்த சைக்கிளை அவருக்குக் கொடுத்தான். மீதியிருந்த சாமான்களை ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டான். வேட்டியிலும் சட்டையிலும் அப்பாவின் வியர்வை வாடை இருக்கும். ஒவ்வொருவர் உடம்புக்கும் ஒரு தனி வாடை உண்டே. அப்பாவுக்குரிய உடம்பு வாடை அவரது துணிகளில் இருக்கும். அந்தத் துணிகளைத் துவைக்காமல் அப்பாவின் உடம்பு வாடையைப் பாதுகாத்து வைக்க வேண்டும். பாத்திரங்கள் அப்பாவின் எச்சில்பட்டவை. அப்பாவுக்கு வந்த கடிதங்கள் அப்பாவின் வாழ்க்கையைப் பற்றி நிறையச் சொல்லும்.

சுப்பிரமணியம் சாரைத் தவிர மற்றவர்கள் அவரவர் வேலையைப் பார்க்க விடைபெற்றுப் போயினர். சுப்பிரமணியம் சார் மட்டும் பஸ் நிறுத்தம் வரையிலும் வந்தார். சுப்பிரமணியம் சாருக்குப் பிற ஆசிரியர்கள் மேல் ரொம்பக் கோபம்.

''பார்த்தீங்களா தம்பி, இப்படி ஒங்களை ஒத்தையில நிக்க வச்சிட்டு அவுங்கவுங்க பாட்டுக்குப் போயிட்டாங்க... நாளைக்கு அவங்களுக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா கடசிவரையிலும் இருக்க மனசு வருமா...? எல்லோரும் வாயிலதான் சர்க்கரைய வச்சுக்கிட்டுப் பேசுவாங்க...?''

www.padippakam.com



"அதனால என்னங்க சார், பரவாயில்லை...?"

அவன் எவ்வளவோ சொல்லியும் கூட அவர் பஸ் வருகிற வரையிலும் அவர்களைக் குறை சொல்லிக் கொண்டிருந்தார். பஸ் ரொம்ப நேரத்துக்கப்புறமே வந்தது. அது வரையிலும் சலிப்பின்றிக் காத்திருந்தார்.

அவர் மட்டும் இல்லாதிருந்தால் பஸ்ஸில் மூட்டையை ஏற்றுவதற்கு ரொம்ப சிரமப்பட்டிருக்க வேண்டும்.

எல்லாவற்றையும் அம்மாவிடம் சொன்னபோது அம்மா ஒரு விஷயத்தைப் பேச்சுப் போக்கில் அவனிடம் சொன்னாள். கடைசிக் காலத்தில் சுப்பிரமணியம் சார் அப்பாவோடு சண்டை போட்டுக் கொண்டாராம். இதனால் அப்பாவும் அவரும் ரொம்ப நாட்கள் பேச்சு வார்த்தையின்றி இருந்தார்களாம்.

— 1984.

## ஒரு அனுபவம்

'மீதி'

திசைகளெங்கும் சப்தக் கங்குகள் வெடித்துச் சிதறிய நவீன இலக்கியக் கூட்டமொன்றில்தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது! 'இவர்தான் தேவிபாரதி' என்றார் தவமணி. ஒரே நேர்க்கோட்டில் சந்தித்து உரசிக்கொண்டன பார்வைகள். அவர் விழிகளில் ஒளிப்புழுதி. எனது உள்ளங்கையில் அன்பின் ஈரம் கசிந்தது. சற்றைக்கெல்லாம் நாங்கள் நவீன இலக்கியத்தைக் கதைத்தோம். இந்த நிகழ்வு எந்நேரம் வரை நீடித்ததோ, மேடையிலிருந்து அழைப்பு.

www.padippakam.com



மேடையில் தேவிபாரதி, சட்டென சொற்களுக்கு சிறகு முளைப்பதை உணர்ந்தேன். அந்த மண்டபம் முழுவதும் உளியின் செதுக்கல்களில் அதிரும் ஓசை உருண்டோட ஆரம்பித்தது. காற்று உரத்து வீசுகை யில் காலங்காலமாய் திறவுபடா கதவுகள் உடைத்துத் திறந்தன. சட்டென சூல்கொண்ட மேகம் அதிர்ந்து மின்னலும் மழையும் இருதயத்தில் பொழிந்தது.

பிரளயம் ஓய்ந்து ஈரமண்ணின் வாசனையாய் அவர் அழைப்பு, ''வீட்டுக்கு வாருங்கள், 'காம்யு'வின் 'அந்நியன்' தருகிறேன்.''

வீட்டிற்குப் போனோம். வீட்டில் உறவினர் கூட்டம். அவர் அப்பாவின் ஈமச்சடங்கு நடந்து கொண்டி ருந்தது.

'அம்மா செத்துப் போய்விட்டாள். செத்துப்போனது நேற்றாகவும் இருக்கலாம்; அதற்கு முன்னராகவும் இருக்கலாம்' என்றான் காம்யு.

முந்திய நாள் அவர் அப்பா இறந்து போயிருந்தார். அவரது அப்பாவை நான் பார்த்ததில்லை. ஒரு வருடம் கழித்து இந்தக் கதையில் பார்த்தேன்.

—கௌதம சித்தார்த்தன்.

www.padippakam.com

# கருவி

தங்கராசு டெய்லர் தனது பழைய தையல் மெஷினை விற்றுவிட்டான். அதைத்தவிர அவனுக்கு வேறே வழியேதுமில்லாமல் போய்விட்டது.

அதென்ன மெஷினா...?

அதை இவ்வளவு நாளும் வைத்திருந்ததே பெரிய விஷயம். அவனுடைய சகதர்மினி சௌந்திரத்தின் தாய்வீட்டுச் சீதனங்களில் இது ஒண்ணாவது மிச்சமிருக்கட்டுமே என்றுதான் இவ்வளவு நாளும், அதனுடைய இம்சைகளை யெல்லாம் தாங்கிக் கொண்டிருந்தது. இனியும் அதைக் கட்டிழுய அதென்ன தாலி கட்டின பெண்டாட்டியா?

அவனுக்குத் தன் மெஷினையும், பெண்டாட்டி சௌந்திரத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறதில் எப்போதுமே ஒரு அலாதியான பிரியம் உண்டு. அவள் மேல் உள்ள பிரியத்துக்குச் சமதையான பிரியம் அவனுக்குத் தன் மெஷினின் மேலேயும் உண்டு.

அவளோடு சண்டையிட்டுக்கொண்டு அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பியிருக்கிறான். அவளைத் தொலைத்துத் தலை முழுகவும் கூட யோசித்திருக்கிறான். ஆனால் இந்த மெஷினைப் பிரியவோ தலை முழுகவோ ஒருபோதும் எண்ணியவனல்ல தங்கராசு டெய்லர்.

தாய்க்குத் தன் பிள்ளையைப் போலேயும், விவசாயிக்குத் தன் உழவு மாட்டைப் போலேயும் அவனுக்கு மெஷின்.

www.padippakam.com



மெஷினில் உட்கார்ந்து தைக்க ஆரம்பித்துவிட்டால் அவனது சுபாவமே மாறிப் போய்விடும். தங்கராசு இயல்பிலேயே முரடன். ஆனால் மெஷினில் ஏறி உட்கார்ந்த உடனேயே எங்கே ஓடி ஒளிந்து கொள்ளுமோ அந்த முரட்டுத்தனம், கைகால்களுக்குத் தானாக ஒரு பக்குவம் வந்துவிடும். புதுப் பெண்டாட்டியைத் தொடுகிறபோது உண்டாகிற கூச்சமும் பூரிப்பும் உண்டாகும். அதிலும் சேர்ந்தாற்போல நாலைந்து புதுத்துணிகளுக்கு ஆர்டர் வந்துவிட்டால் போதும் மெஷினுக்குத் தனி பூஜையே நடக்கும்.

காலையில் கடையைத் திறந்தவுடனேயே மெஷினைக் கண்ணாடி போல் துடைக்காவிட்டால் மனசு ஆறாது. அடிக்கடி எண்ணெய் விடுவான். வெள்ளிக்கிழமைகளில் சூடம் காட்டி ஊதுபத்தி கொளுத்தி பூ வாங்கிப் போடுவான். தன்னைத் தவிர வேறு யாரையும் மெஷினருகே நெருங்க விடாமல் கண்ணும் கருத்துமாயிருப்பான்.

அதற்கு உயிரும் உணர்வும் இருக்கிறதுபோல அதைத் திட்டுவான். கத்திரிக்கோலால் அடிப்பான், ரொம்ப எரிச்சலான நேரங்களில் இந்தத் தொழிலையுங் கூட வெறுத்து விடுவான். ஆனால் மெஷினின் மேல் அவனுக்குள்ள வாஞ்சை மட்டும் மாறினதேயில்லை, எப்போதும்.

ஆனால் அதெல்லாம் ஒரு காலத்தில், பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னே.

* * *

**சௌ**ந்திரத்தை புதுப்பெண்ணாக லோகநாதபுரத்திற்குக் கூட்டி வந்த தினம்தான் தங்கராசு டெய்லரின் வாழ்க்கையிலேயே ரொம்பவும் சந்தோஷமான தினம். லோகசு

www.padippakam.com



நாதபுரமே ஆச்சரியமும் சந்தோஷமும் கொண்டது; கிழிந்த சாக்குப் படுதாக்கள் தொங்க விடப்பட்ட லோக நாதபுரத்து வீடுகளும், சாக்கடை நாற்றமும், அழுகிய குப்பைகளும் நிரம்பிய தெருக்களும் அவளை அளவற்ற பிரியத்துடன் வரவேற்றன. இத்தனை சௌந்தர்யங் களையுடைய ஒரு பெண் லோகநாதபுரத்திற்கு வசிக்க வருகிறதென்பது லோகநாதபுரத்தின் வீடுகளுக்கும், தெருக்களுக்கும் தகுதிக்கு மீறி அளிக்கப்பட்ட கௌரவம். லோகநாதபுரத்துப் பெண்கள் எல்லோருமே அவலட்சண மானவர்களில்லை.

கேசவன் நாயர் பெண்டாட்டி உன்னிமேரிக்குப் பல் வரிசைதான் கொஞ்சம் தாறுமாறாக முளைத்துள்ளனவே தவிர, அவளுடைய கண்கள் கெண்டை மீன்களைப் போல அழுகானவை. தாமஸ் மெக்கானிக்கின் மூத்தமகள் வசந்த ரூபிக்கு மூக்குக் கொஞ்சம் பெரிதாயிருந்தாலும் அவளுக்கிருக்கிறதைப் போன்ற கருகருவென்று நீளமாக வளர்ந்த அடர்த்தியான கூந்தல் வேறே யாருக்கிருக் கிறது? சுப்பிரமணியக் கவுண்டரின் பெண்டாட்டி சம்பூரணம் கருப்புதான், ஆனால் அவளைப் போல வாளிப்பான உடற்கட்டுள்ள பெண்கள் அபூர்வம். பரிமளாவின் புருவங்களின் அழகையும் எலிசபெத் டீச்சரின் முத்துப்பல் வரிசையும், உஷாராணியின் சிவந்த பாதங்களையும், பூனைமுடி வளர்ந்த கரண்டைக் கால் களையும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சளைக்காமல் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.

இவையெல்லாம் உண்மையெனினும், சௌந்திரம், மேற் சொன்ன அத்தனை அங்க லட்சணங்களையும் தான் ஒருத்தியே பெற்றிருந்தாள் என்பதும் எல்லோரும் ஒப்புக் கொள்கிற விஷயம்தான்.

ஆனால் தங்கராசு டெய்லரின் சந்தோஷத்திற்கும், பெரு மிதத்திற்கும் அது மட்டுமின்றி வேறொரு காரணமும்

www.padippakam.com



இருந்தது, மாமனார் வீட்டிலிருந்து புத்தம் புதிய தையல் மெஷின் ஒன்றும் சீதனமாகக் குதிரை வண்டியில் வந்திறங்கியது, அவனது பூரிப்பை இரட்டிப்பாக்கிவிட்டது.

புதுப்பெண்டாட்டியைப் பார்க்க வருகிறவர்களிடமெல்லாம், மெஷினையும் காட்டி அபிப்ராயம் கேட்டான். பெரியவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குகிறபோது சொன்னான்,

''மெஷினப் பார்த்தீங்களா? சும்மா...கர்ண மகா ராசா தேராட்டங் கொண்டாந்து ஏறக்கிருக்கேன்...''

பெண்டாட்டியோடு டென்ட் கொட்டகைக்கும், கடை வீதிக்கும், உறவுக்காரர்களுடைய வீடுகளுக்கும் போகிற போதெல்லாம் இந்த மெஷினையும் தூக்கிக்கொண்டு போக முடியாததுதான் அவனுக்கு ரொம்பவும் வருத்தமான விஷயம்.

மூன்றாம்நாளே லோகநாதபுரத்தில் பூவரச மரத்தினடியில் ஒரு கடையை வாடகைக்கு அமர்த்தி அதில் தன் புது மெஷினை வைத்து, ''சௌந்திரம் டெய்லர்ஸ்'' என்று பெயரும் வைத்து உட்கார்ந்து விட்டான். அன்றைக்கு மெஷினுக்கும் அவனுக்கும் திருஷ்டி சுற்றிப் போட்டாள் சௌந்திரம்.

கடையும் என்னவோ நன்றாகத்தான் ஓடியது, தங்கராசு தன்னுடைய பெண்டாட்டியை மெஷினைப் போலவே எவ்வளவோ ப்ரியத்துடனும் பாங்குடனும்தான் வைத்து வாழ்ந்து வந்தான். ஆனால் காலம் என்ற ஒன்று இருக்கிறதே, அது அப்படியேவா இருந்துகொண்டிருக்கிறது?

ஒரு உதாரணத்துக்குச் சொல்லப்போனால், இப்போது சுதந்திர நாடாக அறியப் பட்டிருக்கிற நம்முடைய நாடு

www.padippakam.com



தங்கராசு பிறக்கிறபோது வெள்ளைக்காரனிடம் அடிமை நாடாக இருந்தது. தங்கராசும் அப்போது டெய்லராக இருக்கவில்லை. டெய்லராகத்தான் ஆக வேண்டுமென்ற இலட்சியமும் அவனுக்கிருந்ததில்லை. என்னவோ அவனைப் பெற்றவன், 'பள்ளிக்கூடம் போடா' என்றான் போனான், பின்னர் ஒரு நாளில், 'நீ படிச்சிக் கிழிச்சது போதும்' தையல் கடையில போய் தொழில் பழகு' என்று சாயபு டெய்லரிடம் சேர்த்து விட்டான். தங்கராசும் தந்தையின் கட்டளையை சிரமேற்கொண்டு தையல் பழகப் போனான்.

முதலில் காஜா எடுத்தான், பட்டன் கட்டினான்.

ஆரம்பத்தில் அவனுக்கு இந்தத் தொழிலைப் பிடிக்கவே யில்லை. இருமல் நோயாளியான அந்த சாயபு டெய்லர் அவன் தலையில் நறுக் நறுக்கென்று குட்டுவதையும் அவனது தொடையைப் பிடித்து நெறுநெறுவென்று கிள்ளுவதையுமே தன்னுடைய குருபீடத்திற்குரிய கடமைகளெனக் கொண்டிருந்தான்.

சின்னப்பையனான தங்கராசு தன்னுடைய குருவின் மேற்படி நடவடிக்கைகளினால் மிரண்டு போய் குனிந்த தலை நிமிராமல் பட்டன் கட்டி வரலானான். 'சும்மா இருக்கறப்ப அப்படியே மெஷின் பக்கம் போய் தையல் பழகு என்று பெற்றவன் அடிக்கடி சொல்லுவான். ஆனால் தங்கராசு மெஷின் பக்கம் போனால் சாயபு கத்திரிக்கோலால் அடிப்பான்.

பாவம் தங்கராசு...

தான் ஒரு நாளும் சாயபுவிடம் தையல் தொழிலைக் கற்றுக் கொள்ளப் போவதில்லையென்றும், காலம் பூரா காஜா எடுத்துக்கொண்டு பட்டன் கட்டிக்கொண்டுதான் இருக்க வேண்டுமென்றும், இந்த சாயபுவும் தனக்கு

www.padippakam.com



மண்டை என்ற ஒன்று இருக்கிறவரையிலும் குட்டிக் கொண்டும் தொடையில் சதையிருக்கிற வரை கிள்ளிக் கொண்டும் தான் இருக்கப்போகிறானென உறுதியாக நம்பிக்கொண்டிருந்தான்.

எத்தனையோ வெயில்காலம், குளிர் காலம், மழைக் காலம், காற்றடிப்புக் காலம் எல்லாம் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. பிள்ளைகளின் விளையாட் டுக்கூட கிள்ளி, பம்பரம், சடுகுடு, கோலி என்று அடிக்கடி மாறுதலுக்குட் படுகின்றன. இவையெல்லாம் யாருடைய முயற்சியுமின்றி நடக்கிறவைதான்.

ஆனால் தங்கராசு எவ்வளவோ முயன்றும், காஜா எடுக்கிறதிலிருந்தும், பட்டன் கட்டுவதிலிருந்தும் சாயுபு டெய்லரிடமிருந்து குட்டுகளும் வசவுகளும் வாங்குகிற திலிருந்தும் மாற முடியவில்லை.

என்ன ஆனாலும் சரியே, இனி சாயுபு டெய்லரிடம் மட்டும் வேலைக்குப் போகமாட்டேன் என்று வீட்டிலி ருந்தும் பார்த்தான். அன்றைக்கு அவனுடைய அய்யா சாயுபு டெய்லருக்குப் பதில் அடிக்கவும், திட்டவும் செய்தார். இதற்கு சாயுபு எவ்வளவோ மேல், சாயந்தர மானால் ஒரு டீயாவது வாங்கித் தருவார்.

எனவே தங்கராசு, தனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை இதுதான், அது ஒரு போதும் மாறவே மாறாது என்று முடிவு கட்டிக்கொண்டு தன்னுடைய அன்றாடக் கடமை களைச் செய்து வந்தான்.

ஆனால் தங்கராசு நினைத்ததற்கும் மாறாக அவன் தையல் தொழிலைக் கற்று, டெய்லர் என்கிற யோக் கியதாம்சத்துடன், சௌந்திரத்தைக் கல்யாணமும் பண்ணி புத்தம் புதிய தையல் மெஷினை சீதனமாகப்

www.padippakam.com



பெற்று லோகநாதபுரத்தில் கடையும் வைக்கிற அளவுக்கு வாழ்க்கை மாறிப் போய்விட்டது.

தங்கராசு பிறந்தபோது வெள்ளைக்காரனிடம் அடிமை நாடாக இருந்த நம்முடைய நாடு இப்போது சுதந்திர நாடாக மாறிவிட்டது என்பது முன்பே குறிப்பிட்ட விஷயம். ஆனால் அந்த மாற்றம் ரொம்ப நாட்களாகத் தங்கராசு டெய்லருக்குத் தெரியவில்லை. அதற்காக அவனைக் குற்றம் சொல்ல முடியாது, யாராலும்.

சுதந்திரம் வந்த நள்ளிரவில் தங்கராசு தூங்கிக் கொண்டிருந்திருக்கிறான். அப்போது தங்கராசு ரொம்பச் சின்னப்பையன். அன்றைக்கு நள்ளிரவில் சுதந்திரம் கிடைக்கப் போகிற விஷயம் அவனுக்குத் தெரியாதாகையால் தையல் கடையிலிருந்து வந்ததும் கஞ்சியைக் குடித்துவிட்டுப் படுத்து விட்டான். படுத்தவுடனேயே சாயபு டெய்லர் கனவில் வந்து விட்டான். கனவிலும் சாயபு சும்மா இருக்கவில்லை. தங்கராசுவைக் குட்டவும் கிள்ளவும் செய்திருக்கிறான். முதல் குட்டிலேயே தங்கராசுவுக்கு மண்டை உடைந்து ரத்தம் பெருகுகிறது. தொடைச் சதையை அப்படியே பிய்த்தெடுத்துவிட, வெறும் எலும்பு மட்டும் இருந்திருக்கிறது. காதைத் திருகியிருக்கிறான், தலையே காணாமல் போய்விட்டது. முதலில் சாயபு சாதாரணமாகத்தான் மெஷினில் உட்கார்ந்தபடி இருமிக்கொண்டு காட்சியளித்தான். அப்புறம் பார்த்தால் எருமை மாட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். கண்கள் ஒவ்வொன்றும் தேங்காய் அளவுக்குப் பெரியதாய் இருந்திருக்கிறது. தாடி மொத்தமும் சேர்ந்து பெரிய மீசையாய் முகத்தில் இருக்க, இஞ்ச் டேப் பாசக் கயிறாகிவிட, இருமலுக்குப் பதில் கர்புர் என்று கர்ஜித்தபடி, தங்கராசுவை துரத்தோ துரத்து என்று துரத்த...

www.padippakam.com



பாவம் தங்கராசு 'காஜா, பட்டன், எமன், பாசக்கயிறு, டேப்பு, மண்டை, தொடை, ரத்தம், அய்யோ...' என்று அலறியடித்துக் கொண்டு எழ... அவனுடைய அப்பாவும் அம்மாவும் பையனுக்கு என்னவோ ஏதோவென்று பதறி சமாதானப்படுத்திப் படுக்க வைத்திருக்கிறார்கள். இந்த சந்தடியில் தங்கராசு டெய்லருக்கு, சுதந்திரம் வந்த விஷயமே தெரியாமல் போய்விட்டது. இப்போதும் கூட அவனுக்கு அதைப் பற்றியெல்லாம் அதிகமாய் ஒன்றும் தெரியாது. தானுண்டு, தன் வேலையுண்டு என்று வாழ்ந்து வருகிறான். அவன் பெரியவனாகி ஓட்டுப் போடுகிற வயது வந்தவுடன் யாரோ ஓட்டுப் போடக் கூப்பிட தங்கராசு கேட்டானாம்,

''ஓட்டா...? எதுக்கு? எப்படிப் போடறது?''

''நம்பள ஆளுறவுங்கள நாமலே தேர்ந்தெடுக்கணும் தங்கராசு... இது சொதந்திர நாடில்ல...'

இவ்வளவுதான் தங்கராசு டெய்லருக்குச் சுதந்திரத்தைப் பற்றித் தெரியும்.

இப்படி எவ்வளவோ மாற்றங்கள் தங்கராசு டெய்லருக்குத் தெரியாமலேயே வந்தபோதும் அவைகளினால் பெரிய லாபங்களோ நஷ்டங்களோ ஏதுமில்லை, அவனுக்கு. ஆனால் லோகநாதபுரத்தில் குடித்தனங்களும், பிரஜைகளும், அதிகமாகி இன்னும் சில புதிய தையல் கடைகளும் ஆங்காங்கே முளைத்துவிட்ட போதுதான் தங்கராசு டெய்லருக்கு உலக நடப்புகள் தன்னுடைய வாழ்க்கையையும் பாதிக்க முடியும் என்பதை உணர முடிந்தது.

முதலில் கட்டபொம்மன் வீதியில் பகதூர் டெய்லர் கடை முளைத்தது.

பகதூர் இளவயசுக்காரன். நவீன மோஸ்தரில் துணிமணிகள் தைக்கத் தெரிந்தவன். ஆளும் பார்வைக்கு

ப—9

www.padippakam.com



அழகானவனாயும், நாகரீகமானவனாயும் இருந்தான். விதவிதமான துணிமணிகள் உடுத்திக் கொண்டு டிப்டாப் பாகக் கடையில் உட்கார்ந்திருப்பான். தனது தொழில் திறமைக்குத் தானே ஒரு சான்று என்பது போல இருக்கும் அவனது தோரணை. கடைக்கு அவன் வைத்த பெயர் கூட ரொம்பக் கவர்ச்சியானதாயிருந்தது. அப்போது புகழ் ஏணியின் உச்சியில் நின்று ஆடிக்கொண்டிருந்த ஒரு கவர்ச்சி நடிகையின் பெயர் அது. நூற்றுக்கு தொண்ணூற் றொம்பது சதம் படங்களில் துணியே இல்லாமல் வெறும் உள்ளாடைகளுடன் நடனமாடியிருக்கிறாள். பகதூர் தன்னுடைய தையல் கடைக்கு துணியே போட்டறியாத அந்தக் கவர்ச்சி நடிகையின் பெயரையும் வைத்து, கடைக்குள்ளே அவளுடைய படத்தையும் மாட்டி வைத்த வுடனேயே லோகநாதபுரத்து பிரஜைகள் சுமாமாவேனும் பகதூர் டெய்லர் கடைக்குப் போய்வரத் துவாங்கி னார்கள்.

நம்முடைய தங்கராசு டெய்லருக்கு இதெல்லாம் முடிகிற காரியமாய் இல்லை. முதலாவதாக தங்கராசு இனி என்ன பாடுபட்டாலும், எந்தக் காலத்திலும் பகதூர் டெய்லரைப் போல் வாலிபனாய் மாற முடியாது. அது இயற்கையின் சாபம், இரண்டாவதாக, பகதூர் டெய்ல ரைப் போல நவீன மோஸ்திரில் துணிகள் தைக்கத் தெரியாது, தங்கராசு டெய்லருக்கு. இத்தனை வயசுக்கும் மேல் யாராவது ஒரு டெய்லரிடம் போய் குட்டுகளும் வசவுகளும் வாங்கிக் கொண்டு கற்றுக்கொள்ளவா முடியும்? அல்லது அப்படியொரு டெய்லரை சம்பளத் திற்கு அமர்த்திக் கொள்ளுவதும் அவனுக்கு முடியாத காரியம்.

நாலு ஜீவன்கள் சாப்பிடுகிறதும், பையனையும் பெண் ணையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறதுமே பெரிய காரியங்களாயிருக்கின்றன. தங்கராசு டெய்லர் தன்

www.padippakam.com



பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப இரண்டு காரணங்கள், ஒன்று தன்னைப் போல் தனது பிள்ளைகளும் ஒன்றும் தெரியாமல் வளர்ந்து விடக்கூடாது. தனக்குத்தான் நாடு சுதந்திரம் பெற்ற விவகாரம்கூடத் தெரியவில்லை, தன் பிள்ளைகளாவது நாட்டு நடப்பைப் பற்றி நாலு விஷயங்கள் தெரிந்தவர்களாக வரட்டுமே என்கிற ஆசை. இன்னொன்று, தன் பிள்ளைகளும் தன்னைப் போலவே டெய்லராகப் போய் வயிற்றுப் பாட்டுக்கே வழியில்லாமல் தாளம் போடுகிற நிலையில் இலாமல் படித்து நல்ல உத்தியோகத்துக்குப் போய்விட வேண்டுமென்ற நினைப்பு.

அப்புறம், பகதூர் டெய்லரின் மெஷினைப் போல தங்கராசு டெய்லரின் மெஷின் புதுசாயில்லை, பழசாகி பாகங்கள் பழுதுபட்டுப் போய்விட்டன. அவன் மெஷினில் உட்கார்ந்து தைக்க ஆரம்பித்தவுடன் வருகிற கடகட வென்ற பெருத்த இரைச்சலின் காரணமாக அவன் கடைக்குப் பக்கத்திலிருக்கிற லோகநாதபுரத்துப் பிரஜைகள் அவனைத் தனது ஜென்ம விரோதியாகவே நினைக்கத் துவங்கியிருந்தனர். கவர்ச்சி நடிகையின் படத்தை மாட்டுவது ஒன்றுதான் இப்போதைக்கு காரிய சாத்தியமான விஷயம். கடையின் பெயரைப் பொறுத்த அளவில் ‘சௌந்திரம்’ என்ற பெயரைக் காட்டிலும் வேறெந்தப் பெயரும் கவர்ச்சியாவதில்லை என்பது அவனது உறுதியான அபிப்பிராயம்.

அதனால் தொழில் ரீதியில் பகதூர் டெய்லரோடு போட்டி போடுவது இயலாத காரியம் என்பது தங்கராசு டெய்லருக்குத் தெளிவாயிற்று.

ஆனாலும் என்ன?

மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போய்விடுவான்? அல்லது படைத்தவன்தான் படியளக்காமல் போய்

www.padippakam.com



விடுவானா? அப்படி ஆளாய்ப் பறந்து சம்பாதித்து ஆகப் போகிறதென்ன? சிட்டுக்குருவி வயிராட்டம் நாலு வயிறு. அது நிரம்பாமலா போய்விடப் போகிறது! வருகிறது வரட்டும், வாழ்கிறபடி வாழ்வோம் என்றெல்லாம் பலவாறாகத் தத்துவ விசாரங்களில் ஈடுபட்டுத் தன்னைத் தேற்றிக் கொள்ளத் துவங்கினான்.

ஆனால் அப்படியும் காலம் விட்டு வைக்கவில்லை. கட்டபொம்மன் வீதியில் பகதூர் கடை வைத்த மாதிரி, அண்ணா வீதியில் பீட்டரும், அம்பேத்கார் வீதியில் ராகவனும் தையல் மெஷினை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். ஆனால் அவர்களுடைய தொழில் திறமையோ கடைகளின் கவர்ச்சியோ தங்கராசு டெய்லருக்குப் புதிதாய் எந்த நஷ்டத்தையும் விளைவிக்க வில்லை. சௌந்திரத்தின் தாய் வீட்டுச் சீதனமான அந்த மெஷின் இப்போது தைக்கவே லாயக்கற்றுப் போய் விட்டது. எப்போதாவது ஒரு துணி இரண்டு துணிகள் என்று வந்து கொண்டிருந்தன. அதைத் தைக்கத் தேவை யான நூலோ மெஷினுக்குவிட எண்ணெயோ அவனிடம் இருக்காது. துணியைக் கொடுத்தவர்களிடமே கொஞ்சம் பணம் வாங்கி தைத்துக் கொடுத்தால் உழைப்புக்கு ஒன்றோ இரண்டோ மிஞ்சும்.

அதையும் வருகிற கடன்காரர்களுக்குத் தகுமானஞ் சொல்லி, பல்லை இளித்து இளித்து, கெஞ்சிக் கூத்தாடிக் காப்பாற்றி எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து பெண் டாட்டி சௌந்திரத்திடம் கொடுத்தால்தான் அவள் வசவுகளில்லாமல் வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றுவாள். இல்லாவிட்டால்.

"நீயும் ஒரு ஆம்பிளைன்னு இருக்கறயே... உன்ன யாட்டவ மத்த ஆம்பிளைக... ஒரு நாளைக்கு ஒரு காப்பிடி அரிசிக்குக் கூட ஒரு குடும்பம் பாக்கற

www.padippakam.com



ஆம்பிளை சம்பாதிக்கலீனா... பொம்பள எப்படிக் குடும்பம் தாட்டுவா...? பாவம் அந்தப் பையனும் புள்ளையும் அதுக வயசுக்குப் பட்டறைக்குப் போயி னாலும் ரண்டு பணம் கொண்டு வரலீனா அடுப்பும் பொகையாது... அதுகளப் படிக்க வெச்சுப் பாடையில போடறேன்னு சொன்ன, அதுக்கும் கையிலாவுல''

அவளுக்குத் தங்கராசின் பதில் மௌனம்தான். பாவம் அவளும்தான் என்ன செய்வாள்? அவள் சீதனமாகக் கொண்டு வந்த மெஷினை போலேதான் அவளும். எத்தனையோ பெண்களைப் போல அவளும் நிறையக் கனவுகளுடன்தான் புருஷன் வீட்டுக்கு வந்தாள். ஆனால் வாழ்க்கை அவளுக்குக் கண்ணீரையும் துக்கத்தையுமே தந்தது.

இவ்வளவுக்கும் பின்னர் கூட தங்கராசு மெஷினை விற்க வில்லை, கடையில் உட்கார்ந்து கொண்டு, வருகிற துணி களுக்காகக் காத்திருக்காமல், துணிகள் இருக்குமிடத்திற்கு அவனே போகத் துவங்கினான். ஒரு பலகையில் சக்கரங் களை மாட்டி, அதன் மேல் மெஷினை வைத்துக் கொண்டு தெருத் தெருவாகப் போய் பழந்துணிகள் தைத்தான்.

எங்கேயானால் என்ன? திருடவில்லை, பொய் சொல்லி யாரையும் ஏமாற்றவில்லை. வயிற்றுப்பாட்டுக்கு நேர்மை யான வழியில் உழைக்கிறோம் என்று வாழ்க்கை விடுத்த சவாலை சமாளிக்க முயன்றான்.

ஆனால் துரதிருஷ்ட வசமாக நமது கதையின் நாயகன் ஒரு அரசியல் தலைவனாகவோ சினிமாக் கதாபாத்திர மாகவோ இல்லையாதலால் சவால் விடுவதும், சவாலை ஏற்றுக்கொள்வதும் அவனுக்குப் பழக்கப்படாத விஷயங் களாகி விட்டன.

கடன்காரனிடத்தில் சவால் விடமுடியுமா?

www.padippakam.com



கடன்காரனுக்குப் பதில் சொல்ல முடியாததால் தங்கராசு டெய்லர் தனது மெஷினை விற்க வேண்டியதாகிப் போயிற்று. தங்கராசு எப்படிக் கடன்பட்டான் என்கிற நதிமூலம், ரிஷிமூலம் எல்லாம் பார்க்க வேண்டிய தில்லை

இதெல்லாம் சகஜந்தான்.

நம்முடைய நாட்டில் டாட்டா, பிர்லா என்று எத்தனையோ கோடீஸ்வரர்கள் இருக்கிறார்களாம். அவர்களுக்கும்கூட கோடிக்கணக்கில் கடன் இருக்கிறதாம். எவ்வளவு பெரிய நாடு இந்தியா? இருந்தும் அமெரிக்காவிடம் எத்தனையோ ஆயிரம் கோடி கடன் பட்டுள்ளதாம்.

தங்கராசு எம்மாத்திரம்?

ஒரு சாதாரண தையல்காரன், அவனுக்கும் இருநூற்றைம்பது ரூபாய் கடன் இருந்தது. கடன்காரன் அன்றைக்குத் தங்கராசு டெய்லரை மெஷினும் கையுமாகப் பிடித்துத் தோளில் துண்டைப் போட்டு இழுத்துப் பிடித்துக்கொண்ட போது தங்கராசு டெய்லருக்கு வேறு வழியேதுமில்லாமல் போய்விட்டது.

மெஷினை விற்றான்.

அந்த மெஷினை எத்தனையோ தடவை திட்டியிருக்கிறான், அடித்திருக்கிறான். இதை எப்போதடா தலைமுழுகலாம் என்றுங்கூட யோசித்திருக்கிறான். ஆனால் மெஷின் அவனை விட்டுப்போனபோது மனசுக்குள்ளேயே பொருமிப் பொருமி அழுதது, அவனைத் தவிர வேறே யாருமறியாத ரகசியம்

* * *

இனி தங்கராசு என்ன செய்வான்? அது அவனுக்கே புரியாத விஷயம்.

www.padippakam.com



கடன்காரனுக்குப் போக எஞ்சிய சில ரூபாய் நோட்டு களை எடுத்துக்கொண்டு சாராயக் கடைக்குப் போனான். அந்த மெஷின் மூலம் இவ்வளவு வருவாய் வந்து எவ்வளவோ காலமாகிவிட்டது. சாராயக்கடையிலிருந்து விழிகள் சிவக்க கால்கள் தள்ளாட நேரே லோகநாத புரத்துக்கு வந்தான்.

கட்டபொம்மன் வீதியில் பகதூர் டெய்லர் கடை சுறுசுறுப் பாக இருந்தது. நின்று கடையை வெறித்துப் பார்த்தான். புது மெஷின், இளவயசுக்காரனான பகதூர் டெய்லர். அவனைப் பார்க்கவும் தங்கராசு டெய்லருக்கு, தான் இளைஞனாகி மெஷினில் உட்கார்ந்திருந்த காலங்கள் நினைவுக்கு வந்தன. விழிகளில் நீர் பொங்கிற்று.

தள்ளாடித் தள்ளாடிக் கடைக்குள் நுழைந்தான். அண்டர் வேர் பாக்கெட்டிலிருந்து மிச்சமிருந்த ரூபாய் நோட்டு களை எடுத்துக் கொத்தாகக் கையில் பிடித்துக் கொண்டான்.

''பகதூர்!''

ரூபாய் நோட்டுகளை பகதூர் டெய்லரின் முகத்துக்கு நேரே உயர்த்தி விரித்துக் காட்டினான்.

''பாத்தியா, நா மெஷின வித்துட்டேன்... எத்தனை வருஷமாக எங்கிட்டே இருந்த மெஷினு தெரியுமா அது? எம்புள்ளயாட்டம் வச்சிருந்தேன். இன்னைக்கு வித்துட்டேன். இதென்ன மெஷினு... மயிரெப் புடுங்குன மெஷினு. இத வெச்சுக்கிட்டு பழைய துணி கூடத் தெக்க முடியாது. போனாப் போவுது மசுரு... இன்னொரு மெஷினு வாங்குனாப் போவுது... புது மெஷினு, உம்பட மெஷின விடப் புது மெஷினா வாங்கிக் காட்டறேன். என்னடா குடிச்சுட்டு உளர் றான்னு பாக்கறியா? ஆமா குடிச்சேன்... பதனஞ்சு ரூபாய்க்குக் குடிச்சந் தெரியுமா? இதென்ன மசுரு...

www.padippakam.com



இன்னங் குடிப்பேன்... இருக்கறதெல்லாத்துக்கும் குடிப்பேன். காசென்ன மசுருக்காசு... நீ குடிக்கிறியா?''

தங்கராசு, பகதூர் டெய்லரிடம் சண்டை போட்டான். தன்னுடைய மெஷினை வாங்கின கதை, விற்ற கதை, அதனுடைய அருமை பெருமைகளை எல்லாம் சொன்னான். சொல்லிச் சொல்லி அழுதான். இதையெல்லாம் அவன் இன்னும் நிறைய பேரிடம் சொல்லு வான்.

அண்ணா தெருவில் உள்ள பீட்டர் டெய்லரிடமும் அம்பேத்கார் தெருவிலுள்ள ராகவன் டெய்லரிடமும் இன்னும் லோகநாதபுரத்தின் எல்லா பிரஜைகளிடமும் சொல்லுவான். மனுஷ முகம் என்று எந்த முகத்தைப் பார்த்தாலும் சொல்லுவான்.

தன் பெண்டாட்டி சௌந்திரத்திடமும் பிள்ளைகளிடத்திலும்கூட தன் மெஷினைப் பத்திச் சொல்லிச் சொல்லி அழுவான். சண்டையும் போடுவான்.

அதையெல்லாம் சொல்ல என் எழுத்துக்கு வீரியம் போதாது.

-1984.

## ஓர் அனுபவம்

'கருவி'

இந்த 'கருவி' கதையைப் படித்த உந்துதலில்தான் 'கட்டில்' என்ற கதையை எழுதினேன்.

— கௌதம சித்தார்த்தன்.

www.padippakam.com

# மிருக வேட்டை

கடைசியில் வானரப்படை சபாபதி முதலியாரின் வீட்டுத் தோட்டத்தைத் தமது வாசஸ்தலமாக்கிக் கொண்டது. அதுகளுக்கு அங்கே ரொம்ப சௌகரியம்.

தென்னைகள் குலைகுலையாய்க் காய்த்து நின்றன. வாழை மரங்கள் பூவும் பிஞ்சுமாய், பசுமையான இலைகள் விரிந்து கர்ப்பிணிப் பெண்ணுக்குரிய பூரிப் போடும் பெருமையோடும் காற்றில் அசைந்தாடின. காலடியில் இலை பிரியாத கன்றுகள் தாய் வாழையின் கைப்பிடித்து கவலையற்றுக் கிடக்கும். கொக்குகளையும், மனிதர்களால் தவற விடப்பட்ட விரிந்த பூக்களையும் வானத்தை நோக்கி ஏந்திப் பிடித்தபடி வரிசை வரிசையாய் பூஞ்செடிகள், சிவப்பாய் பழங்கள் வெடித்துத் தொங்கும் மாதுளம் மரங்கள், கிளைகளில் பச்சைப் பாம்புகளாய்த் தொங்க விடப்பட்ட முருங்கைகள்... என்று முதலியாரின் தோட்டத்தை சங்கப் புலவர்களின் மரபுப்படி வர்ணித்துக் கொண்டே போகலாம். ஊரின் தகுதிக்கு மீறிய தோட்டம், வீடு, வாழ்க்கை சபாபதி முதலியாருடையது. குரங்குகளுக்குக் கேட்க வேண்டுமா?

தேங்காய்களை இஷ்டம்போல பறித்துப் பிய்த்தன. வாழைப் பிஞ்சுகளையும், மாதுளம் பழங்களையும், வேண்டுமட்டும் தின்று தீர்த்தன. பூவோடும் பிஞ்சு களோடும் தோட்டம் முழுக்க முருங்கைக் கிளைகள்.

www.padippakam.com



குரங்குகள் கண்ணில்பட்ட பூக்கள் என்ன கதியாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

தோட்டத்துக் கொடியில் காயப் போட்டிருந்த துணிகளை வாரிச்சுருட்டி மரத்து உச்சிகளுக்குக் கொண்டு போயின. முதலியாரின் சகதர்மினி கமலாம்பாள் ஆசையுடன் பாதுகாத்து வைத்திருந்த பட்டுச்சேலை இரண்டு துண்டுகளாக தென்னைமர உச்சியில் தோரணமாடியது. அவரது மூத்த மகள் காலேஜ்குயின் ராஜேஸ்வரியின் ஷிபானை அய்ந்தாறு குரங்குகள் அங்கவஸ்திரங்களாக்கிப் போட்டுக் கொண்டன. முதலியாரின் புத்தம் புதிய சில்க் ஜிப்பாவுக்குள் ஒரு பெரிய ஆண் குரங்கு புகுந்து கொண்டது.

முதலியாரின் பிள்ளைகளுக்கு நல்ல வேடிக்கையாயிற்று.

முதலியாருக்கு ஊருக்குள் உலோபி என்று பெயர். ஆனால் குழந்தைகள் விஷயத்தை எடுத்துக் கொண்டால் ஊரின் கூற்று நம்பும்படியாயிருக்காது. அரசாங்கத்தின் எச்சரிக்கைகளையும் பயமுறுத்தல்களையும் மீறி ஒரு டஜனுக்கு ஒன்று குறைய பிள்ளைச் செல்வங்களை பூமிக்கு அளித்திருந்தார். முன்னால் குறிப்பிட்ட காலேஜ்குயின் ராஜலட்சுமிக்கு வயது இருபத்தி இரண்டு. தற்போதைய நிலவரப்படி கடைக்குட்டியான சுரேசுக்கு மூன்றரை வயது. ஏறக்குறைய் ஒவ்வொன்றும் ஒரு வருஷ வித்தியா சத்தில் பிறந்தவை. மூத்தவளைத் தவிர மற்றதெல்லாம் ஒரே செட்டாகச் சுற்றித் திரியும். இதுகள் தான் ஒரிஜனல் வானரப்படை. தங்கள் வீட்டுத் தோட்டத்தில் வானரப் படை முகாமிட்டிருப்பதைக் கேள்விப்பட்டு எல்லாமும் தோட்டத்தில் திரண்டன.

ஒரே கூச்சலும் கும்மாளமும்.

குரங்குப் பட்டாளத்துக்குக் கொஞ்சம் பயம்தான்.

www.padippakam.com



என்னதான் வாலி பெரிய பராக்கிரமசாலியாயிருந்தும் சுக்ரீவனைக் கண்டு பயப்படவில்லையா? எல்லாமும் கப்சிப்பென்று மர உச்சிகளில் பதுங்கிக் கொண்டன, கடைக்குட்டி சுரேசுக்குத் தலைகால் புரியாத சந்தோஷம்.

''அய்யா... அந்தக் கொரங்கப்பாரு... அப்பா சட்டையெப் போட்டுகிச்சு...''

அவனுக்கு அந்தக் குரங்கைப் பார்க்கையில் அப்பாவின் ஞாபகம்.

இன்னொருத்தனுக்கோ அம்மாவின் காஞ்சிபுரம் பட்டுச் சேலை மர உச்சியில் தோரணமாடுவதைப் பார்க்கையில் ரொம்ப வேடிக்கையாயிருந்தது.

''அய்யய்யோ... அக்கா சேலையப் பாரு... துண்டு துண்டாக் கிழிஞ்சு கெடக்குது?''

செய்தி நேரே வீட்டுக்குள்ளே படித்துக் கொண்டிருந்த அக்காவின் காதுகளுக்குப் போயிற்று. ராஜேசுவரிக்கு அழுகையே வந்துவிட்டது. அந்த ஷிபானில் காலேஜுக்குப் போகிறபோது ஒரு ஆம்பிளையாவது அவளைத் திரும்பி ஒரு தரம் பார்க்காமல் போக மாட்டான்.

ஒருத்தன் குரங்குகளைப் பார்த்து பழிப்புக் காட்டினான். குரங்குகள் பதிலுக்கு பல்லைக் காட்டி பயமுறுத்தின. இன்னொருவன் குரங்கைப் போல் மூக்கைச் சொரிந்து காட்டினான். பிட்டத்தைக் குலுக்கினான்.

குரங்குகள் கிரீச்சிட்டுக் கத்தின. பதிலுக்கு பிள்ளைகள் தரப்பிலிருந்து கூச்சல் கிளம்பியது.

ஒருத்தன் மரஉச்சிக்குக் கல் விட்டான். தொடர்ந்து எல்லோரும் கல் பொறுக்கினார்கள்.

www.padippakam.com



கடைசியில் குரங்குகள் நேரடித்தாக்குதலுக்குத் தயாராகிக் கீழே இறங்கின.

பிள்ளைகள் கூட்டம் பயந்து சிதறிற்று. கடைக்குட்டி சுரேஷ் மட்டும் மாட்டிக் கொண்டான்.

* * *

எங்கிருந்து வந்தனவோ பத்துப் பதினைந்து குரங்குகள் —பிள்ளையும் குட்டியுமாக வந்து சேர்ந்தன. ஆரம்பத்தில் எல்லாம் ஈஸ்வரன்கோயிலுக்குள் குடிபுகுந்து கொண்டன. கோயில் வேப்பமரக் கிளைகளில் எல்லாம் பேன் பார்த்துக் கிடக்கும். கோயில் அர்ச்சகர்களும் பக்தர்களும் தருகிற பிரசாதங்களை கை நீட்டி வாங்கிக் கொள்ளும். கோயிலுக்கு வருகிற குழந்தைகளுக்கெல்லாம் குரங்குகள் நல்ல வேடிக்கையாயிற்று. எல்லோரும் குரங்குகளை தெய்வத்துக்கும் சமமாக கடவுளின் செல்லப்பிள்ளைகளாக; ராம தூதனாக, ஹனுமனின் அவதாரமாக கௌரவிக்கலானார்கள்.

கோயிலுக்கு வருகிறவர்கள் குரங்குகளுக்கென்று தனியாய் பழமோ தேங்காயோ கொண்டு வரலானார்கள். மனுஷர்கள் கொடுக்கிற தின்பண்டங்களை அந்த வாயில்லா ஜீவன்கள் பயந்து பயந்து கைநீட்டி வாங்கிக் கொள்ளுவதையும், அவசர அவசரமாய் வாய்க்குள் திணித்துக் கொண்டு கடவாய்கள் புடைத்து நிற்பதையும் பார்க்க எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷமாயிருந்தது. குரங்குகளின் வருகை கோயிலுக்கு தனி ஜீவனையே கொண்டு வந்திருந்தது.

ஆனால், நாளாக நாளாக குரங்குகளால் தொந்தரவாயிற்று. எல்லாமும் ஊருக்குள் நுழையத் துவங்கின. வீட்டுக் கொல்லைப் புறங்களிலும், கிணற்றடிகளிலும், வாய்க்கால் கரைகளிலும் காயப் போடப்பட்டிருக்கிற

படிப்பகம்

www.padippakam.com



துணிகளை சுருட்டிக்கொண்டு ஓடிவிடும். வீட்டுக் கூரைகளில் எதையாவது தூக்கிப் போட்டு ஓடுகளை உடைத்துவிடும். ஆள் அயர்ந்திருக்கிற நேரம் பார்த்து பெட்டிக் கடைகளில் வாழைப்பழம் திருடுகிற கலையில் ஒவ்வொரு குரங்கும் அசாதாரணத் திறமை பெற்றிருந்தது. சந்தைக்குப் போய்த் திரும்புகிற பெண்களின் கூடைகளில் பாய்ந்து கைக்ககப்பட்டதைத் தூக்கிக் கொண்டு ஓட்டம் பிடிக்கிற சாதுர்யம் நம் தமிழ் சினிமாவில் வருகிற ஸ்டண்ட் நடிகர்களுக்குங்கூட கைவரப் பெறாத ஒன்று.

பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்காகப் போய்வர பிள்ளைகளால் முடிவதில்லை. புத்தகப் பையைக் குரங்கு பிடுங்கிக் கொண்டு போய்விட்டதென்று வீட்டில் வந்து புத்தகங்கள் கேட்கிற பிள்ளைகள் நாளுக்கு நாள் பெருகினார்கள். அப்படி பெற்றோர்களிடம் புதுப்புத்தகங்கள் பெற்று விட்ட பிள்ளைகளைப் பார்த்து தங்களுடைய புத்தகங்களை குரங்குகளுக்குத் தானம் பண்ணின பிள்ளைகளும் உண்டு. அதே சமயத்தில் புத்தகங்களை இழந்து விட்டு வாத்தியார்களிடத்திலும் பெற்றோர்களிடத்தும் வசவுகளும் அடிகளும் வாங்குகிற பிள்ளைகளுமிருந்தனர். இது தான் சாக்கென்று சில பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் போவதையே நிறுத்திக் கொண்டனர். பிள்ளைகள் அடிக்கடி குரங்குகளால் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர்.

வானரங்கள் தெய்வாம்சமாகக் கருதப்பட்டதனால் ஆரம்பத்தில் மக்கள் அவற்றை பக்தி கலந்த மரியாதையுடனும், அன்புடனும் நடத்தி வந்தார்கள். நாளடைவில் எல்லாவற்றையும் போலவே இதுவும் சலிப்புத் தட்டி விட்டதாலோ, பழகிப் போனதாலோ மக்கள் அவற்றைப் புறக்கணித்தும், அவற்றைப் பற்றிய பிரக்ஞையேயின்றியும் குரங்கு தானே என்ற போக்குக்குத் தங்கள் நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டார்கள்.

www.padippakam.com



இப்போதோ மக்கள் வானரங்களின் மேல் அருவருப்பும், பயமும், கோபமும் கொண்டிருந்தார்கள். அவற்றைக் காண நேர்ந்தால் ஒன்றா தூர விலகிப் போய் விடுகி றார்கள், இல்லையா, கையில் கிடைத்தவற்றைக் கொண்டு அடித்து விரட்ட முயற்சித்தார்கள். குரங்குகளை ஆஞ்ச நேயன் என்றும், ஹனுமன் என்றும் கையெடுத்துக் கும்பிட்டவர்கள் இப்போது 'சனியன்', 'பீடை' 'நவக்கிரகம்' என்றும் இன்னும் வாய்க்கு வந்தபடி யெல்லாம் ஸ்தல பாஷைகளில் வசை பாடினார்கள்.

மக்களுடைய கோபத்தையெல்லாம் வீராச்சாமி ஒன்று சேர்க்க முயன்றான்.

பார்க்கிறவர்களிடத்திலெல்லாம் குரங்குகளின் அட்ட காசத்தைப் பற்றிப் பேசுவதே வீராசாமிக்குத் தொழி லாயிற்று வீராச்சாமியின் பேச்சு வன்மையால் குரங்கு களைப் பற்றிய நினைவேயில்லாதிருந்தவர்களுங்கூட அவற்றைத் தமது ஜென்ம பகையாய்க் கருதவும், அவற்றை ஒழித்துக்கட்டி விட்டுத்தான் மறுவேலை என்று சிந்திக்கவும் துவங்கினர்.

வீராச்சாமி தனக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டான்.

ராத்திரி வேளைகளில் தீவட்டிகளோடு ஊரைச் சுற்றி அலைந்தது வீராச்சாமி கூட்டம். வேல் கம்பு, அரிவாள், கூழாங்கற்கள் எல்லாவற்றையும் கொண்டு குரங்குகளை எங்கே கண்டாலும் தாக்கினார்கள். ஊர்க்காரர்களிடம் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் வசூலித்து பட்டாசுக் கட்டுகளை வாங்கி வெடித்து பயங்காட்டினார்கள்.

ஒரு தடவை ஒரு பெண் குரங்கு தன்னுடைய சிறு குட்டி யுடன் அவர்களிடத்தில் மாட்டிக் கொண்டது. வீராச்சாமி அதை வைத்துக்கொண்டு பிற குரங்குகளுக்குப் பயங் காட்டலாமென்று சொன்னான்.

படிப்பகம்

www.padippakam.com



அந்தப் பெண் குரங்கின் காதுகளில் துளையிட்டு, இரும்பு வளையங்களைத் தொங்கவிட்டான். சவரக்கத்தியினால் அதன் உடம்பு முழுக்கச் சிரைத்தான். மயிர்களிழந்து உடல் முழுக்க இரத்தக் காயங்களுடன் குரங்கு அலறியது. பிறகு அதன் கைகளைப் பின்புறமாகச் சேர்த்து இரும்புச் சங்கிலியால் கட்டி, வாலை நறுக்கிவிட்டுத் துரத்திவிட்டு விட்டான்.

அதனுடைய சிறுகுட்டி வீராச்சாமி கொடுத்த ஒற்றை அடியில் தலை நசுங்கிச் செத்துப் போயிற்று.

இரண்டு நாட்களுக்கப்புறம் அந்தப் பெண்குரங்கும் சந்தைப்பேட்டை புளிய மரத்தினடியில் செத்துக் கிடந்தது. அதற்குப் பின்னால் கொஞ்ச நாட்கள் குரங்குத் தொல்லை இல்லையென்றாலும் இந்தச் சம்பவத்தினால் ஊர்க்காரர்கள் வீராச்சாமியை வெறுத் தொதுக்கத் துவங்கினர். பெண்களும், சிறு பிள்ளைகளும் வீராச்சாமியையோ, அவன் கூட்டத்திலவரையோ கண்டால் பயத்துடனும், அருவருப்புடனும் விலகினர். ஒரு சிலர் மட்டும் வீராச்சாமி செய்தது சரி என்றதுடன், அதற்குப் பின்னால் அவன்மேல் மதிப்பும் மரியாதையும் செலுத்தத் துவங்கினர்.

ஆனால் குரங்குக் கூட்டம் கொஞ்ச நாட்கள் எங்கேயோ சுற்றிவிட்டு மறுபடியும் ஊருக்குள் நுழைந்ததும் வீராச்சாமிக்கு மதிப்புக் கூடிற்று. வீராச்சாமியை உள்ளுக்குள் வெறுத்தவர்கள்கூட இது விஷயத்தில் அவனைப் புகழ்ந்து பேசி, இதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றும், அவன் ஒருவனால்தான் வானரக் கூட்டத்தை இனி ஊர்ப் பக்கமே தலைவைத்துப் படுக்க முடியாமல் செய்ய முடியுமென்று சொன்னார்கள்.

இந்தத் தடவை வீராச்சாமி ஒரு யோசனை சொல்லிப் பார்த்தான். நரிக்குறவர்களுக்குக் கொஞ்சம் பணம்

www.padippakam.com



கொடுத்து எல்லாக் குரங்குகளையும் சுட்டுக் கொல்லுவது தான் சரியென்றான்.

கடைசியில் ஒரு நாலைந்து பேர் வீராச்சாமியுடன் சேர்ந்துகொண்டு பக்கத்து ஊர்களிலெல்லாம் அலைந்து தேடி ஒரு நரிக்குறவக் கூட்டத்தைக் கண்டுபிடித்தனர்,

நரிக்குறவர் தலைவன் ஒரேயடியாய் மறுத்துச் சொன்னான்.

"வேற பேச்சிருந்தா பேசுங்க சாமி யோவ்... வானரக் கூட்டம் ஆஞ்சநேயரோட அம்சம்...நாங்க வனத்துல அலஞ்சு வயித்தக் கழுவுறவுங்க சாமி யோவ்... வனத்துக்கு அரசனக் சுடுவமா...?"

வீராச்சாமி சும்மா திரும்பவில்லை. நிறையப் பணம் தருவதாகச் சொல்லிப் பார்த்தான். தலைவன் ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் கையில் வாட்சும், தலை மாட்டில் டிரான்சிஸ்டரும் வைத்திருக்கிற வாலிபப் பையன்கள் சிலபேர், தலைவனின் கட்டளையையும் மீறி, குரங்குகளைக் கொல்ல ஒப்புக்கொண்டனர். ஆனால் ஒரு குரங்கைக் கொல்ல நூறு ரூபாய்... அப்படியானால் பத்துப் பதினைந்து குரங்குகளுக்கு ஆயிரம் ஆயிரத் தைநூறு ரூபாயாவது ஆகுமே...?

வீராச்சாமி எவ்வளவு வாதாடியும் அதற்குக் குறைவான தொகைக்கு ஒத்துக்கொள்ளவில்லை அவர்கள். கடைசியில் வீராச்சாமி ஊருக்குத் திரும்பி வந்து தன்னுடைய அலைச்சலுக்கும் கூலி சேர்த்து ஒரு தொகை சொன்னான்.

சிலர், நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பணம் கொடுத்தனர். சிலர் நமக்கென்ன என்கிற ரீதியில் பேச்சின்றி இருந்து கொண்டனர். கடைசியில் தேவையானதில் பத்தில் ஒரு பங்கானதொரு சொற்பத் தொகை தான் வசூலாயிற்று.

www.padippakam.com



வீராச்சாமியும் இன்னுஞ் சிலரும் சேர்ந்து கொண்டு சபாபதி முதலியாரைப் பார்க்கப் போனார்கள்.

சபாபதி முதலியார் ஊரின் ஒரு தரப்பினரால் மகா கஞ்சன் என்றும், பிறிதொரு தரப்பினரால் கொடை வள்ளல் என்றும் அறியப்பட்டிருப்பவர்.

ஆயிரக்கணக்கான நெசவாளிகளுக்குச் சோறு போடுகிற கை அவருடைய கை என்றும், தெய்வ காரியங்களுக்கும், பொதுக் காரியங்களுக்கும் பணத்தைப் பணமென்று பாராமல் வாரியிறைப்பவர் என்பது இரண்டாவது தரப்பினரின் வாதம்.

ஊரில் உள்ள ஏழை மக்களின் வயிற்றிலடித்துச் சம்பாதிப்பவன் என்பதும், அவனுக்கு ரத்தத்தைக் கொட்டிச் சம்பாதித்துத் தருகிற நெசவாளிகளுக்கு காலணா அதிகம் கூட்டித் தரமாட்டானென்பதும் முதல் தரப்பினரின் வாதங்கள். இரண்டு தரப்பினரின் வாதங்களிலுமே உண்மையிருக்கிறது. ஆனால் எதில் நியாயம் இருக்கிறது என்று விவாதிக்கிற ரகம் இன்னொரு தனிக்கட்சி.

வீராச்சாமி சொன்னதைக் கேட்க, சபாபதி முதலியாருக்கு அடக்க மாட்டாமல் சிரிப்புப் பொங்கிற்று.

''அதென்னப்பா அதுக பாட்டுக்கு ஒரு பக்கமா இருந்துட்டுப் போகுது... நம்பள என்ன பண்ணப் போகுது...? நல்லவேல பண்றீங்க போங்க...''?

வீராச்சாமிக்கு அவரது பதிலும் சிரிப்பும் கோப மூட்டின.

''அதுக பண்ற ரகள தாக்குப் புடிக்கலீங்க... ஊருக்குள்ள ஒரு வீட்டக்கூட பாக்கி வெக்காம எல்லா வீட்டு ஓட்டையும் நொறுக்கிப் போட்டுருக்குதுங்க...''

ப—10

www.padippakam.com



"அட... ஏப்பா நீ வேற... அதுகளுக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு...! பாவம் வாயில்லா ஜீவனுங்க அதுக வயித்துப் பாட்டுக்கு என்னத்தை யாவது பண்ணும். நம்பகிட்ட அழிப்பு பண்றதுக்கா வருது... அப்படியே வந்தாத்தான் என்ன... ரெண்டு கல்லத் தூக்கிப் போட்டா ஓடிட்டுப் போகுது... இதுக்குப் போயி பத்தநூறு செலவு பண்றாங் களாம். ஏம்பா எல்லாருக்கும் புத்திகூறு கெட்டுடுச்சா...?"

பின்னும் மறுத்துச் சொன்னான் வீராச்சாமி.

"அதில்லீங்க... பள்ளிக்கூடத்துப் புள்ளீக நெறையப் பேருத்தக் கடிச்சும், நகத்துல கீறியும் காயம் பண்ணி வெச்சிருக்குதுங்க... நானும் என்னென்னமோ பண்ணிப் பார்த்தேன். கொஞ்சநாள் கண் காணாம எங்கயோ போயிருந்துதுக... இப்ப மறுபடியும் வந்து ரகள பண்ணுதுங்க..."

சபாபதி முதலியார் முகம் மாறிக் கோபமுற்றார்.

"அட... ஏப்பா நீங்க வேற... வேல மெனக்கெட்டுப் பேசிக்கிட்டு... புள்ளீக ஒழுங்காப் போயி வந்துக்கிட் டிருந்தாங்கன்னா அதுகளும் அதுக பாட்டுக்குப் பொறுக்கித் தின்னுகிட்டுத் திரியும். அத விட்டுட்டு அதுகளப் போயி கல்லால அடிக்கவும், கம்பால் அடிக்கவும் செஞ்சீங்கன்னா அதுகளும் அழிம்பு பண்ணத்தாஞ் செய்யும். அதுக அனுமன் பரம்பரை, அந்தக் காலத்துல சீதாதேவி ரூபத்திலிருந்த மகா லட்சுமியெ ராவணங்கிட்டெயிருந்து மீட்டுக் கொண்டாரதுக்கு ராமன்னான மகாவிஷ்ணுவுக்கு உதவி செஞ்ச கூட்டம் வானரக் கூட்டந்தான். அதுகளப் போயி பணங்குடுத்து சுட்டுக் கொல்றாங்களாம். அப்புறம் அந்தப் ..பழி

www.padippakam.com



பாவத்த யாரு அனுபவிக்கிறது...? நீங்க ஒங்க வேலையெப் பாத்துக்கிட்டுச் சும்மா இருந்தீங்கன்னா அது போதும்... அத விட்டுப்புட்டு ஊருக்கு நல்லது செய்யறேன்னு கண்டதெப் பண்ணிக்கிட்டிருக்கா தீங்க... ஏன்... இப்படியொரு வேல செஞ்சாக்க அதுல நாலு பணம் பொறுக்கித் தின்னலாம்னு பாக்கறீங்களா?''

சபாபதி முதலியாரிடம் பேசி ஜெயிக்க முடியவில்லை. கடைசியில் வீராச்சாமி வயிறெரிந்து சொன்னான்,

''ஊரையெல்லாம் வாயில போட்டுச் சம்பாதிச்சு வச்சிருக்கிற பணத்தில ஒரு ஆயிரம் ரூபா செலவு பண்ணுனா என்ன கொறஞ்சா போயிரும்? மேடையில மாலையெப் போட்டுத் தலைவரா ஒக்காத்தி வெக்கறம்னா கத்த கத்தயாக் குடுப்பாரு... இவுங்க வீட்ல புகுந்து அழிம்பு பண்ணுனா... இவுங்க புள்ள குட்டிக கண்ணக் காதப் புடுங்குனா, அப்பறந் தெரியும் தெய்வமும் கொரங்கும்...''

* * *

வீராச்சாமி சொன்ன வார்த்தைகளின் சுவடுகள் மறையக் கூட இல்லை. சபாபதி முதலியார் தன்னுடைய கடைக் குட்டி சுரேஷை குற்றுயிரும் குலையுயிருமாக ஆஸ்பத்திரி யில் சேர்க்க வேண்டியதாயிற்று.

மறு யோசனையின்றி வீராச்சாமியைக் கூப்பிட்டனுப்பி னார்.

''வீராச்சாமி... எத்தன செலவாயிட்டாலுஞ் சரியே... அந்த நரிக்கொறவக் கூட்டத்தை வரச் சொல்லு... மொதல்ல இந்த வானரக் கூட்டத்தை வெரட்டியடிக்கணும்...?''

www.padippakam.com



வீராச்சாமிக்கு ஒரு வகையில் சந்தோஷம்.

கடைசியில் முதலியார் தன் வழிக்கு வந்து சேர்ந்தாரில்லையா? முதலில் கொஞ்சம் கிராக்கி பண்ணினான். கடைசியில், நரிக்குறவர் கூட்டத்துக்குப் போக தனக்கொரு கணிசமான தொகை மிஞ்சுமளவுக்கு முதலியாரிடம் பணம் வாங்கிக் கொண்டு போனான்.

வீராச்சாமி நரிக்குறவர் கூட்டத்துடன் திரும்பி வருகையிலும் வானரக் கூட்டம் சபாபதி முதலியார் வீட்டுத் தோட்டத்தை விட்டுப் போகாமலேயே இருந்தது.

ஊரே வேடிக்கை பார்க்கத் திரண்டது.

சின்னப்பிள்ளைகள் உற்சாகத்துடன் நரிக்குறவர்களின் பின்னால் திரண்டு திரிந்தார்கள். ஆளொன்றும் துப்பாக்கி ஒன்றுமாக அய்ந்தாறு நரிக்குறவர்கள் சபாபதி முதலியார் வீட்டுத் தோட்டத்தினுள் புகுந்தார்கள். முதல் குறியிலேயே இரண்டு குரங்குகள் அடிபட்டுத் தரையில் வீழ்ந்தன. குரங்குக் கூட்டம் பயங்கொண்டு சிதறிற்று.

எல்லாமும், முதலியாரின் பெரிய வீட்டுக்குள் புகுந்து கொண்டன. முதலியார் வீட்டுப் பெண்கள், குழந்தைகள் எல்லோரும் பயப்பிராந்தியுடன் வெளியே ஓடி நின்று கொண்டனர்.

குறவர் கூட்டமும், வீராச்சாமி கூட்டமும் முதலியாரின் வீட்டுக்குள் நுழைந்து, ஒவ்வொரு அறையாகப் போய், குரங்குகளிருக்குமிடங்களைத் தேடிப் பிடித்துக் கொன்றார்கள்.

வீட்டுக் கண்ணாடிகள், பாத்திரங்கள், எல்லாம் நிறைய நொறுங்கின. சமையலறை, பூஜையறை, முதலியாரின் படுக்கையறை, படுக்கைகள், போர்வைகள், துணிமணிகள்

www.padippakam.com



எல்லாவற்றின் மீதும் திட்டுத்திட்டாக குரங்குகளின் ரத்தம். ஒன்றிரண்டு குரங்குகள் மட்டும் உயிர்தப்பி கண் காணாத தூரங்களுக்கு ஓடிவிட்டன.

* * *

இது நடந்து எத்தனையோ வருஷங்கள் ஆகிப்போய் விட்டன

இப்படியொரு சம்பவம் நடந்ததையே ஊர்க்காரர்கள் மறந்து விட்டார்கள், சபாபதி முதலியாரைத் தவிர.

வானரங்கள் கொல்லப்பட்ட பிறகு முதலியார் நடந்து கொண்ட விதத்தை நினைத்தால்தான் ஆச்சரியமாயிருக் கிறது.

அந்தச் சம்பவம் நடந்ததற்கு மறுநாள் முதலியார் ஆட்களை விட்டுத் தன்னுடைய அவ்வளவு பெரிய வீட்டுக்கும் வெள்ளையடிக்கச் செய்தார். குரங்கின் ரத்தம் பட்ட பொருட்கள், போர்வைகள், துணிமணிகள் எல்லா வற்றையும் தீயிட்டுக் கொளுத்தினார். குரங்குருவம் செய்து வைத்து பிராமணர்களைக் கொண்டு தனிபூஜை நடத்தி விருந்து கொடுத்தார். தான தருமங்கள் செய்தார். பிறகுதான் மறுபடியும் அந்த வீட்டுக்குள் நுழைந்து வசித்தார்.

இதைவிட, முதலியார் தன்னுடைய சொந்தப் பொறுப்பில் ஊரினுள் ஆஞ்சநேயருக்கு ஒரு பெரிய கோயிலே கட்டி வைத்தார் என்பதுதான் பெரிய ஆச்சரியம்!

—1984.

www.padippakam.com



## ஒரு விமர்சனம்

'மிருக வேட்டை'

தன்னை, தான் வாழும் உலகை, தான் இயங்கும். தன்னை இயக்கும் சமுதாயத்தைப் பற்றிய புரிதலை ஏற்படுத்தவும், அதன் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் செயல்பூர்வமான உணர்வை வாசகனுக்கு ஊட்டுவதாகவும் கலை இருக்க வேண்டும். கலை வெறும் பொழுது போக்குச் சமாச்சாரம் அல்ல. தனது சலவைக் குறிப்புக்கூட இலக்கியம் என்று மார் தட்டிக்கொள்ளும் எழுத்தாளரும், அவருடைய வாசகரும் செல்வாக்குப் பெற்றுள்ள, ஆபாசமான—பொய்மையான கலை இலக்கியச் சூழலில், மனித வாழ்வின் சிக்கல்களை, இருபதாம் நூற்றாண்டுக் கருவிகளும், கற்காலச் சிந்தனையுமான வாழ்வின் முரணை, சமூக அக்கறையுடன் சித்தரிக்கும் எழுத்தாளர்களுள் தேவிபாரதியும் சேர்கிறார்.

உடனுக்குடன் சமரசம் செய்துகொள்ளும் மன நிலையை உடையவர்கள் வணிகர்கள். குரங்கு ஒரு சமூகப் பிரச்சனையாக உருவெடுத்த பின்னரும், தனிப்பட்ட முறையில் தனக்குத் தொல்லை எதுவு மில்லை என்பதால், வீராசாமியின் முயற்சிகளை எதிர்க்கிறார் முதலியார். குரங்குகளை தெய்வாம்ச மாகக் காண்கிறார். தான் பாதிக்கப்பட்டதும் வெகுண்டு எழுகிறார். குரங்குகள் அழித்தொழிக்கப் பட்டதும் துவண்டு போய், தன்னுடைய, தன் கிராமத்தினுடைய எதிரியையே கோயில் கட்டிக் கும்பிடும் மௌடீக நிலைக்குத் தள்ளப்படுகிறார். அரசியல் ஆதாயங்களுக்காக, நமது முஸ்லீம் சகோதரனை நம் பகைவனாகக் காட்டும், பார்ப்பன

www.padippakam.com



அரசியல் தலைமையை இக்கதையில் வரும் எந்தப் பாத்திரம் தன் குறியீடாகக் கொண்டுள்ளது? மண்டல் மந்திர் அரசியல் சித்து விளையாட்டை இக் கதைக்குள் பொருத்திப் பார்க்கக் கூடுமா? எதிரியை, எதிரியாகப் புரிந்து கொள்ளமுடியாத, புரிந்து கொள்ளத் தவறுகிற ஒரு சமூகம் அடிமைத் தளை களைத் தானே முன்வந்து பூட்டிக்கொள்வது தவிர்க்க முடியாதது. பார்ப்பனீயத்தின் இன்றைய வெற்றியை யும், மௌடீகச் சகதியில் புதையுண்டு போன தமிழ்ச் சமூகமும்தான் இந்தக் கதையின் பின் புலமா?

சமூக உளவியல் தளத்தில், பன்முகத் தன்மையுடன் எழுதப்பட்ட இக்கதை, மனிதனையும், அவனது உலகத்தையும் பல்வேறு பரிமாணங்களில் சித்தரிக் கிறது. மிருக வேட்டை, தமிழிலக்கியத்தில் தேவீ பாரதிக்கு ஒரு தனித்த இடத்தைப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

—கி. சிதம்பரம்.

# அழைப்பு

மறுபடியும் அழைப்பது கேட்டது. ஓயாமல் தொந்தரவு செய்தது.

அவனுக்கு முடியவில்லை. எவ்வளவோ பிரயாசைப் பட்டும் முடியவில்லை. இமைகளின் இருண்ட உட்சுவர் களில் விழிகள் மோதின, அலை பாய்ந்தன.

இருள், இருள் தவிர வேறில்லை.

சிரமப்பட்டுக் கைகளால் தேடினான். குரலுக்குரிய உருவம் அகப்படுமாவெனத் தேடினான். குரல் மிக அருகாமையிலிருந்தே வந்தது. உதடுகளைச் செவியருகே உணர முடிந்தது. ஆனால், கைக்ககப்பட்டதும் இருள் தான்.

அழைத்தது, பெயர் சொல்லிச் சொல்லி.

''ம்... ம்...'' முனகினான்.

சட்டென்று குரல் காணாமல் போயிற்று.

செவிப்புலன்களைக் கூர்தீட்டிக் காத்திருந்தான் காணோம். அமைதி, பேரமைதி.

ஒருவேளை அவனது முனகலில் திருப்தியடைந்திருக்கலாம். அழைப்பின் நோக்கமே அவனது அந்தப் பலகீனமான முனகலில் பூர்த்தியடைந்தது போல.

தொந்தரவு விட்டதுதான்.

www.padippakam.com



ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தான். எப்போது தூங்கினோம் என்ற பிரக்ஞை இல்லை. இதற்கு முன் விழித்திருந்த ஞாபகமும் இல்லை. அப்படியொரு நெடிய உறக்கம். குரல் உறக்கத்தைக் களைத்தெறிந்து விட்டது.

மறுபடித் தூங்க முடியவில்லை.

இமைகள் மூடியே கிடந்தனவென்றாலும், உணர்வுகள் பூரணமாக விழித்திருந்தன.

அழைத்தது யார்? என்ன சொல்லி, எதற்காக அழைத்தார்கள்? ஒருவேளை பிரமையோ? கனவோ? காற்றின் இரைச்சலோ? ஏதேனும் மிருகமோ? ஒன்றையும் நினைவுக்கு மீட்க முடியவில்லை. புரண்டான்.

விரல்களில் பிசுபிசுவென்று எதுவோ ஒட்டியது. என்ன வென முகர்ந்தான். குப்பென்று அழுகல் வீச்சமடித்தது. அருவருப்புடன் கைகளைத் தரையில் தேய்த்தான். தேய்க்கத் தேய்க்க இன்னும் ஒட்டியது.

முதுகுப்புறம் நனைந்து, ஆடை உடலோடு ஒட்டிக் கிடந்ததை உணர முடிந்தது.

எங்கு... எங்கு கிடக்கிறோம்?

ஒரே வீச்சில் எழுந்து நின்றான். பளீரென முதுகுத் தண்டு வலித்தது. கால்கள் நடுங்கின. சகதி குண்டும் குழியுமாய்ச் சொதசொதத்துக் கிடந்தது தரை. பிடிப்பின்றி பாதங்கள் தடுமாறின. எழுவது, நிற்பது, எல்லாமே புதிய அனுபவம் போல. எச்சரிக்கையோடு, கைகளை அலையவிட்டு, இருளைத் தடவித் தடவி முன்னேறினான், எங்கிருந்தோ, எதிலிருந்தோ தப்பிவிடும் முனைப்புடன், மூர்க்கத் தனமாக.

சட்டென்று எதன் மீதோ மோதினான் .

www.padippakam.com



வெருண்டு போய் என்னவென அறியமுயன்றான். எதுவும் புலப்படவில்லை. இருளின் சிறையிலிருந்து இன்னும் விடுபடவில்லையே. ஒருவேளை இருளின் மேலேயே மோதியிருக்கலாம்.

எனினும் தவிப்பு.

"யாரு...?"

பளாரென்று கன்னத்தில் எதுவோ அறைந்தது.

"யாரு...?"

"குருட்டுப் பயலே..."

தொடர்ந்து மூர்க்கத்தனமான தாக்குதலுக்குள்ளானான். கூச்சலும், காலடிச் சப்தங்களும்.

அவன் மூர்ச்சையுற்றுக் கீழே சரிந்தான், தலைகுப்புற நெற்றி தரையில் மோதி உடைந்தது. யாரோ முதுகின் மேல் நடந்தார்கள். நினைவின் கடைசி இழை மட்டும் ஊசலாடிற்று. குரூரமான சிரிப்புச் சப்தம் வந்தது. எக்காளச் சிரிப்பு. முதலில் அவனை அழைத்த குரலின் சாயல் அந்தச் சிரிப்புச் சப்தத்திற்கிருந்தது.

—1986.

## ஒரு விமர்சனம்

'அழைப்பு'

நாம் மட்டும் அல்ல; வாழ்க்கையும் கனத்த இருளுக்குள் சிக்கி ஆயிற்று. பாதை இல்லாக் காட்டில் பயணம் செய்யத் துடிக்கும் பாதங்களின்மீது கோடரி வெட்டுகள் விழுகிறது. ஒளியைத் தேடித் தவிக்கின்

படிப்பகம்

www.padippakam.com



றோம். ஆனால் பார்வையை வழங்க வேண்டிய ஒளியே கண்களைக் குருடாக்கும் கொடூரம் இக் கதையில் அரூபமாய்ப் பன்முக அர்த்தத் தளத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாழ்க்கை, பலவீனனை வம்புக்கு இழுத்து சவால் விடுகிறது; நாம் வழுக்கி விழுவதைப் பார்த்து கெக்கலி கொட்டிச் சிரிக்கிறது; நம்முடன் மல்லுக்கு நிற்கிறது. நெருப்புக்குள் தூக்கி வீசப்பட்டு நெளிந்து கொண்டிருக்கும் பாம்புகளாகிய நமது கரிந்த துர்நாற்றத்தை நுகர்ந்து மகிழ்கிறது. நம்மைச் சுவாசிக்கக் கூட விடாமல் போட்டுஅடைத்து வைத்திருக்கும் சக்திகள், நமது மூச்சுத்திணறலில் சுகம் காணும் கொடிய அவலத்தை மௌனமாகப் பேசும் இக்கதை அளவான சொற்களில்— செறிவாக— சொற்சேதாரம் இன்றி ஒரு படிமக் கவிதைபோல கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

—**கோவை வாணன்.**

www.padippakam.com

# அழிவு

சுவரோடு சாய்ந்து, தலைவிரிகோலமாக உட்கார்ந்த படி விம்மிக் கொண்டிருந்தாள் அகலிகை. எப்படியும் அவள் என்னைக் கொன்று விடுவாளென்றுதான் தோன்றியது காரணங்கள்... சில பொதுவானவை, சில சிறப்பானவை, அவ்வளவு தான். அவற்றைப்பற்றி உங்களிடம் விளக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அப்படியும் அவைகளைத் தெரிந்து கொள்வதில் அக்கறை காட்டினால், நீங்கள் நாகரீகமற்றவர், அடுத்தவர் உடலுறவு கொள்ளும் போது கூச்சமின்றி திருட்டுத் தனமாகப் பார்த்து ரசிக்கும் ஆவல் கொண்டவர் என்று உங்களை என்னால் சொல்ல முடியும். தயவு செய்து மன்னியுங்கள். உங்களிடம் விவாதித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை.

கடவுளே, என்னை என் மனைவி கொலை செய்யப் போகிறாள்! சந்தேகமில்லை. கத்தியால் என் கழுத்தை அறுத்துக் கொல்லப் போகிறாள், அல்லது துல்லியமாக இதயத்தைப் பிளக்குமாறு எனது மார்பில் கத்தியை செருகப் போகிறாள். இந்த இரண்டில் முதலாவது வழியைத் தான் அவள் அதிகம் விரும்புவாள். ஏனெனில், அறுபட்ட கழுத்திலிருந்து பீய்ச்சியடிக்கும் இரத்தம் உடலுறவின் உச்ச சுகம் போல அவளை பரவசமடையச் செய்யும். ஏதாவது காரணத்தினால் இந்த வழியில் முடியாமல் போனால்தான் இரண்டாவது வழியைத் தேர்வு செய்வாள். ஆனால்

www.padippakam.com



நிச்சயம் வேறு வழியைப் பின்பற்ற மாட்டாள். தூங்கும் போது முகத்தில் தலையணையை வைத்து அழுத்தி அல்லது உணவில் விஷம் வைத்து என்னைக் கொலை செய்வது அவளுக்குச் சாத்தியம், சுலபம் எனினும் அவள் இந்த வழிகளைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. துண்டிக்கப்பட்ட கழுத்திலிருந்து பீறிட்டுத் தெறிக்கும் குருதி, ரத்தச் சகதியில் புரண்டு துடிக்கும் முண்டம், ஒரு புராதனச் சிற்பம் போல, இமைக்காத விழிகளுடன் உருண்டு கிடக்கிற தலை. வேடிக்கை பார்க்கத் திரண்டிருக்கிற மனிதக் கூட்டம், காற்றில் அலையும் வசைச் சொற்கள், விலங்கு பிணைக்கப்பட்ட குருதி தோய்ந்த கைகளுடன் நிமிர்ந்து நோக்கும் அகலிகையின் ஒளி சுடரும் விழிகள்... அற்புதம்... அற்புதம்.

என்னை சாப்பிட வருமாறு அழைத்தாள், அகலிகை அமைதியாக எழுந்து அவளைத் தொடர்ந்தேன் நான். சாப்பிடும் போது இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ள வில்லை. ஆனால் சாப்பிட்டு முடிக்கும் தறுவாயில் என் குழம்பிய முகமும், அதில் பொடித்திருந்த வியர்வைத் துளிகளும் அவளுடைய கவனத்திற்கு வந்திருக்க வேண்டும்.

"என்னாச்சு?"

நான் பதில் பேசவில்லை, அவளுடைய கொலைத் திட்டத்தை நான் புரிந்து கொண்டதை யூகித்து விடுவாளோ என்று அச்சமேற்பட்டது எனக்கு.

"உடம்பு சரியில்லையா?"

"அ... அஅ... ஆமாம்."

"என்ன?"

"லேசாக் காய்ச்சல், தலைவலி."

www.padippakam.com



என்னருகே வந்து நெற்றியில் கை வைத்தாள். பின்னர் ரொம்ப இயல்பாகச் செய்வது போல கையை கழுத்திற்குக் கொண்டு வந்தாள். புறங்கையால் உடம்பின் உஷ்ணத்தை அளவிடுபவள் போல பாவனை செய்தாள். இடது மார்பருகே விரல்களை மடக்கி வைத்துப் பார்த்தாள்.

எனக்கு இரத்த ஓட்டம் அதிகரித்தது. வெளியில் குதித்து விடும்போல் இதயம் அதீத வேகத்துடன் துடித்தது. சுவாசம் சிரமமானது...

சாப்பாட்டு மேஜையின் வலது கோடியில் பழம் நறுக்கும் கத்தி. அகலிகை இப்போது நின்று கொண்டிருக்கிற இடத்தில் நின்றபடியே எனது கழுத்தின் மேல் இருக்கிற இடக்கையை எடுக்காமலேயே, வலக்கையை நீட்டி அந்தக் கத்தியை எடுத்து சரேலென்று கண் இமைக்கும் நேரத்திற்குள் எனது குரல் வளையில் வீசிவிட முடியும் அல்லது நான் அமர்ந்திருக்கிற இந்த நாற்காலியில், திமிர முடியாதவாறு அழுத்திப் பிடித்துக் கொண்டு மிக லாவகமாக என் மார்புக்குள் கத்தியைச் செருகிவிட முடியும்.

''இருங்க, கொஞ்சம் சுடுதண்ணி வைக்கறேன், ஒரு ஆஸ்பிரின் போட்டுக்கிட்டாச் சரியாப் போகும்.''

ஆசுவாசமாய்ப் பெருமூச்சு விட்டேன் நான்.

இரவில் உறக்கமின்றி கொட்டக் கொட்ட விழித்துக் கிடந்தேன். அருகில் அகலிகை ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தாள். மெய்யாகவே ஆழ்ந்த உறக்கம், பாவனையில்லை, புணர்ச்சியின் களைப்பு.

பூனை போல் மெதுவாக எழுந்தேன். தலைமாட்டில் இருந்த டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டேன். அறையில் மெல்லிய நீலவொளி பாய்ச்சிய பெட்ரூம் விளக்

www.padippakam.com



கையும் அணைத்தேன். பாதம் தரையில் தேய்ந்து ஒலி யெழுப்பிவிடாதபடி, பெருவிரலால் நடந்து சமைய லறைக்கு வந்தேன்.

அந்தக் கத்தி சாப்பாட்டு மேஜையின் மேல் நான் முன்பு பார்த்த அதே இடத்தில்தான் இருந்தது. டார்ச் விளக்கின் ஒளியில் சோதித்துப் பார்த்தேன். ஆனால் நான் நினைத் திருந்தது போல் அந்தக் கத்தி கூர்மையானதன்று, அதன் மரக்கைப்பிடி தேய்ந்து கிடந்தது. பிளேடு கறுத்து முனை கூர்மை மழுங்கிப் போயிருந்தது.

டார்ச்சை பின் போட்டு மேஜை விளிம்பில் படுக்கைத் கிடையாய் வைத்துவிட்டு, இடதுகைப் பெருவிரலை மலர்த்தி நீட்டி, வலது கையால் கத்தியை வாகாகப் பிடித்துக் கொண்டு, விரல்மேல் கத்தியின் விளிம்பை வைத்துப் போதிய வலுவுடன் அழுத்தி இழுத்தேன். கத்தி பதிந்த இடத்தில் வலி இருந்தது. ஆனால் காயம் படவில்லை. கத்தி பதிந்ததன் அடையாளமாய் ஒரு கோடு பதிந்திருந்தது. ஒரு வாழைப் பழத்தை எடுத்து வந்து படுக்கைக் கிடையாய் மேசையின் மேல் வைத்து, பழத்தின் நடு உடலில் கத்தியை வைத்து அழுத்தினேன். அழுத்தம் தாங்காமல் கனிப் பகுதி தோலைப் பிளந்து கொண்டு வெளியில் பிதுங்கிற்று. பின்னர் ஒரு முட்டைக்கோஸ், ஒரு பீட்ரூட், ஒரு உருளைக்கிழங்கு ஆகியவற்றை எடுத்து வெட்டிப் பார்த்தேன். அவற்றை நறுக்குவதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது. இதைச் செய்யும்போது கத்தியின் பிளேடு மேசைப் பரப்பில்பட்டு சிறுசிறு சப்தங்களை உண்டாக்கியது. அப்போதெல்லாம் என் மனம் ஒரேயடியாய் பீதியுறத் தொடங்கியது. உடனே டார்ச்சை அணைத்துவிட்டு, இருளில் அசைவற்று நின்று கொண்டு, எங்கள் படுக்கையறையிலிருந்து, அகலிகை எழுந்து கொண்டதற்கான சப்தம் ஏதும் வருகிறதா வெனக் கண்காணித்துவிட்டு பின்னரே மறுபடி செயல்பட

www.padippakam.com



வேண்டியிருந்தது. நறுக்கப்பட்ட காய்கறிகளையும், பழத்தையும் ஜன்னலைத் திறந்து, வெளியே சாக்கடையில் விழுமாறு விட்டெறிந்துவிட்டு, கவனமாக அறை முழுவதிலும் சோதனையிட்டேன். கொலை செய்வதற்கேற்ற வேறு பளபளப்பான புதிய கத்தியை, அகலிகை வேறு எங்கேனும் மறைத்து வைத்திருக்கக் கூடுமில்லையா? பாத்திரங்கள் அடுக்கியுள்ள மர அலமாரி, பாத்திரங்களுக்குள், மளிகை சாமான்கள் உள்ள டின்கள், என்று எல்லா இடங்களையும் முடிந்தவரை கவனமாக சோதனையிட்டேன். ஆனால் அவசரம், அச்சம், பதட்டம்... என்னால் சரிவர சோதனையிட முடியவில்லை.

மனதின் கொந்தளிப்பை அழுத்திக் கொண்டு வந்து பழையபடி படுக்கையில் சப்தமின்றி படுத்துக் கொண்டேன்.

காலையில் அகலிகை என்னை எழுப்பி காபி சாப்பிட அழைத்தபோதுதான், நான் தூங்கியிருந்ததை என்னால் உணர முடிந்தது.

''இன்னும் தலைவலியிருக்குதா?''

''இல்லை''யென்றேன் அவசரமாக.

பல் விளக்கி, முகம் கழுவிக்கொண்டு, கண்ணாடி முன் வந்து நின்றபோது என் முகம் எனக்கே அச்சமூட்டியது. கண் ரெப்பைகள் வீங்கிக் கிடந்தன, விழிக்கோளத்தின் வெண் பரப்புகளில் ரத்தவேர்கள் கிளை பரப்பியிருந்தன. விழிகளைச் சுற்றி மெலிதான கருவளையம். எனது முகமாறுதலை அகலிகை கவனித்து விடக்கூடாதென்ற முன்னெச்சரிக்கை உணர்வுடன், எனது எல்லா நடவடிக்கைகளையும் கவனப்படுத்திக் கொண்டேன். சாப்பிடும்போது கூட அவளது பார்வையின் நேர்கோடு என் முகத்தின் மீது விழாதபடி பார்த்துக் கொண்டேன். நல்ல வேளை, இருவருக்குமே அலுவலகத்திற்குப் புறப்

www.padippakam.com



படுகிற அவசரம். அகலிகையை அவளுடைய அலுவலகத்தில் விட்டுவிட்டு எனது அலுவலகம் வந்தேன். அலுவலகத்தில் இருக்கவே பிடிக்கவில்லை. இடுகாட்டில் பிணம் தேடியலையும் ஓநாய்களின் ஓலம் மூளையின் சுவர்களில் மோதி, மோதி எதிரொலி எழுப்பிற்று. விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டு நேராக வீட்டிற்கு வந்தேன். கதவை உள்புறம் தாளிட்டுக் கொண்டு படுக்கையறைக்குள் வந்து, சாய்வு நாற்காலியில் விழுந்து, புகைபிடித்தவாறே யோசிக்கத் துவங்கினேன்.

அகலிகையின் முகத்தை மனத்திரையில் வைத்து ஆராய முயன்று கண்களை மூடினேன். அகலிகை போன்ற உருவம் வந்தது. ஆனால் முகம் இல்லை, முகத்துக்குப் பதில் ஒரு முக்கோணக் கண்ணாடிப் பட்டகம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அந்தக் கண்ணாடிப் பட்டகம் என்னைப் பார்த்துச் சிரித்தது. பேய்ச் சிரிப்பு. சிரித்துக் கொண்டிருக்கும்போதே புகையாய்க் கரைந்து மறைந்தாள். எங்கும் புகைவெள்ளம், சிகரெட்டின் புகை போன்ற வெண்புகை பந்து பந்தாய்ச் சுழன்றது. புகைப் படலத்தினூடே தோன்றிற்று அகலிகையின் நிர்வாண உருவம். கட்டுக்குலையாத கன்னிமையின் அழகு சொரூபம், பெண்மையின் பேரழகு. விழிகளைத் திறக்க முடியவில்லை என்னால். மனக் கண்களின் இமைகள் அசையாது நின்றன. அகலிகை என்னைப் பார்த்துச் சிரித்தாள், மனதைச் சாம்பலாக்கும் மாயச் சிரிப்பு. அவள் முன் முழந்தாளிட்டேன் நான்.

காற்றில் கைகளை நீட்டினாள் அகலிகை.

எங்கிருந்தோ வந்தது சூரியத்துண்டு போன்ற பளபளக்கும் கத்தி. குரூரமாய்ச் சிரித்துக் கொண்டே, அந்தக் கத்தியால் தனது செழிப்பான இளமைத் துடிப்பு மிகுந்த மார்புகளில் ஒன்றை அறுத்தெறிந்தாள். ஓயாத சிரிப்புடன் இன்னொரு

ப—11

www.padippakam.com



மார்பையும் அறுத்து வீசினாள். அறுபட்ட இடங்களி லிருந்து பீறிட்டுப் பாய்ந்தது பச்சை ரத்தம். அவளுடைய நடனத்தின் வேகம் அதிகரித்தது. செவிகளுக்குப் புல னாகாதவொரு மாய இசைக்கேற்றாற்போல தாளம் பிசகாது நடனமாடுகிறாள் போலும். நடன பாவனை யுடனேயே குனிந்து தொடைச் சதைகளைப் பிளந்து வெட்டியெடுத்தாள். பின்னர் புட்டச் சதைகள், புஜங்கள், முதுகு, வயிறு, கரண்டைக் கால்கள், பெண் குறியென தசை முழுவதையும் வெகு லாவகமாகச் சீவி எறிந்தாள். அவளுடைய உடல் முழுவதும் நெளிந்தாடின, ரத்த நாளங்கள். அவளுடைய நடனம் உச்சத்தை அடைந் திருந்தது. இடிபோல் அதிர்ந்தது சிரிப்பு...

சிகரெட் நெருப்பு விரலைச்சுட உணர்வு பெற்று விழி களைத் திறந்தேன். முகத்துக்கெதிரே கோடாய் உணர்ந்து மறைந்தது சிகரெட் புகை.

எழுந்து பாத்ரூமுக்குப் போய் முகம் கழுவிக்கொண்டு வந்து குளிர்பதனப் பெட்டியிலிருந்து குளிர்ந்த எலுமிச்சைச் சாற்றைப் பருகிவிட்டு வந்து கடிகாரத்தைப் பார்த்தேன். அகலிகை அலுவலகத்திலிருந்து திரும்ப குறைந்தபட்சம் அய்ந்து மணி நேரங்கள் இருக்கின்றன. அதற்குள் வீடு முழுவதையும் சோதனையிட்டு, அவள் மறைத்து வைத்துள்ள கத்தியைக் கண்டுபிடித்து விட வேண்டும்.

பரபரப்பின்றி நிதானமாக, கவனமாக எனது சோதனை யைத் தொடங்கினேன். முதலில் எங்கள் இருவருக்கும் பொதுவான எங்கள் படுக்கையறையைத்தான் சோதனை யிட்டேன். கட்டிலுக்கும் மெத்தைக்குமிடையே தேடி னேன். மெத்தைக்குள்ளோ தலையணைக்குள்ளோ சந்தேகத்துக்கிடமான முறையில் ஏதாவது அழுந்து கிறதா என்று தடவிப் பார்த்தேன். பீரோவின் உள் ளறைகள், மடித்து வைக்கப்பட்ட அவளுடைய உடைகள்,

www.padippakam.com



சூட்கேஸ்கள், பலவிதமான தோல் பைகள், என்று எல்லா இடங்களிலும் சோதனையிட்டேன். அதேபோல கூடத்திலும் என்னால் அந்தக் கத்தியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சமையல் கட்டு முன்பே சோதனையிடப் பட்டதுதான் எனினும் மீண்டும் ஒருமுறை நிதானமாகச் சோதனை செய்து ஏமாற்றமடைந்தேன். இரண்டரை மணி நேரத்திற்குள் இரண்டுமுறை சோதனை செய்தும் அந்தக் கத்தி கிடைக்காததால் நான் மிகவும் களைப் படைந்தேன். என் மீதே எனக்கு எரிச்சலேறி விட்டது.

மாலையில் அகலிகை திரும்பி வரும் வரையிலும் மனதின் இரைச்சிலையும் ஓலத்தையும் அடக்கும் பொருட்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந் தேன். உள்ளங்கால்கள் கன்றி, வலியினால் கால்கள் சோர்ந்து மடியத் தொடங்கின. அழைப்பு மணி ஒலித்த வுடன், அப்போதுதான் அலுவலகத்திலிருந்து திரும்பி யவன் போன்ற பாவனையுடன் கதவைத் திறந்து விட்டு திரும்பி அறைக்கு வந்தேன்.

''என்ன இன்னிக்கு ஆபீஸிலயிருந்து சீக்கிரம் வந்துட் டீங்க போலிருக்கு?''

என்னைப் பின் தொடர்ந்த அகலிகையின் மெல்லிய காலடி என்னைப் பீதியுறச் செய்தது. ஒருவேளை கத்தியை தன்னுடைய தோள் பையிலேயே வைத்திருக்கலா மில்லையா? அவளிடமிருந்து தப்பும் முனைப்புடன்தான் நடந்தேனாவென என்னால் நிச்சயமாகச் சொல்ல முடிய வில்லை. ஆனால் என்னைத் தடுத்து நிறுத்தியது சுவர். சட்டென்று அரைவட்டமடித்து, அவளை நோக்கித் திரும்பி சுவரோடு சாய்ந்து நின்றேன்.

முதிர்ந்த தேக்குமரம் போல் நின்றிருந்தாள் அகலிகை. சில கணங்கள் என்னை ஊடுருவிப் பாய்ந்தது அவள் பார்வை. நான் பீதியுடன் பின்பக்கமாக அடியெடுத்து வைக்க

www.padippakam.com



முனைந்து வலக்காலைத் தூக்கினேன். சுவரில் உரசிற்று குதிகால், ஓரக்கண்ணால் என் இட, வலப் புறங்களை சண்காணித்தேன். அகலிகை என்னை நோக்கி அடி யெடுத்து வைத்தாள். அவள் கத்தியை எடுத்து என்னை நோக்கி வீசும்போது, சட்டென்று கீழே சரிந்து, அவள் கால்களுக்கு இடையே புகுந்து, அவளைத் தாக்கிவிட்டுத் தப்பிவிட வேண்டும்.

அகலிகை என்னை நெருங்கிவந்து, சட்டென்று தன் புறங் கையை என் கழுத்திலும் மார்பிலும் பதித்தாள்.

''காய்ச்சல் எப்படியிருக்கு?''

''பர... பரவாயில்ல.''

நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக்கொண்டு, வார்த்தைகள் திணறின.

''காய்ச்சலடிக்கக் காணாம், ஆனா கண்ணு ரெண்டும் ஏன் இப்படி செவந்து கெடக்கு?''

''.................''

''சரி இருங்க, கொஞ்சம் வெந்நீர் போடறேன், இன்னொரு ஆஸ்பிரின் சாப்பிட்டா சரியாயிடும்...''

பையை ஹாங்கரில் மாட்டிவிட்டு, சமையல் கட்டுக்குப் போனாள் அகலிகை. நான் உடனே சுறுசுறுப்பானேன். அவசர அவசரமாக அவளுடைய பையைச் சோதனை யிட்டேன். ஆனால் என்ன துரதிருஷ்டம்! பையினுள்ளும் கத்தி ஒன்றும் இல்லை. எனது மூளைக்குள் குழப்பத்தின் தந்திகள் அதிர்ந்தன. பீதியூட்டும் நாராச ஓசை என்னைச் சுற்றிலும் படர்ந்தது. தொப்பென்று கட்டிலில் தலை குப்புற விழுந்தேன். மனதில் புயல் மூண்டது.

ஒவ்வொரு நாளும் வேகம் கொண்டு சுழன்று வீசிற்றென் மனப்புயல். அலுவலகத்தில் என்னுடன் பணிபுரியும் என்

www.padippakam.com



சக பணியாளர்கள், எனது மேல் அலுவலர்கள், எனக்குக் கீழே பணியாற்றுவோர், பேருந்துகளில் பயணம் செய்யும் போது எனக்கு அறிமுகமற்ற எனது சக பயணிகள், நடத்துனர்கள், ஓட்டுநர்கள், இன்னும் என்னைத் தவிர்த்த மொத்த மனிதக் கூட்டமும் என்னைக் கொலை செய்வதற் கென கத்தியை ஒளித்து வைத்துக் கொண்டுள்ளனரென் பதும் எனக்குப் புரியத் துவங்கியது. இவ்வளவு காலமும் இவர்களைப் புரிந்து கொள்ளாமல், இவர்களோடு நட்பு பாராட்ட முடிந்ததெப்படி? ஆனால், வாழ்வில் ஏதோ வொரு கட்டத்திலாவது இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்ளும் அதிர்ஷ்டம் வந்ததே எனக்கு...

அடிக்கடி நேரம் கிடைக்கும் போதெல்லாம் வீட்டுக்கு முன்னதாகவே வந்து (சில சமயம் விடுப்பு எடுத்துக் கொண்டும் வந்தேன்) வீட்டில் கத்தி உள்ளதா எனச் சோதனை போடத் துவங்கினேன். கத்தி கிடைக்கா விடினும் நான் மிகவும் விழிப்புடன் இருப்பது எனக்கு திருப்தியளித்தது. இந்த நாட்களில், குறிப்பிட்டுச் சொல்லும்படியான ஒரு சம்பவம் நடந்தது

எனது அலுவலக நண்பனொருவனின் அழைப்பிற்கிணங்கி அவனோடு ஒரு மாலையில் கடைத் தெருவுக்குச் செல்ல நேர்ந்தது. நகம் வெட்டி ஒன்று வாங்க வேண்டு மென்றான். அவனுடைய நகங்களைப் பார்த்து வியந்து போனேன் நான். ஒரு கத்தியின் முனையைப் போல கூர்மையாக, பளபளப்பாக இருந்தன அவனுடைய நகங்கள்.

பிளாட்பாரத்தில் ஒரு சிறு பெட்டிக்கடைக்கு வந்தோம். நான் அயர்ந்து போனேன். கூர்மையும் சூரியனின் பள பளப்பும் கொண்ட கவர்ச்சியான கத்திகள் மிக அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கத்திகள் விற்பனைக்காக உள்ளனவா என்று நான் கடைக்

www.padippakam.com



காரனைக் கேட்டேன். கடைக்காரன் சிரித்தபடியே ஆமாம் என்றான். அவனுடைய சிரிப்பு என்னை அவமானப்படுத்துவது போலிருக்கவே, கோபத்துடன் அவனது சிரிப்புக்கான காரணத்தைக் கேட்டேன்.

''கோபப்பட வேண்டாம் நீங்கள், கடையில் உள்ள பொருட்கள் எல்லாம் விற்பனைக்குத்தான் என்பதை நீங்கள் அறியாமலிருக்கக் கூடாது'' என்றான் சாந்தமாக.

''சரி, இந்தக் கத்தியை யார் வாங்குவார்கள்?''

''யார்? எல்லோரும்தான்...''

''எல்லோரும் என்றால், பெண்கள், குழந்தைகள் உட்படவா?''

கடைக்காரன் யோசனையோடு சொன்னான்,

''குழந்தைகள் வாங்கியதில்லை, பெண்கள்? இதுவரையிலும் ஒரே ஒரு பெண் மட்டுமே என்னிடம் ஒரு கத்தி வாங்கியிருக்கிறாள்...''

ஒரேயொரு பெண்ணா? மிதமிஞ்சிய பரபரப்புக்கும் கிளர்ச்சிக்குமுள்ளானேன் நான்.

''ஒரேயொரு பெண்ணா?''

''ஆமாம், ஒரேயொரு பெண்...'' என்றான் அழுத்தமான குரலில்.

''அவள் யார்? தெரியுமா உங்களுக்கு?''

என் நண்பனின் பார்வையில் குழப்பத்தின் பின்னல்கள். கடைக்காரன் உதட்டைப் பிதுக்கினான்.

''தெரியாதே, என்னுடைய வாடிக்கையாளர்களிடம் தேவையற்ற கேள்விகளைக் கேட்பதில்லையே நான். என்னை மன்னியுங்கள்...''

www.padippakam.com



"சரி, அந்தப் பெண்ணுக்கு என்ன வயதிருக்கும்?"

"முப்பதுக்குக் கிட்டத்தட்ட இருக்கும்..."

அடக் கடவுளே! அகலிகைக்கும் முப்பதுதானே ஆகப் போகிறது!

"அவள் சிகப்பு நிறமுடையவளா?"

"ஆமாம்..."

எனது இரத்த ஓட்டம் அதிகரித்து எனது முகம் வியர்க்கத் தொடங்கியது.

"அவள் நெற்றியில் மிளகு போன்ற பரு ஒன்று இருப்பதை கவனித்தீர்களா?"

"இல்லை, நீங்கள் யார்? எதற்காக இதையெல்லாம் கேட்கிறீர்கள்?"

"தயவு செய்து சொல்லுங்கள். அந்தப் பெண்ணைப் பற்றிய முழு விபரங்களும் எனக்குத் தேவை."

"மன்னியுங்கள்... மேற்கொண்டு எதையும் சொல்வது எனது வியாபார நேர்மைக்கு எதிரானது"

ஒரு கணம் பேசாதிருந்தேன்.

"சரி, அந்தப் பெண் வாங்கிச் சென்ற கத்தி எப்படிப் பட்டது? அதையாவது மறுக்காமல் சொல்லுங்கள்..."

கிட்டத்தட்ட மன்றாடினேன் நான். கடைக்காரன் மேலும் குழம்பிய பார்வையால் என்னை ஊடுருவினான்.

"எப்படிப்பட்டதென்றால்...? தயவு செய்து விளக்குங்கள்..."

"அந்தக் கத்தியால் ஒரு ஆணை, அதாவது அவள் கணவனைக் கொலை செய்துவிட முடியுமா அவளால்...?

www.padippakam.com



''முடியும்'' என்றான் அழுத்தந்திருந்தமாக.

''சரி போகலாம் வா...'' என்று என் தோளை அழுத்தினான் என் நண்பன். நான் அந்தக் கடை, கடைக்காரன், அந்தக் கடை அமைந்துள்ள தெரு, எல்லாவற்றையும் கவனமாக மனதில் இருத்திக் கொண்டு அவனைத் தொடர்ந்தேன்.

இருவருமாக ஒரு உணவு விடுதிக்கு வந்து யாருமற்ற ஒரு மேசையின் முன் அமர்ந்தோம்.

''சொல்லு...'' என்றான் நண்பன்.

''என்ன?''

''ஏன் அப்படி நடந்து கொண்டாய்? நீ மனநோயாளி அல்ல என்று நான் நினைக்கிறேன்...''

நான் பதில் பேசாமல் எழுந்து வாஷ் பேசினுக்குப் போய் முகம் கழுவிக்கொண்டு வந்தேன். கைக் குட்டையால் முகத்தை அழுத்தமாகத் துடைத்துக் கொண்டேன்.

''சொல்லு...'' என்றான் மறுபடியும்.

''என்ன?''

''கடைக்காரனிடம் ஏன் இப்படி நடந்து கொண்டாய்?'' அவனுடைய பார்வை எதையோ பரிசீலிக்க முயல்வது போல என்மீது படர்ந்தது. மேலிருந்து கீழ் வரை என்னை ஆராய்ந்துவிட்டு, என் விழிகளுக்குள் ஊடுருவி நின்றது, நான் எனது பார்வையை விலக்கிக் கொள்ள முனையாமல் அவனுடைய பார்வையின் நேர்க் கோட்டில் என் பார்வையை நிறுத்தினேன். நண்பனின் முகம் பீதியுற்று வெளுத்திருந்தது. அவனுடைய கேள்விக்கு பதில் சொல்லாமல் கேட்டேன்.

''உனக்கு யாரையாவது கொலை செய்யும் விருப்பமுண்டா?''

படிப்பகம்

www.padippakam.com



''இல்லை''யென்றான் திகிலுடன், அவன் பார்வை மருண்டு என்னிடமிருந்து விலகியது.

''ஏன் இப்படிக் கேட்கிறாய்?''

நான் அவனுடைய கேள்வியை அலட்சியப்படுத்தினேன்.

''சரி, உன்னை யாராவது கொலை செய்வார்களென்று எதிர்பார்க்கிறாயா?''

''இல்லை, ஏன்...? என்னை யார் கொலை செய்ய வேண்டும்?''

அவனுடைய உடல் நடுங்குவதைப் பார்த்தேன். ஒரு பூனையைப் போல அச்சத்துடன் சுற்றிலும் நோக்கினான்.

''யார் கொலை செய்யப் போகிறார்களா?'' எனக்கு அடக்க முடியாதவாறு சிரிப்பு வெடித்தது. அது பொது இடம் என்பதையும் மறந்து மேசையை படபடவென்று தட்டிக்கொண்டே விழுந்து விழுந்து சிரித்தேன். சிரிப்பின் எல்லை மீறலால் எனது விழிகளில் நீர் கட்டியதை உணர்ந்தேன்.

''தயவு செய்து சிரிப்பதை நிறுத்து...''

உடைந்து கரகரத்த குரலில் மன்றாடினான் நண்பன், சட்டென்று சிரிப்பதை நிறுத்தி விட்டு கடுமையான குரலில் கேட்டேன்,

''ஏன் அப்பாவிபோல் வேடம் போடுகிறாய்? பொய்யனே, நீ ஒரு போலி...''

''......''

''சொல்லு, உன் மனைவி உன்னைக் கொலை செய்ய மாட்டாளென்று நம்புகிறாயா நீ?''

அவன் அதிர்ச்சியுற்று, தடதடவென்று நாற்காலியை பின்னால் நகர்த்திவிட்டு விட்டு எழுந்து நின்றான்.

படிப்பகம்

www.padippakam.com



''என்ன சொல்கிறாய் நீ?'' என்றான் தணிந்த குரலில். என்னை நோக்கி ஆத்திரமாகவே கத்த விரும்பினான். எனினும் அது ஒரு பொது இடமென்பதும், பலரின் கவனமும் எங்கள் மேல் உள்ளதென்பதும் அவனது கவனத்திலிருந்து தப்பவில்லை போலும்.

''என்ன சொல்கிறாய் நீ... என் மனைவி என்னைக் கொல்வதற்கு காரணங்கள் எதுவுமில்லை...''

ஒரு சவக்களித்த புன்னகை அவனிடமிருந்து வந்தது. எங்களுக்கிடையே ஒரு சகஜமான 'விவாதம்' நடப்பதாகக் காட்டிக்கொள்ள முயற்சிப்பது தெரிந்தது, நான் நிதான மாகச் சொன்னேன்,

''ஒரு மனைவிக்கு, கணவனைக் கொல்லாமலிருப்ப தற்கு எவ்வளவு காரணங்கள் உள்ளனவோ. அவ்வளவு காரணங்கள் கணவனை கொலை செய்வ தற்கும் உள்ளன...''

எங்களுடைய இந்த உரையாடலுக்கப்புறம் அவன் என்னிடம் பழகுவதை அடியோடு விட்டுவிட்டான். நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை, எனக்கு அதற்கெல் லாம் நேரமுமிருக்கவில்லை. மறுநாளும் அலுவலகத்திற்கு விடுப்பு போட்டுவிட்டு, வீடு முழுவதும் அங்குலம் அங்குல மாக சோதனையிட்டேன். ஆனால் இம்முறையும் ஏமாற்றம்தான் எனக்காகக் காத்திருந்தது.

அன்று இரவு நாங்கள் புணர்ந்து கொண்டிருக்கும்போது, அகலிகை கிசுகிசுத்த குரலில் கேட்டாள்.

''நாளைக்கு என்ன விசேஷம்னு ஞாபகமிருக்கா உங்களுக்கு...?''

எனது அறிவின் இருட்குகையில் திடீரென ஒரு மின்னல் வெட்டு.

''என்ன விசேஷம்?''

''நிஜம்மா ஒங்களுக்குத் தெரியலியா?''

www.padippakam.com



ஓ, நான் காத்திருந்த நாள் நாளைதானா? அவளை இறுக அணைத்து வெறியோடு முத்தமிட்டேன்.

''சொல்லு, என்ன விசேஷம்?''

''நாளைக்கு நம்ம கல்யாண நாள், இதக்கூட மறந்துட்டீங்களா என்ன?''

''ஓ...!

அகலிகையே, என்ன அற்புதமான கலையுணர்வு உனக்கு! திருமண நாளில் கணவன் கொலை... ஹ... ஹ... ஹா! மனம் பரவசத்தால் துள்ளிற்று. பச்சை இரத்தம் கொப்பளித்து பெருக்கெடுக்கும் காட்சி... நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று அமைதியாகத் தூங்கினேன்.

ஆனால் விடியற்காலையில் எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. அவளிடம் கத்தி இல்லாத நிலையில் எப்படி என்னைக் கொலை செய்ய முடியும்? இந்தக் கேள்வி என்னுள் எழுந்ததும் மீண்டும் குழப்பத்தின் காலடிகளால் அதிர்ந்தது என் மனம். கூண்டில் சிறைப்பட்ட மிருகத்தின் உறுமல். சட்டென மனதின் திரையில் ஒளிர்ந்தது. நாங்கள் கடைத் தெருவில் பார்த்த வியாபாரியின் முகம்.

ஹா...!

ஓடு, ஓடு, உடனே ஓடிப்போய் வாங்கிவா, கொலை இச்சையைத் தூண்டும் ஒரு கத்தி மட்டும் அகலிகைக்கு கிடைத்து விட்டால்...! கௌதமனே மரணம் உன்னை ஆசையோடு அழைக்கிறது ஓடு...!

இந்த முறை கடைக்காரனும் நானும் மட்டுமே, எப்படியும் நான் அங்கு வரப்போவது தனக்குத் தெரியுமென்றும், எனக்காகவே ஒரு கத்தியைத் தேர்வு செய்து வைத்திருப்பதாகவும் சொல்லி மின்னலின் துண்டு போன்ற ஒரு கத்தியை எடுத்து நீட்டினான். அவன் கேட்டதைப் போல

படிப்பகம்

www.padippakam.com



இரண்டு மடங்கு தொகையை அவனுக்குக் கொடுத்தேன். பின்னர் அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு விடைபெறும் போது, தயக்கத்துடன் கேட்டான்.

"இந்தக் கத்தியைக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்களென நான் தெரிந்து கொள்ளலாமா?"

"தாராளமாக, என்னைக் கொலை செய்ய என் மனைவிக்கு ஒரு கத்தி தேவை"

கடைக்காரன் எனக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டான். மிகுந்த கவனத்துடன் வீட்டிற்குள் நுழைந்தேன். மறுபடியும் மனதிற்குள் பீதியின் தூறல்கள், ஆனால் முன்பு போலன்றி மனம் மிகவும் அமைதியாக இருந்தது. அகலிகை பாத்ரூமில் இருந்தாள். ஆஹா எவ்வளவு அருமையான சந்தர்ப்பம்! எப்படியும் குளித்து விட்டு உடை மாற்றுவதற்காக வந்துதானே தீரவேண்டும்! சப்தமின்றி எங்களுடைய படுக்கையறைக்குள் நுழைந்தேன். அவளுடைய உடைகள் உள்ள பீரோவைத் திறந்து அந்தக் கத்தியை எடுத்து, அதன் முனையை முத்தமிட்டு விட்டு, பீரோவின் நடுத்தட்டில், பீரோவைத் திறந்தவுடன் கண்ணில் படுமாறு வைத்துவிட்டு, பழையபடி பீரோவை சாத்திவிட்டு, பக்கத்திலேயே இருந்த எங்கள் கட்டிலுக்கு வந்து கண்களை மூடி, மல்லாந்து படுத்துக் கொண்டேன். வாழ்வின் இறுதி நிமிடங்கள்.

குளித்து முடித்து உடை மாற்றுவதற்காக வந்து பீரோவைத் திறந்ததும் அகலிகையின் பார்வையில் படப் போகிறது, கொலை வெறியைத் தூண்டும் கத்தி.

மனதின் சிந்தனைகளை அழித்து வெறுமையாக்க முயன்றேன்.

ஆனால் மனதின் அடியாழத்தில் சிந்தனையின் குமிழிகள் தடுமாறின. பேராசையின் ஊற்றுக் கண்கள் பொத்துக்

www.padippakam.com



கொண்டாற்போல உணர்வின் பீறிடல், தட்டுத் தடுமாறி எழுந்து, கடிவாளம் அறுத்து, குளம்புகள் தடதடக்க ஓடத் துவங்கியது சிந்தனைப்புரவி. என்ன அது?

எனது மூளையின் செல் சுவர்கள் அதிர்ந்தன. காலைச் சூரியனின் தகதகப்பு, இதழவிழும் ரோஜா மொக்கு, முதல் காதலியின் இழந்து போன முகம், ஒரு கவிதை இவற்றில் எதுவோ ஒன்று...

ஓ, உயிரின் கடைசி ஆசை!

நான் பிரார்த்தனை செய்ய விரும்புகிறேனா? பிரார்த் தனையா? பிரார்த்தனையென்றால் எதன் பொருட்டு? என் பொருட்டா? கடவுளின் பொருட்டா? கடவுள்... கடவுளை நம்புகிறவனா நான்? இதுவரையிலும் கடவுளை நிந்தித்ததுமில்லை, வழிபட்டதுமில்லை! என்ன துரதிருஷ்டம்! இப்படியொரு கேள்வியை எதிர்கொள்ளா ததும், அதற்கு தெளிவுகாண முடியாததுமான வாழ்க் கைக்கு என்னதான் பொருள்...?

இப்போதுகூட ஒரே துள்ளலில் எழுந்து, அந்தக் கத்தியை அப்புறப்படுத்திவிடலாம். என் ஆழ் மனதில் முகிழ்த் திருக்கும் ரோஜாவை அவளுக்குச் சூட்டலாம், அந்தக் கவிதையை அவளோடு பகிர்ந்து கொள்ளலாம், என் முதல் காதலியைப் பற்றியும்கூட அவளிடம் பேச முடியும் என்றுதான் நினைக்கிறேன்.

ஆனால் காலம் கடந்துவிட்டது,

அகலிகையின் காலடி ஓசையும் தொடர்ந்து கத்தி வைக்கப்பட்டுள்ள பீரோ திறக்கப்படும் கிறீச்சென்ற ஒலியும் வந்தது...

—1989.

www.padippakam.com



## ஒரு விமர்சனம்

'அழிவு'

எழுத்து இயற்கையான செயல்பாடாக உங்களுக்கு இருக்கிறது. லகு, மென்மை, திட்பம், கற்பனை இந்த வலுக்களுடன் கதை நன்றாகக் காலூன்றிச் செல்கிறது. கதாநாயகனின் உளவியல் ரீதியான மன அலசல் கலைப்பாங்காக அமைந்திருக்கிறது. தன் மனைவி பற்றி, இவ்வகையிலான பீதி மனதில் படர்ந்திருக்கும் நிலைக்குக் காரணமான வேர்கள் சுட்டப்பட்டிருந்தால்— கோடி காட்டப்பட்டிருந் தால்— மனநோயின் ஒரு வகை என்ற தளத்தைத் தாண்டி, வாழ்க்கையைப் பற்றிப் பிடித்துக் கொள்ள அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கலாம். கதையின் முடிவு திருப்தியைத் தரவில்லை. கதை முடிந்த பின் மறுபக்கத்தைப் புரட்டும் ஆவல் இருந்தது. ஏதோ ஒன்று பெரிதாக நிகழப் போகும்— கணவனே மனைவியைக் கொன்று விடுவது— யூகம் மனதில் தோன்றி இருந்தாலும் அது நிகழாததால் ஏற்பட்ட குறையல்ல. அதற்குப் பதிலாக மற்றொன்று நிகழ்ந்து நிறைவு தந்திருக்க முடியும், எதிர்பார்ப்புக்கு மேலாகக் கூட.

ஒரு வாசகனின் அபிப்ராயம் என்றே இந்த வரிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தொடர்ந்து எழுத வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன்.

நாகர்கோயில் —சுந்தர ராமசாமி.
27-4-92

www.padippakam.com

# பலி

அவள் மிகவும் பயந்து போனவளைப் போலத் தென்பட்டாள். முகம் கலங்கியிருந்தது. ஒரு பூனைக் குட்டியைப் போல சுவரோடு பதுங்கி, மட்கிய வியர்வை நெடி வீசும் அந்த அறையை மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவைத் தாளிட்டதும், அவளை இழுத்து இதழ்களைக் கவ்வி முரட்டுத்தனமாகச் சுவைத்தான். அவளது திரட்சியான மார்பகங்களைக் கசக்கினான்.

அவள் பெருமூச்செறிந்தாள்.

அவனது செயல்களுக்குத் தன் இசைவின்மையைத் தெரிவிப்பது போல நடுங்கினாள். எதிர்பார்த்தபடி ஒத்துழைக்காததாலோ என்னவோ அவன் அவளை விடுவித்தான். பேண்ட்டையும் சட்டையையும் கழட்டிவிட்டுக் கைலியைச் சுற்றிக் கொண்டான். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இயல்பாக ஏற்படும் எரிச்சலும் கோபமும் அவன் முகத்தில் அப்பட்டமாகத் தென்பட்டன.

கட்டிலில் ஒருக்களித்துச் சாய்ந்து அவளைப் பார்த்தபடி சிகரெட் பற்ற வைத்தான். அவள் இன்னும் அதே இடத்தில்தான் நின்று கொண்டிருந்தாள். அவனது நேர் பார்வையைத் தவிர்க்கும் பொருட்டுத் தலை குனிந்தது.

அவளைக் கூப்பிட முடியும்.

www.padippakam.com



இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டிய வார்த்தைகளையும், வார்த்தைகள் பயனளிக்காவிட்டால் என்ன செய்ய வேண்டுமென்பதையும் அவன் அறிவான்.

எண்ணங்களுக்கும் செயல்களுக்குமிடையேயான தவிர்க்க முடியாத இடைவெளியைக் கடப்பதற்கான அவகாசத்தை, புகைபிடிப்பதில் செலவிட முற்பட்டவனைப் போல ஒன்றன்பின் ஒன்றாக சிகரெட்டுகளைப் புகைத்துத் தீர்த்தான். இது தன்னுடைய யூகம்தான் என்கிறார், இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டிருப்பவர்.

பார்வை அசைவின்றி அவள் மேல் கவிந்திருந்தது. அந்த அறையினுள்ளேயும், அறைக்கு வெளியே தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நகரத் தெருக்களிலும் நிலவும் பீதியூட்டும் மௌனத்தை நினைவூட்டுவது போல டியூப்லைட் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த மௌனம் உடைக்கப்படும் பயங்கரமான தருணத்தை, பதட்டத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவன் இதை அவமதிப்பாகவும் எடுத்துக் கொண்டிருக்கக்கூடும். 'ஒரு பயங்கரமான ஊமை நாடகத்தின் பரிதாபகரமான பாத்திரப் படைப்புகளைப் போல, என்று வர்ணிக்கிறார் கதை சொல்பவர்.

விடுதித் தலைவி பொய் சொல்லவில்லை. அவள் இந்தத் தொழிலுக்குப் புதியவள். அங்கு கொண்டு வரப்பட்டு ஓரிரு நாட்களே ஆகியிருந்தனவெனச் சொன்னாள் விடுதித் தலைவி. தான் ஏமாற்றப்படவில்லையென்பது குறித்து அவனுக்குச் சந்தோஷமாகவே இருந்தது.

அனுபவப்பட்டவர்களாயிருந்தால், இது போன்ற சந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து வைத்திருப்பார்கள். வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டும், பேசியதைவிட அதிகமாக டிப்ஸ் பெறவும் வேண்டி, சில

www.padippakam.com



சமயங்களில் குமட்டலெடுக்கும் அளவுக்கும் கூட நடந்து கொள்வார்கள். அறைக்குள் நுழைந்தவுடனேயே உடைகளைக் களைந்து விடுவார்கள். அநேகமாக அந்த அறைக்குள் கழிக்கும் சிலமணி நேரங்களும் அம்மணமாகவே இருப்பார்கள். சிலர் அவனோடு சேர்ந்து குடிப்பார்கள். அனுபவப்பட்ட வாசகர்கள், தான் பொய் சொல்லவில்லையென்பதை உணர்ந்திருப்பார்கள் என்கிறார் கதை சொல்பவர்.

அவர்களில் எவருமே இவற்றிலெதையும் ஈடுபாட்டுடன் செய்யவில்லையென்பதை, இது போன்ற நடவடிக்கைகளைத் துவக்கிய கொஞ்ச காலத்திற்குள்ளாகவே அவன் புரிந்து கொண்டான். ஆனால் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதற்குப் போதிய காரணம் எதையும் அவனால் கண்டறிய முடியவில்லை.

இப்போதுகூட அவனுக்கு அவள்மீது பச்சாதாபமெதுவும் ஏற்பட்டு விடவில்லை. பலவந்தப்படுத்தாமல் அவளை இணங்கச் செய்வதைக் குறித்து யோசிக்க முற்பட்டான். குறைந்தபட்சம், கதை சொல்பவர் இப்படிக் கருதினார் என்று சொல்லலாம்.

அவள் நல்ல அழகி, சிவந்த நிறம். இந்தத் தொழிலுக்குப் பொருத்தமற்ற குழந்தை முகம். இன்னும் கூட கன்னிமையின் எழில் சிதைக்கப்பட்டு விடவில்லை. நீண்ட கால வாடிக்கையாளனான தனக்கு விடுதித் தலைவியின் ஊக்கப் பரிசு என்று நினைத்தான் அவன்.

அப்படியானால் அவன் அவளிடம் மிகவும் போராட வேண்டியிருக்கும். பலவந்தம் செய்ய நேரலாம். இது அவனுக்குப் பழக்கமில்லாதது. அப்படியே அவன் அதற்கெல்லாம் துணிந்தாலும் அவள் கத்திக் கூச்சலிடவோ, கதறி அழவோ எல்லாவற்றுக்கும் வாய்ப்பிருக்கிறது.

ப—12

www.padippakam.com



அவள் நின்றுகொண்டுள்ள நிலையைப் பார்த்தால் எந்தக் கணத்திலும் உடைந்து அழத் தயாராயிருப்பவ ளென்று உறுதியாகச் சொல்லமுடியும். அப்படி அழுதால் அது ஒரு நிராதரவான குழந்தையின் அழுகையைப் போல — கடவுளே, இதை எப்படி அவனால் சகித்துக் கொள்ள முடியும்?

திடீரென தான் மிக மோசமானதொரு நெருக்கடியில் சிக்கிக்கொண்டுவிட்டதாக நினைத்தான். இது போன்ற நெருக்கடிகளுக்கு அவன் பழக்கப்பட்டவனுமல்ல. உடனடியாக அவளை அங்கிருந்து வெளியேற்றி, பேசியபடி விடுதித் தலைவியிடம் திரும்பக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதன்மூலம், இதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியுமாவென யோசிக்க முற்பட்டான்.

ஆனால் அது அபத்தமான யோசனையென்பது எடுத்த எடுப்பிலேயே அவனுக்குப் புரிந்து போயிற்று. தான் இங்கு செய்யத்தவறியதை, செய்ய விரும்பாததை, வேறொரு வாடிக்கையாளன், தான் செய்திருக்கக் கூடியதைவிடவும் குரூரமாகச் செய்யத் துணியலாம், சந்தேகமின்றி அதுதான் நடக்கும். உடனடியாக, இந்த இரவின் எஞ்சிய நேரத்திற்குள்......

இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில், அவனைப் போன்ற ஒரு நபர் இப்படியெல்லாம் யோசிப்பது நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதாவென வாசகர்கள் கேட்கக் கூடும் என்று அனுமானிக்கிறார் கதை சொல்பவர். இதற்குத் திட்டவட்டமான விளக்கம் எதுவும் இல்லையென்றும், மனித மனங்களின் புதிரான உள்ளறைகளுக்குள் இதற்கு விடை கிடைக்கலாமென்றும் கிட்டத்தட்ட மழுப்பலாகப் பதில் சொல்கிறார், கதை சொல்பவர்.

www.padippakam.com



தான் அனுமதித்தால், உதவினால், தப்பி ஓடிவிட அவள் தயாராகவே இருப்பாளெனக் கருதினான் அவன். இதனால் அவனுக்குச் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். விடுதித் தலைவி கோபம் கொள்வாள், இழப்பீடாக ஒரு பெருந்தொகையைக் கேட்பாள். முன்பின் அறிமுகமில் லாத ஒருத்தியை முன்னிட்டு தன்னைச் சங்கடத்திற்குள் ளாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம்தானாவென யோசித்தான்.

விவரிக்க முடியாத துயரத்துடன், பொலிவிழந்த ஒரு புராதனச் சிற்பம்போலக் குன்றி நிற்கும் அவளைக் கண்டதும் அவன் பதட்டமுற்றான். எப்படிப்பட்ட சங்கடங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் சரி, அவளுக்கு உதவ வேண்டுமெனத் தீர்மானித்தான். அவளுக்கு இதை எப்படித் தெரிவிப்பதென அவனுக்குப் புரியவில்லை. அவளிடம் இதைப் பேசுவதற்குரிய பொருத்தமான வார்த்தைகள் இல்லாதது போல, ஒருவகையில் அவமானமாக இருந்தது அவனுக்கு.

அவளைக் கூப்பிட்டுக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து,

''இதோ பார் பெண்ணே, நீ ஒரு வேசியாய் வாழ்க்கை நடத்துவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. இங்கிருந்து தப்பி, எங்காவது போய்விடு'' என்று கேட்டுக் கொள்ளலாமா.

ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்தலாமா? அதற்கென்ன பதில் சொல் வாள் அவள்? சரி என்று அவனுக்கு நன்றி சொல்லிவிட்டுப போய் விடுவாளா? முற்றிலும் எதிர்பாராத இந்த உதவி யால், திக்கு முக்காடி, உணர்வுகள் தழுதழுக்க அழத் துவங்கி விடுவாளா? அல்லது......சட்டென வெடித்துச் சிரித்து விட்டால்?

கடவுளே...இதற்கு வாய்ப்பே இல்லையென்று சொல்லி விடமுடியாது.

படிப்பகம்

www.padippakam.com



எப்படியும் அவளிடம் ஒரு கதை இருக்கக்கூடும். காதலனை நம்பி, அல்லது சினிமா ஆசையால் வீட்டை விட்டு ஓடி வந்து என்பது போன்ற தற்காலத்துக்குரிய ஏதாவதொரு கதை.

அவன் அவளை அழைத்தான்.

அவள் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவனது குரலில் தென்பட்ட பச்சாதாபம் நம்ப முடியாததாயிருந்தது. அந்தக் குரல் தனது கற்பனையோவெனச் சந்தேகித்து நின்றாள். ஆனால் அவன், மறுபடியும் அழைத்தான். அவனருகில் கிடந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டி, அதில் வந்து உட்காரும்படி, ஒரு விருந்தாளியை உபசரிக்கும் தொனியில் சொன்னான். ஒரு குழந்தையைப் போல, மகிழ்ச்சி ததும்ப அவள் புன்னகைத்தாள். அந்த ஒரே அழைப்பில் அவனது மனதின் எல்லாப் பக்கங்களையும் படித்து அறிந்து கொண்டு விட்டவளைப் போல துள்ளலுடன், அவன் சுட்டிக் காட்டிய நாற்காலியினருகே வந்து நின்றாள்.

உன்னதமான பண்புடைய கதாபாத்திரங்களைப் படைப்பதற்கு, விரும்புகிறாரா என்று கேட்டதற்கு இல்லையென்று மறுக்கிறார் கதை சொல்பவர். நீங்களும் நானும் அந்தக் கதாபாத்திரங்களின் இடத்தில் இருந்தால், இப்படித்தான் அல்லது கிட்டத்தட்ட இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டிவரும். அது தவிர்க்க முடியாதது என்றும் சொல்கிறார்.

''உட்கார்...''

அவள் தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

''உட்கார்...'' என்று மன்றாடுவது போல மீண்டும் சொன்னான் அவன். அவளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கலாமாவென யோசித்தான். அவனிடம்

www.padippakam.com



கொஞ்சம் பிஸ்கட்டுகளும், சிப்ஸ் பாக்கெட்டும், பிளாஸ்க்கில் சிறிதளவு காபியும் இருப்பது நினைவுக்கு வந்தது. எழுந்து அலமாரியிலிருந்து அவற்றை எடுத்து அவளுக்குப் பரிமாறினான்.

''சாப்பிடு...''

அவள் மிரட்சியுடன் அவனைப் பார்த்தாள்.

''பரவாயில்லை... சாப்பிடு...''

இன்னொரு நாற்காலியை இழுத்துப்போட்டு ஒரு நண்பனைப் போல அவளெதிரில் உட்கார்ந்தான். அவளுடைய சங்கோஜத்தைப் போக்குவதற்காகத் தானும் ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கடித்தான்.

அவள் பயம் நீங்கி, கூச்சத்துடன் சாப்பிடத் தொடங்கினாள்.

அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. இனி அவனது உதவியை அவள் மறுக்கவே போவதில்லையெனக் கருதினான். தன்னால் இப்படிக் கூட நடந்து கொள்ள முடியுமாவென ஆச்சரியமடைந்தான். இப்போது அவள் மிகவும் வேகமாகச் சாப்பிடத் தொடங்கியிருந்தாள். மிகவும் பசியுடனிருக்கிறாளென்பது புரிந்தது.

அவன் அவள் பெயரைக் கேட்டான்.

அவள் சாப்பிட்டபடியே சொன்னாள்.

''நல்ல பெயர்''

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வழக்கமாகச் சொல்லப் படுவதை அவன் சொன்னான். பிறகு அவன் அவளுடைய ஊரைக் கேட்டான். அவள் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, கலக்கமாக அவனைப் பார்த்தாள். அவன் பதட்டமுற்றான். தங்கள் உரையாடல் இதற்குமேல் தொடராமல் போய் விடுமோவெனப் பயந்தான். தான் வெறுமனே

www.padippakam.com



அதைத் தெரிந்துகொள்ள விரும்பியதாகவும், அவளுக்கு விருப்பமில்லையென்றால் சொல்ல வேண்டாமென்றும். கிட்டத்தட்ட மன்னிப்புக் கோரும் குரலில் சொன்னான். ஆனால் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு அவள் சொல்லத்தான் செய்தாள். அவள் கண்களில் அவன் மீதான நம்பிக்கை ஒரு வெண்ணத்துப் பூச்சிபோல் பட படத்தது. பழுத்து உதிரும் ஒரு இலைபோல வார்த்தைகள் பதட்டமின்றி வந்தன.

"........................"

அவன் பயங்கரமாக அதிர்ச்சியடைந்தான். நம்பமுடிய வில்லை. பொய் சொல்கிறாளோவென்று நினைத்தான். ஆனால் அது பொய் சொல்கிற முகமில்லையென்று திட்ட வட்டமாகச் சொல்ல முடியும்.

அது அவனுடைய பூர்வீகக் கிராமம்.

அவனைச் சேர்ந்தவர்கள் இன்னும் அங்கே இருந்தார்கள். அந்த ஊரையும், அங்கே விட்டு விட்டு வந்த இழிவான கடந்த காலத்தையும் அவன் மறக்க முயன்று கொண்டிருந் தான் ஒரு பயங்கரக் கனவைப் போல அவளுடைய உருவம் கொண்டு திரும்பி வந்திருக்கிறது அது. முற்றிலும் எதிர்பாராத ஒரு குரூரமான தற்செயல் நிகழ்வு. நிலை குலைந்து தடுமாறினான். அவளுக்குக் கொஞ்சம் அல்லது வேண்டிய மட்டும் பணம் கொடுத்து அனுப்பி விடலாமா வென யோசித்தான்.

ஆனால் தன்னை மீறியதொரு பேராவலால் உந்தப்பட்டுப் பேசத் தொடங்கினான்.

"அங்கே..." தடுமாறினான், மூச்சுத் திணறிற்று.

"யாருடைய குடும்பத்தைச் சேர்ந்தவள் நீ?"

அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

www.padippakam.com



''சொல்... யாருடைய மகள் நீ?''

மிரட்டலைப் போலவும், வலியுறுத்தலைப் போலவும் தோன்றும்படியான குரலில் கேட்டான். ஒரு நீண்ட மௌனத்திற்கும், கசப்பான பெருமூச்சுக்கும் பின்னர் அவள் சொன்னாள்.

''.................................. என்று ஒருவர். அவர் என் பாட்டனார்.''

''அவரா?''

என்று கிட்டத்தட்டக் கத்தி விட்டான் அவன். அவன் மறந்துவிட முயன்று கொண்டிருந்த அவனது இழிவான கடந்த காலத்தின் சவக் குழியைத் தாக்கி உடைத்தது அந்தப் பெயர். 'அவரா — அவரா?' என்று ஒரு நோயாளியைப் போலவும், பைத்தியக்காரனைப் போலவும் புலம்பத் தொடங்கினான். இது நம்பவே முடியாத விஷயம். வாழ்வின் வக்கரித்த விளையாட்டு என்று இதைப்பற்றிச் சொல்கிறார், கதை சொல்பவர்.

ஒரு காலத்தில் செல்வத்தில் புரண்ட ஆசாரப் பிராமணக் குடும்பம் அது. கடவுளின் தூதரைப் போல, கிராமத்தின் இருண்ட தெருக்களில் உலா வந்தவர் அவர். அவன் தந்தையும் பாட்டனாரும் அந்த வீட்டின் மலத் தொட்டியைச் சுத்தம் செய்தவர்கள். தாயின் கருப்பையிலேயே மலத்தைச் சுவாசித்தவன் அவன். குடலைப் புரட்டும் மலநெடி அவர்களது தணிவான குடிசைகளுக்குள், அவர்களுக்கு முன்பாகவே பிறந்து, அவர்களைத் தாண்டியும் நீடித்திருக்கப் போவதைப் போல அவர்களது கனவுகளைக் கண்காணிக்கவும், அவற்றைக் கருவிலேயே நசுக்கி அழித்து விடவும் அதிகாரம் பெற்ற சர்வ வல்லமை படைத்த ஒற்றனைப் போல அகங்காரத்துடன் வீற்றிருந்தது. நினைவின் சவக்குழியிலிருந்து உயிர்ப்பிக்கப்

www.padippakam.com



பட்ட பிணமாய், அவனெதிரே உட்கார்ந்திருந்தாள் அவள்.

"........................ குடும்பம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?"

என்று தன் பாட்டனின் பெயரைச் சொல்லிக் கேட்டான் அவன். குரலில் வன்மம் தெறித்தது. கைகள் நடுங்கின. நெற்றியிலும் பிடரியிலும் வியர்வைத் துளிகள் பொடித்தன.

"இல்லை"

என்றாள் தணிந்த குரலில். அவளுடைய குழந்தைத் தன்மை கொண்ட பார்வை திடீரெனக் கூர்மைப்பட்டது. அவனது முன்னோர்களின் சாயலை அறிய முற்பட்டவளைப்போல, அவன் முகத்தைத் தீவிரமாய் ஆராய்ந்தாள்.

"உன் முன்னோர்களின் மலத்தொட்டியைச் சுத்தம் செய்தார் அவர்"

என்று ஆத்திரத்துடன் சொன்னான் அவன்.

"எனக்கு நினைவிருக்கிறது"

என்று பீதியுடன் முணுமுணுத்தாள் அவள். அவளது நினைவின் திரைச்சீலையில் காலத்தின் புகை படிந்த ஒரு மங்கலான முகம் தென்பட்டது.

"அவர் என் பாட்டனார்...!"

என்று மகிழ்ச்சியுடன் கத்தினான் அவன்.

"உங்கள் மலத் தொட்டியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார் அவர். அவரும், என் தகப்பனாரும், ஏன் எங்களுடைய எல்லா மூதாதையர்களுமே அதைத்தான் செய்து கொண்டிருந்தனர்."

www.padippakam.com



சவமாக வெளுத்திருந்தாள் அவள். பேசும் சக்தியை இழந்து விட்டது போல பேசுவதற்கு எதுவுமே இல்லாதது போல, சலனமற்ற விழிகளால் அவனைப் பார்த்தாள். ஆத்திரத்துடன் சிகரெட்டின் வெண்புகையை அவள் மேல் ஊதினான். ஒரு விசுவாசமான வேட்டை நாயைப் போல, அவளை முற்றுகையிட்டது சிகரெட் புகை. அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வந்தது போல மௌனம் அவர்களுக்கு நடுவில் சம்மனமிட்டு உட்கார்ந்து கொண்டது.

ஆனால் அந்த மௌனம் எந்தக் கணத்தில் உடைந்ததோ அந்தக் கணத்தை விளக்குவது கடினம். அங்கே நிலவிய சகிக்க முடியாத மௌனத்தில் விரிசலை ஏற்படுத்தியது அவர்களிருவரில் யாரென்பதை கதை சொல்பவருங்கூட அறிந்திருக்கவில்லை. இந்தக் கதையைச் சொல்ல நேர்ந்தது குறித்துக் கதை சொல்பவர் வருத்தம் தெரிவிக்கிறார். துல்லியமாகக் கவனிக்கத் தவறியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுடன், ஒரு கதை போல இதைச் சொல்லிக் கொண்டு போக முடியாததற்காகத் தன்னை எப்படிக் குறை சொல்ல முடியும் என்று பகைமையோடு கேட்கவும் செய்கிறார். ஆத்திரமான முகபாவமும், நடுங்கும் குரலுமாகக் கதையை அவர் தொடரும்போது, ஒரே சமயத்தில் அவர் மீது இரக்கமும், வெறுப்பும் ஏற்படுகிறது. ஆனால், சொல்ல வேண்டியவற்றில் மிகவும் அவசியமானவை யெனக் கருதத்தக்க எல்லாவற்றையும் அவர் சொல்லத் தான் செய்கிறார்.

> ''வேசியே, ஏன் இன்னும் உடைகளைக் களைந்து அம்மணமாகாமலிருக்கிறாய்?''

என்று அவளைப் பார்த்து, அவன் ஆத்திரத்துடன் கூச்சலிட்டதையும், அவள் அவனது ஆத்திரத்துக்குப்

www.padippakam.com



பணிந்து அல்லது வாயுக்கையாளனின் விருப்பம் எதுவானாலும் அதை நிறைவேற்றுவது ஒரு வேசியான தன் கடமையெனத் தீர்மானித்துத் தானே முன் வந்து, அல்லது விவரிக்க முடியாத வேறு காரணங்களால் உந்தப்பட்டு தனது எல்லா ஆடைகளையும் களைந்து நிர்வாணப் படுத்திக் கொண்டதையும் வாசகர்களுக்குச் சொல்லத் தவறவில்லை அவர்.

''நான் உன்னைப் புணர்வேன்...'' என்று குரல் நடுங்க அவன் சொன்னான்.

''நான் வேசி!''

என்று அழுத்தந் திருத்தமான குரலில் கூறிவிட்டு, பதட்டமின்றி நடந்து, கட்டிலில் மல்லாந்து படுத்தாள் அவள். ஒரு சவம்போல அவள் மேல் கவிழ்ந்தான் அவன். அவனது சுவாசத்தில் காமமில்லை. ஒரு இரைபோல பற்றியிழுத்து முரட்டுத்தனமாகத் தழுவினான்.

''நான் தீண்டத் தகாதவன்'' என்று அவள் செவிகளில் வன்மமாகக் கிசுகிசுத்தான்.

''நான் வேசி...''

''என் தந்தை உன் மலத்தை அள்ளினார்.''

''நான் வேசி...''

அவன் அவளுடைய வாய்க்குள் தன் உமிழ்நீரைத் துப்பி விட்டுச் சொன்னான்.

''நாங்கள் செத்த மாடுகளின் மாமிசத்தைப் புசிப்பவர்கள்.''

''நான் வேசி'' என்று அவனது உமிழ்நீரை விழுங்கினாள் அவள்.

அவளை உதறி எழுந்து ஆத்திரத்துடன் கத்தினான் அவன்.

படிப்பகம்

www.padippakam.com



''நீ பிரம்மனின் தலையில் பிறந்தவள்...''

''நான் வேசி...'' என்றாள் துவண்ட குரலில்.

தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான கேடயமாகவும், அவனைத் திருப்பித் தாக்குவதற்கான ஆயுதமாகவும் அவள், அந்த வார்த்தைகளை பிரயோகித்ததாகச் சொல்கிறார் கதை சொல்பவர்.

''நீ வேசி...'' என்று வெறுப்புடன் தரையில் காறித் துப்பினான் அவன். இந்த முறை அவள் பதிலளிக்கவில்லை. இதுவரையிலும் அவன் கேட்ட, இனிகேட்கப் போகிறதான எல்லாக் கேள்விகளுக்குமான பதில் — நான் வேசி.

அது ஏற்கெனவே சொல்லப்பட்டு விட்டது என்று சொல்ல விரும்புவது போல உயிரற்ற பார்வையால் அவனை வெறித்து நோக்கினாள்.

''பேசியது போல பத்து மடங்கு பணம் தருவேன் உனக்கு?''

அவள் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன.

''ஒரு வேளை நூறு மடங்கு... ஆமாம் நூறு மடங்கு பணம் தருவேன்...''

திட்டவட்டமாக அறிவித்து விட்டு, பீரோவைத் திறந்து, அதிலிருந்த பணம் முழுவதையும் வாரியெடுத்துக்கொண்டு வந்து அவள் மேல் வீசினான். பைத்தியக்காரனைப் போல, அறை முழுக்கத் தேடி, ஜன்னல் விளிம்புகளில், புத்தக அலமாரியின் இடுக்குகளில், சட்டைப் பைகளில், இறைந்து கிடந்த, சில்லறைக்காசுகளையும் விடாமல்...

www.padippakam.com



உண்மையில், இத்துடன் கதையை நிறுத்திவிட விரும்பிய தாகச் சொல்கிறார் கதை சொல்கிறவர். திடீரென நிறுத்தி விட்ட தாக விமர்சிக்கப்பட நேர்ந்தாலும், தொடர்ந்து சொல்வதன் மூலம், தனக்கு ஏற்படக்கூடிய ஆன்மீகப் பதட்டத்தைத் தவிர்க்க முடியும் என்று சொல்கிறார். ஆனால் அவர் வேறு விதமாகவும் யோசித்திருக்கக்கூடும். ஒருவேளை போதிய மனத்துணிவு அவருக்கு இல்லாதிருக்க லாம். ஆபாசமான, மிருகத்தனமான, வக்கரித்த கற்பனை என்றோ, நமது மரபான பண்பாட்டிற்கும் மனித நேயச் சிந்தனைகளுக்கும் எதிரானதென்றோ, விமர்சகர்களால் ஈவிரக்கமின்றித் தாக்கப்படலாமென அவர் அஞ்சக் கூடும், அல்லது அவருக்கே கூட கதையில் எஞ்சிய பகுதி ஏற்றுக்கொள்ள முடியாததாயிருந்திருக்கலாம். குற்றச் சாட்டுகளுக்கும் அவமதிப்புக்கும் உள்ளான ஒரு கைதியின் வாக்கு மூலம் போல, தணிந்த குரலில் சொல்ல முயன்றார் கதை சொல்பவர்.

எதார்த்தத்திலோ, கதைகளிலோ, உலகின் எங்கேனும் ஒரு பகுதியில், அல்லது ஏறத்தாழ எல்லாப் பகுதிகளிலும், இதையொத்த அல்லது இதைவிடவும் மோசமான நடப்பு களும் கற்பனைகளும் எப்போதுமே இருந்து வந்திருக் கின்றன என்று தனது வாசகருக்குக் காட்ட விரும்பிய வரைப் போல, சில பத்திரிக்கைச் செய்திகளையும் போருக்குப் பிந்திய ஜெர்மானிய மற்றும் பிரெஞ்சு நாவல் களையும், லத்தின் அமெரிக்கச் சிறுகதைகளையும், ஆப்பிரிக்கக் கவிதைகளையும், சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்ட புகழ்பெற்ற இயக்குநர்களின் சில திரைப்படங்களையும் ஏன் ரோமானிய நாடகங்களையும், இந்தியப் புராணங்களையும்கூட, மேற்கோள்களாகக் காட்டி, இவற்றினூடாகவே, கதையின் எஞ்சிய பகுதியைச் சொல்கிறார், கதை சொல்பவர்.

www.padippakam.com



உண்மையில் வியக்கத்தக்க சமயோசிதம் இது. அவர் குறிப்பிட்ட ஆன்மீகப் பதட்டத்திலிருந்து கதை சொல்பவர் மட்டுமல்ல வாசகர்களுமே தப்பித்துக் கொள்வதற்கு இது உதவக்கூடும்.

கதைகளிலும், திரைப்படங்களிலும் சித்தரிக்கப்பட்டிருப்பது போல்தான், எல்லாமே அசுர வேகத்தில் நடைபெற்றன. அவளுடைய கைகால்களைக் கட்டிலோடு பிணைத்துக் கட்டி, வாயில் துணிப்பந்தை அடைத்து, அவனெதிரே நாற்காலியில் நிர்வாணமாக உட்கார்ந்தபடி சிகரெட்டைக் கொளுத்தி, சிகரெட்டின் நுனியில் கனல் திரண்டு, ஒரு மிருகத்தின் பழி நிறைந்த கண்களின் சாயலைப் பெறும்வரை புகையை ஆழ்ந்து உள்ளிழுத்து, நிதானமாக அவளுடைய நிர்வாணத்தின் சாத்தியப்பட்ட எல்லா இடங்களிலும், அழுத்தி எடுத்ததுமான அவனுடைய எல்லாச் செயல்களும், தாங்க முடியாத சித்ரவதையின் விளைவாக அவள் துடித்ததும், நெஞ்சுக்கூட்டுக்குள் நசுங்கி உயிரிழந்து போன அவளுடைய கதறல்களும்— அவர் மேற்கோள்களாகக் குறிப்பிட்ட கதைகளையும், திரைப்படக் காட்சிகளையும் துல்லியமாக ஒத்திருந்தன.

கதை சொல்பவர் விரும்பியிருந்தால், இந்தக் கட்டத்தில் கதையை முடித்திருக்க முடியும். ஆனால் சொல்ல வேண்டியவை இன்னும் நிறைய இருக்கின்றன என்கிறார். இது தனது சித்தத்திற்குட்பட்ட விஷயமல்ல. முற்றிலும் சுயேச்சையான முடிவை நோக்கிக் கதை தயக்கத்துடன் நடந்து செல்கிறது, எனவே வாசகர்கள் குறுக்கிடாதிருக்குமாறு கேட்டுக் கொள்கிறார்.

> ''உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை, ஊருக்கு வெளியே மலச் சகதியில், நரகத்தின் முன் மாதிரி போலிருக்கும் அந்த இடம்...''

www.padippakam.com



பீதியூட்டும் ஒரு கனவை நினைவுபடுத்திக் கொள்வது போல பதட்டம் நிறைந்த குரலில் சொல்லத் துவங்கி னான். அவள் கண்கள் எதையோ சொல்ல விரும்பின.

''அங்குதான் நாங்கள் வாழ்ந்தோம்...''

ஆத்திரத்துடன் புகையைத் துப்பிவிட்டுச் சொன்னான்.

''பன்றிகளைப் போல... எங்கள் மூச்சுக் காற்றுக் கூடத் தீண்டத் தகாததாய்க் கருதப்பட்டது. காட்டு மிராண்டித்தனமான காலங்களைப் பற்றி என் தாத்தா சொல்லியிருக்கிறார். கழுத்தில் மண் கலயங் களைத் தொங்க விட்டுக் கொண்டு நடந்தோம். செத்தமாடுகளின் இறைச்சியை உண்ணும் எங்கள் உமிழ்நீரால் இந்த பூமி தீட்டுப்பட்டு விடுமென்று உங்கள் சாஸ்திரங்கள் சொன்னதால், அந்த அடிமைச் சின்னங்களை பிச்சைப் பாத்திரங்களைப் போல சுமந்து திரிந்தோம்...''

அவள் விழிகளில் நெருப்பின் சித்ரவதையைத் தாண்டிய ஒரு கழிவிரக்கம் தென்பட்டது.

''சாஸ்திரங்கள் உங்கள் மூதாதையர்களால் எழுதப் பட்டவை...'' என்று வன்மத்துடன், அவள் காது களில் கிசுகிசுத்தான்.

''நாங்கள் உங்கள் வயல்களில் மாடுகளைப் போல உழைக்கவும், உங்கள் மலத்தொட்டிகளைச் சுத்தம் செய்யவும் படைக்கப்பட்டவர்கள்... ஹா... உங் களால் எச்சில் படுத்தப்பட்ட பழைய சோற்றைக் கொண்டு எங்கள் பசியைப் போக்கிக் கொள்ள வேண்டுமாம்... உங்களது பழைய கந்தல்களால்

www.padippakam.com



எங்கள் நிர்வாணத்தை மறைத்துக் கொள்ள வேண்டுமாம்... தாசிகளைப் போல எங்கள் பெண்கள் அரை நிர்வாணத்துடன் அலைகிறார்கள்... இன்னும் கூட...''

அவன் நடுங்கினான். அவன் மனதின் அடியாழத்தில் கண்ணீர் தத்தளித்தது. கண்ணீரில் நனைந்த அந்த வார்த்தைகளால் அவள் துயரமடைந்தாள்.

''வேசியின் புத்திரர்களென்று எங்களுக்குப் பெயர் சூட்டினார்கள்... உங்கள் ஆடவர்களின் முன்னே திறந்த மார்பகங்களுடன் எங்கள் பெண்கள் நின்றார்கள்...''

அவள் அதிர்ச்சியுற்றவளைப் போலக் கத்த விரும்பினாள். அவளது விழிகளிலிருந்து கண்ணீர் தெறித்துச் சிதறிற்று.

''இதையெல்லாம் ஏற்க மறுக்கும் ஒவ்வொரு முறையும் நாங்கள் தாக்கப்படுகிறோம்...''

அறையின் சுவர்கள் அவனோடு சேர்ந்து கூச்சலிட்டன. அவன் சொல்பவற்றை ஆமோதிப்பது போல எதிரொலி எழுப்பின.

''உயர்ந்த ஆன்மாக்களென்று உங்களைச் சொல்லிக் கொள்கிறீர்களே... பசுவுக்கும், புறாவுக்கும் நீதி வழங்கியதாகத் தம்பட்டமடித்துக் கொள்கிறீர்களே... எங்கள் குழந்தைகள் கிணற்றில் குதித்தபோது மின்சாரம் பாய்ச்சிக் கொன்றீர்களே...? கால்படி நெல்மணி அதிகம் கேட்டதற்காக, எங்கள் பெண்களையும், குழந்தைகளையும், இளைஞர்களையும் நெருப்பிலிட்டுப் பொசுக்கினீர்களே...? எங்கள்

www.padippakam.com



மக்களின் கண்களைக் குருடாக்கினீர்களே...? இதற்கெல்லாம் என்ன பிராயச்சித்தம்? எங்கே நீதி?''

ஆனால் கைமாறு செய்வது போல்தான் அவள் அழுதாள். அவனுக்கும் அவனது மூதாதையர்களுக்கும், தனது பாட்டனாரும், மூதாதையர்களும் இழைத்த கொடுமைகளுக்காக அழுதாள். எல்லாவற்றுக்குமான பிராயச்சித்தம் போல அவள் மேனி முழுவதும் கருகிப் போயிருந்தது, அவனுக்குத் தன்னைப் பலியிட்டுக் கொண்டவளைப் போல எதிர்ப்பின்றி...

ஆனால் இதற்குமேல் சொல்ல மறுத்துவிடுகிறார் கதை சொல்பவர். வேடிக்கையான கதையொன்றைச் சொல்லி முடித்து விட்டது போல புன்னகைத்தார். கதை கேட்ட குழந்தைகளிடம் புதிர் போடுவது போல தனது வாசகரிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறார்... வேடிக்கையான ஆள்!

அதாவது கதையின் முடிவு எப்படியிருக்குமென யூகிக்கச் சொல்கிறார். அல்லது எந்த மாதிரியான முடிவை நீங்கள் விரும்புகிறீர்கள், என்று கேட்கிறார்.

சில சாத்தியப்பாடுகளை முன் வைக்கிறார்.

அவன், இறுதியாக, அவளைக் கொன்று விடுகிறான். அல்லது சித்ரவதையின் உச்சத்தாலோ மிதமிஞ்சிய மன அழுத்தத்தாலோ அவள் இயல்பாகவே செத்துப் போய் விடுதல். இந்த இரண்டையுமே விரும்பாத பட்சத்தில் அவன் ஏதாவது ஒரு கட்டத்தில், அவளது கண்ணீரின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு தன் குற்றத்தை உணர்ந்து அவளை விடுவித்தல் திரைப்படங்களிலும், நாவல்களிலும் வருவது போல அவனது செயலுக்குப் பிராயச்

www.padippakam.com



சித்தமாக அவளைத் தானே மணம்புரிந்து கொள்ளப் போவதாய் அறிவித்து வாசகரை நெகிழச் செய்தல், மர்ம நாவல்களில் வருவது போல போலீஸ் அல்லது ஏதாவது சமூக சேவை உறுப்பினர்கள் கதவை உடைத்து உள்ளே நுழைந்து, ஆபத்தான நிலையிலிருந்த அவளைக் கண்டுபிடித்து...

சிரிக்கிறீர்களே...!

கதைச் சொல்பவருக்குக்கூட இதெல்லாம் நகைப்பூட்டக் கூடிய, சிறுபிள்ளைத்தனமான வர்தங்களாகத்தான் தோன்றுகின்றனவாம். இருந்தபோதிலும் இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் அதுபோலவெல்லாம் தவிர்க்கவியலாமல்...

ஆக, கதை சொல்பவரைப் பொறுத்தவரை எல்லாக் கதைகளையும் போல இதுவும் ஒரு கதை, இல்லையா?

□ —1993.



படிப்பகம்

www.padippakam.com



## ஒரு விமர்சனம்

**'பலி'**

தொழிலுக்குப் புதிதாக வந்த ஒரு வேசிக்கும் ஒரு வாடிக்கையாளனுக்குமிடையேயான உணர்ச்சிப் போராட்டத்தையும் தயக்கத்தையும் சித்ரிப்பது போலத் துவங்கும் இக்கதை, வாசகனை ஏமாற்றி, இந்திய வரலாற்றின் மிகக் கொடுமையான இரண்டு வித அடிமைத்தனங்களைப் பற்றி மதிப்பீடு செய்யக் கோருகிறது. அவை— தீண்டாமை, பெண்ணடிமைத் தனம்!

'ஒரு பூனைக்குட்டியைப் போல', 'ஒரு நிராதரவான குழந்தையைப் போல,' 'பொலிவிழந்த ஒரு புராதனச் சிற்பம் போன்ற' ஒரு பார்ப்பனப் பெண்ணை, 'தாயின் கருப்பையிலேயே மலத்தைச் சுவாசித்த', 'செத்த மாடுகளின் இறைச்சியை உண்ணும் பன்றி களைப்போல வாழும்', 'வேசியின் புத்திரர்களென்று' வசைபாடப்படும் தீண்டத்தகாதவன் ஒருவன் பலி (பழி) வாங்குவதாக இக்கதை அமைக்கப்பட்டுள்ள தால், இதில் வரும் நாயகன்/நாயகி பற்றி வெறுமனே கலைத்தளத்தில் மட்டும் நின்றுகொண்டு, கட்சி கட்ட முடியாமல் போய் விடுகிறது.

ஏனெனில், கதையின் எல்லை, கதைக்குள்ளே முடிவ தில்லை. அதுதான் இக்கதையிலுள்ள மிகப் பெரும் சிக்கல்; அதுவே இதன் பலமும் ஆகும்.

நல்லவனும் தீயவனும் மோதிக் கொண்டாலோ, பலவானும் பலஹீனனும் மோதிக் கொண்டாலோ, நாம் சார்பு நிலை எடுக்க முடியும். நல்லவனும்

படிப்பகம்

www.padippakam.com



நல்லவனும் மோதிக் கொள்வது,பலவீனமான இருவர் மோதிக் கொள்வது— மிகப் பெரும் அவலத்தை உண்டாக்கிவிடுகிறது. உலகத் துன்பியல் இலக்கியங் களைப் படிப்பவர்கள், இந்த அம்சத்தைக் கவனிக்கத் தவறியிருக்க மாட்டார்கள்.

அப்படிப்பட்ட ஓர் உயிர் முடிச்சை இப்படைப் பாசிரியர் பிடித்திருக்கிறார்.

தலித் மற்றும் பெண் எனும் இரண்டு பலஹீனர்கள் இங்கே மோதிக் கொள்வது, வெறும் அவலத்தை மட்டுமல்ல, நம் கால வரலாற்றின் இரண்டு இருட் பிரதேசங்களை நம் மனச்சாட்சியின் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறது.

இதில்வரும் தலித், ஒரு பார்ப்பன ஆணைப் பலிவாங்குவது போல் வந்திருந்தால், ஒருவேளை நமக்கு இவ்வளவு மனஇம்சை இல்லாமல் போயிருக்கக் கூடும். ஆனால், பழிவாங்கப் படுபவள், ஒரு பெண்! ஆதிக்கக் கலாச்சாரத்தின் பலவீனமான, ஒரு பாவமும் அறியாத ஒரு பிரதிநிதி! இங்கு அவள் பெண் என்பதாலேயே, குரூரமாகப் பழிவாங்கப்படுகிறாள். எனவேதான், நம்மால் சார்புநிலை எடுக்க முடியா மல் தத்தளிக்க வேண்டியுள்ளது.

வெறும் கவித்துவ நீதி மட்டும் (Poetic justice) அல்ல, சாதி நீதியும் இங்கே செயல்படுவதால், ஆன்மீகப் பதட்டங் கொள்ள நேரிடுகிறது.

எந்த வர்ணாசிரமம்,தீண்டத்தகாதவர்களை உருவாக் கியதோ, அதே வர்ணாசிரமம், பெண்ணடிமைத் தனத்தையும் ஊக்குவித்தது. தன் சாதிக்கு வெளியே தீண்டாமையை அனுசரித்த அது, தன் சாதிக்கு

www.padippakam.com



உள்ளேயும் வெளியேயும் பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்தியது. ஆகவேதான், இக்கதைப் போராட்டத்தில் எதிரி வர்க்கத்தின் மீதான வன்முறை பற்றி மிகவும் தர்க்கஞ் செய்ய வேண்டியுள்ளது.

'முற்றிலும் சுயேச்சையான முடிவு நோக்கிக் கதை தயக்கத்துடன் நடந்து செல்கிறது' எனக் கட்டியங் காரன் இங்கே சொன்னாலும், அந்த முடிவு ஏகோபித்த முடிவாக இருக்கவில்லை. சில சாத்தியப் பாடுகளைத்தான் அது முன்வைக்க முடிகிறது. எனவே, ஒவ்வொருவரும் தாம் சார்ந்துள்ள கருத்துலகத் தன்மைக்கேற்ப இங்கே நீதிகளை வழங்கிக் கொள்ளலாம்.

எப்படியும், 'பலி', தமிழ்ச் சிறுகதை உலகத்திற்கு மட்டுமல்ல— தலித் இலக்கியத்திற்குங் கூட ஒரு புதிய வரவுதான். இக்கதையின் சிறப்பே— எல்லா உயரிய படைப்புகளையும் போல— எழுதப்பட்டதைவிட, இது உணர்த்துவது அதிகம் என்பதுதான்! அதற்காக இக்கதாசிரியர் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஜெயகாந்தனுக்கு ஓர் 'அக்னிப் பிரவேசம்' என்றால், தேவிபாரதிக்கு ஒரு பலி.

— **குறிஞ்சி.**

MC . LOGANADAN
RINGPARKEN 8 . ST TH
7500 HOLSTEBRO

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கலை எதார்த்தத்திலிருந்து தன்னை முற்றாகத் துண்டித்துக் கொள்ள முடியாது. எதார்த்தத்தை உடைத்து, அதன் இடிபாடுகளுக்குள் தன்னை நிறுவிக் கொள்வது கலை. நெடுங்கால வரலாற்றுப் போக்கில் மனிதனுக்குள் வளர்ந்து வந்துள்ள ஆற்றல் - மனிதனை மனிதனாக்கும் ஆற்றல், கலை. ஒரு ஆற்றல்மிக்க கலைஞனாக உருவாகி வருகிறார் தேவிபாரதி. ஒரு பத்தாண்டுகாலப் பயணத்தில் இறுதியாய் தேவிபாரதி தனக்குள் ஒரு கலைஞனைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த வரலாற்றுக்கு இந்தத் தொகுதி ஒரு சான்று. கலைஞனைத் தனக்குள் கண்டறிந்த வரலாற்றின் தொடக்கமாய் எதார்த்தவாதக் கதைகள் நிற்கின்றன. சுண்ணாம்பையும் மணலையும் சேர்த்து உயர் வெப்ப நிலையில் கண்ணாடியாக்குகிற கலையை, இத்தொகுப்பின் மூலம் நம் முன் வைக்கிறார் தேவிபாரதி.

-- முன்னுரையில் ஞானி.

படிப்பகம்